# உதயன்

பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 28 கதிர்: 364 வள்ளுவர் ஆண்டு: 2044 கார்த்திகை 10, செவ்வாய் 26.11.2013




மழையுடன் கூடிய காலநிலை நிலவும்




பக்கம் 06
மீண்டும் வருகின்றது புயல்



பக்கம் 07
சீனா - ஜப்பான் முறுகல்



பக்கம் 22
பள்ளிமுனை லூசியா சம்பியன்



பக்கம் 24
20/20 உலகக் கிண்ணப் போட்டி; அயர்லாந்து தகுதி


# மாகாண சபையுடன் மோதுகிறார் ஆளுநர்

## வடக்கு ஆளணி மீளாய்வுக் கூட்டத்தை தன்னிச்சையாகக் கூட்டினார்

யாழ்ப்பாணம், நவம்பர் 26
புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபையுடன் இணங்கிச் செயற்படாமல் மாகாண சபை விடயங்களில் ஆளுநர் தன்னிச்சையான முடிவுகளை மேற்கொண்டு வருவதால் அவருக்கும் மாகாண சபைக்கும் இடையேயான முறுகல் நிலை நேற்று வெளிப்படையாக வெடித்தது.
வடக்கு மாகாண முதல்வருக்கோ, அமைச்சர்களுக்கோ தெரியப்படுத்தாமல் மாகாண சபையின் ஆளணி மீளாய்வுக் கூட்டத்தை நேற்று யாழ்ப்பாணத்தில் தனது தலைமையில் கூட்டினார் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி.
அதுமட்டுமல்லாமல் வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து, வர்த்தக மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சரான டெனீஸ்வரனின் செயலாளரை அமைச்சருக்குத் தெரியாமலே இடம்மாற்றம் செய்துள்ளார்.
ஆளுநரின் இந்தச் செயற்பாடுகளின் மூலம் அவர் மாகாண சபை நிர்வாகத்தை குழப்பியடிக்க தயாராகி விட்டார் என்பதை வெளிப்படுத்துவதாகவும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை ஓரங்கட்டிச் செயற்பட அவர் தயாராகி வருவதாகவும் வடக்கு மாகாண



21 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர் 15 பேர் நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், நவ.26
அத்துமீறி இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து மீன் பிடித்தனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுக் கடந்த ஒரு மாதகாலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 15 பேரும் ஊர்காவற்றுறை நீதிமன்றினால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.
குறித்த மீனவர்கள் பயணித்த நான்கு படகுகளையும் தடுத்து வைத்துள்ள நீதிமன்றம், அவற்றை உரிமைகோரப் படகு உரிமையாளர்களை மன்றில் முன்னிலைப்படுத்துமாறும் உத்திரவிட்டுள்ளது.
ஜனதாப்பட்டினத்தைச் சேர்ந்த 15 இந்தியர்களும் எழுவைதீவு கடற்பகுதியை அண்மித்து கடந்த மாதம் 14 ஆம்

21 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். நீதிமன்றின் முன்னால் பெண்கள் நேற்றுப் போராட்டம்

### குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்கக் கோரி




யாழ்ப்பாணம், நவ.26
யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதி முன்பாகப் பெண்கள் ஒன்று சேர்ந்து நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

21 ஆம் பக்கம் பார்க்க

## மாகாண சபையின் அதிகாரம் ஆளுநருக்கா? முதல்வருக்கா?

### தீர்மானிக்க வேண்டிய நேரம் வந்து விட்டது என்கிறது கூட்டமைப்பு



கொழும்பு, நவ. 26
"மாகாணசபைக்கு வழங்கும் அதிகாரங்கள் என்பது ஜனாதி பதி தமிழ் மக்களைப் பாவம் பார்த்துப் போடும் பிச்சையல்ல. பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மத்திக்கு என்ன அதிகாரங்கள், மாகாணங்களுக்கு என்ன அதிகாரங்கள் என்பதையும் அதிகாரம் ஆளுநருக்கா அல்லது முதலமைச்சருக்கும் அமைச்சரவைக்குமா என்பதையும் தீர்மானிக்க வேண்டிய தேவை அரசுக்கு தற்போது ஏற்பட்டுள்ளது."
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

21 ஆம் பக்கம் பார்க்க

## பெரும்பான்மை இனத்தவருக்கு கொக்குத்தொடுவாயில் காணி

### அடாத்தான செயல் என கூட்டமைப்பு கண்டனம்

யாழ்ப்பாணம், நவ.26
மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 22 பெரும்பான்மை இனத்தவர்களுக்குத் தலா 25 ஏக்கர் காணி வீதம் முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாயில் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என்றும், இது அரசின் அடாத்தான செயல் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கொக்குத்தொடுவாயில், கோட்டைக்கேணிப் பிள்ளையார்

21 ஆம் பக்கம் பார்க்க

## சீருடையினர் தாக்கி 4 இளைஞர் காயம்

### தெல்லிப்பழையில் நேற்றிரவு சம்பவம்

யாழ்ப்பாணம், நவ.26
ஜனாதிபதியின் உருவப்படத்தைக் கிழித்தெறிந்ததாகத் தெரிவித்து தெல்லிப்பழையில் நான்கு இளைஞர்கள் மீது நேற்று இரவு சீருடையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
சனசமூக நிலையத்தில் கதைத்துக் கொண்டிருந்த இளைஞர்களே சீருடையினரால் மோசமாகத் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.
சீருடையினரின் தாக்குதலில் நா.ஜர்சன் (வயது - 22), ர.கஜீபன் (வயது - 21), மு.அசோக்குமார் (வயது - 35), அ.பிரதீபன் (வயது - 30) ஆகிய நால்வரும் காயமடைந்து தெல்லிப்பழை ஆதார

21 ஆம் பக்கம் பார்க்க

## செங்கோல் இன்றி வடமாகாண அமர்வு

யாழ்ப்பாணம், நவ.26
வடக்கு மாகாண சபைக்குரிய செங்கோல் இன்னமும் தயாரிக்கப்படவில்லை. வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்டு இரண்டு மாதங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையிலும், சபை அமர்வை நடத்துவதற்குரிய செங்கோல் இதுவரை தயாரிக்கப்படவில்லை.
வடக்கு மாகாணசபை, கிழக்கு மாகாண சபை என்று பிரிக்கப்பட்ட பின்னர், வடக்கு மாகாண

21 ஆம் பக்கம் பார்க்க

## மலர்ந்தது கார்த்திகைப் பூ



*தமிழ் மக்களுக்கு-குறிப்பாக இந்துக்களுக்குச் சிறப்பான மாதம் கார்த்திகை மாதம். இந்த மாதத்தில் மட்டுமே கார்த்திகைப் பூவும் மலர்ந்து விரிந்து பலரையும் வியக்க வைக்கும்; மனதைக் கொள்ளை கொள்ளும்.*
*தற்போது வன்னியிலும் குடாநாட்டிலும் ஆங்காங்கே*

21 ஆம் பக்கம் பார்க்க

## புலம்பெயர் நாடுகளில் பிரபாவின் பிறந்தநாள்

யாழ்ப்பாணம். நவ, 26.
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 59 ஆவது பிறந்தநாள் நிகழ்வுகள் புலம்பெயர் நாடுகளில் இன்று செவ்வாய்க்கிழமை கொண்டாடப்படவுள்ளன.
1954 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி வல்வெட்

21 ஆம் பக்கம் பார்க்க

## ஊடக சுதந்திரத்தைப் பயன்படுத்தி மாவீரர் புகழ்பாடுவது சட்டவிரோதம்

### ஊடாக மத்திய நிலையம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.26
ஊடக சுதந்திரத்தைப் பயன்படுத்தி மாவீரர்களின் புகழ்பாடுதல் சட்டவிரோதமானது என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.
விடுதலைக்காக வித்தாகிப் போன மாவீரர்களின் நினைவாக நவம்பர் 21 ஆம் திகதி முதல் நவம்பர் 27 ஆம் திகதி வரை மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்படுவது வழமை.
இவ்வாறானதொரு நிலையில் மாவீரர் தினத்தை நினைவு கூரக் கூடாது என்று இலங்கை

21 ஆம் பக்கம் பார்க்க

# பிறப்பு, இறப்புப் பதிவுகளுக்கு புதிய படிவங்கள் அறிமுகம்

## டிசெம்பர் முதல் நடைமுறைக்கு வருகிறது

யாழ்ப்பாணம், நவ.26

பிறப்பு, இறப்பு தொடர்பான விடயங்களை பதிவு செய்வதற்கு டிசெம்பர் முதலாம் திகதி முதல் புதிய படிவங்கள் அறிமுகப் படுத்தப்படவுள்ளன என்று மேலதிக பதிவாளர் நாயகம் ந.சதாசிவ ஐயர் அறிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் விவாகப் பதிவு,பிறப்பு, இறப்பு பதிவுகள் அவற்றுக்கான பிரதி வழங்கும் நடவடிக்கைகள் கணினிமயப் படுத்தப்பட்டுள்ளன. எந்த வொரு பிரதேச செயலகம் மூலமும் அந்த மாவட்டத்தில் 1960 ஆம் ஆண்டின் பின்னர் பிறந்தவர்களது சான்றிதழைப் பெறமுடியும்.

மேலும் இலங்கை அரச வலையமைப்பு மூலம் சகல அலுவலகங்களையும் இணைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. வடக்கு - கிழக்கிலும் இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் நிறை வேற்றப்பட்டதும், இலங்கையில் எங்கு பிறந்தாலும் அருகிலுள்ள பிரதேச செயலகங்கள் மூலம் சான்றிதழ் பிரதி பெற்றுக்கொள்ளக் கூடிய வசதி மக்களுக்கு கிடைக்கும்.

பிறப்பு, இறப்புக்களை பதிவுசெய்வதற்கு தகவல் வழங்கும் படிவங்களில் மாற்றம் கொண்டு வரப்பட்டு பல தரப்பட்ட படிவங்களுக்குப் பதிலாக ஒரேயொரு புதிய படிவம் மட்டும் வடிவமைக்கப்பட்டு மாவட்டங்கள் தோறும் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் படிவங்களில் பிறப்புச் சான்றிதழில் பதிவு செய்வதற்காக இதுவரை காலமும் பெறப்பட்ட விவரங்களே கணினிமயப்படுத்தலுக்கு தகுந்தவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் படிவ மாற்ற நடைமுறையானது வடக்கு மாகாணத்தில் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

இதன்படி ஒவ்வொரு பிறப்பு, இறப்பு தொடர்பிலும் அவை பதிவதற்கு தேவையான விவரங்களை பெற்றோர் எழுதி சரிபார்த்து ஒப்பமிட்டு கொடுத்தல் வேண்டும். அத்துடன் பெயர்களை தாங்கள் பாவிப்பது போன்று ஆங்கிலத்திலும் எழுதிக் கொடுத்தல் வேண்டும்.

இதன்மூலம் எதிர்காலத்தில் பதிவுகளில் பிழைகள் ஏற்படாமல் தவிர்ப்பதுடன், இந்தப் பதிவு முறையானது எதிர்காலத்தில் சட்டமாக்கப்பட்டு நடைமுறைக்கு வரும் போது ஆங்கிலமொழிபெயர்ப்புபெறவேண்டிய தேவையும் இருக்கமாட்டாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-5)

# பயங்கரவாதத்துக்கு எதிராக சர்வதேசம் அணிதிரள வேண்டும்

## இப்படிக் கூவுகிறார் கோத்தபாய

கொழும்பு, நவ.26

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் ஒருங்கிணையுமாறு சர்வதே சத்துக்கு இலங்கை அறைகூவல் விடுக்கின்றது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று ஆரம்பமான சர்வதேச கடற்பாதுகாப்புக் கருத்தரங்கில் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் சில நாடுகள் ஒருங்கிணைந்துள்ளன. தனது இலட்சியத்தை எட்டுவதற்குத் திட்டமிட்டு அப்பாவிப் பொது மக்களை இலக்குவைத்து எதிரி தொடுக்கும் தாக்குதல் முறியடிக்கப்பட வேண்டும். எனவே, பயங்கரவாதத்துக்கு எதிரான சமர், உலகளாவிய சமராகும். பயங்கரவாதம் எங்கு தலையெடுத்தாலும் அது நசுக்கப்படவேண்டும். இது விடயத்தில் ஒவ்வொரு நாடும் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இதயபூர்வமாக நாடுகள் ஆதரவளிக்கவேண்டும். பயங்கரவாதத்தை முறியடிக்க முறையாகவும் ஒருங்கிணைந்தும் உச்ச மட்டத்தில் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு நாடுகளுக்கிடையே நேர்மையான ஒத்துழைப்பு தேவை.

புலனாய்வு பரிவர்த்தனை, கடற்பிராந்தியம் தொடர்பான விழிப்புணர்வு, கூட்டுச் செயற்பாடுகள், இணைந்து ரோந்துப் பணிகள், உள்ளக தொடர்பு ஆகியவை கடற்படைகளுக்கிடையே அவசியம். பயங்கரவாத முயற்சிகளை முறியடிக்க ஒருங்கிணைவதற்கு இது ஒரு வழியாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததன் மூலம் இலங்கை அனுபவத்தை ஈட்டியுள்ளது. குறிப்பாக, கடற்புலிகளைத் தோற்கடித்தமையைக் குறிப்பிடலாம். இந்த அனுபவத்தின் வாயிலாக சர்வதேச கடலில் ஆர்ப்பரிக்கும் கடற்கொள்ளையை முறியடிக்கவும் இலங்கையால் முடியும்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் மாத்திரமே கடற்படைப் பிரிவு இருந்துள்ளது. இலங்கைக் கடற்படைக்கு எதிராக தற்கொலைத் தாக்குதல்கள் உட்பட தாக்குதல்களை நடத்த இக்கடற்படைப்பிரிவு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. தற்போது கடற்கொள்ளையை முறியடிக்க தனியார் நிறுவன கப்பல்களுக்கும் இலங்கை ஆயுதங்களை அளித்து வருகிறது. வழங்கப்படும் ஆயுதங்கள், உபகரணங்கள் ஆகியவை தொடர்பாக பொறுப்புக்கூறும் கடப்பாடுகளை உத்தரவாதப்படுத் திக்கொள்வதற்காக முன்கூட்டியே எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன'' என்றார்.

### வடமாகாண சுகாதார அமைச்சர் முல்லைத்தீவுக்கு

யாழ்ப்பாணம், நவ.26

வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவ கலாநிதி ப.சத்தியலிங்கம் இன்று முல்லைத்தீவுக்கு சென்று பல்வேறு நிகழ்வுகளில் பங்குகொள்ளவுள்ளார்.

இன்று காலை 9 மணிக்கு மாங்குளம் ஆதார வைத்திய சாலைக்கு செல்லும் அமைச்சர் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட மலேரியா தடை இயக்க நிலையத்துக்கும் செல்வார்.

இதன் போது மருத்துவமனை குறைபாடுகுறித்து ஆராய்வதுடன் மருத்துவர்கள், தாதியர்கள், பணியாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-422-500)

# நகர சபை உறுப்பினர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், நவ.26

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ஸ்ரீரஞ்சன் சாவகச்சேரிப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் தனது பணிக்கு இடையூறு விளைவித்தார் என்று அங்குபணிபுரியும் வைத்தியர் தயாளன் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் அவரைக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி வைத்திய சாலைக்கு நேற்றுமுன்தினம் சிகிச்சைக்கு சென்ற நோயாளி ஒருவருக்குப் பல மணி நேரமாகச் சிகிச்சை வழங்கப்படாமல் இருந்ததாகவும் இதனையடுத்து அந்த நோயாளி அது குறித்து நகரசபை உறுப்பினர் ஸ்ரீரஞ்சனுக்கு அறிவித் ததாகவும் கூறப்பட்டது.

இதனையடுத்து நகரசபை உறுப்பினர் வைத்திய சாலைக்குச் சென்று இதுபற்றி குறித்த வைத்தியரிடம் வினவியதாகவும், இது தொடர்பில் வைத்தியர் பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் கொடுத்ததாகவும், அங்கு சென்ற பொலிஸார் நகர சபை உறுப்பினரிடம் விசாரணை மேற்கொண்டதாகவும் இதன்பின்னர் நேற்று பொலிஸ் நிலையத்துக்குச் சென்றபோதே ஸ்ரீரஞ்சன் கைது செய்யப்பட்டதாகவும் அவரது தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் குறித்த வைத்தியரான தயாளனுடன் அவரது கையடக்கத் தொலைபேசிக்கு 'உதயன்' செய்தியாளர் அழைப்பை ஏற்படுத்தி போது அவர் மன் னிக்கவும் என்று கூறித் தொடர்பைத் துண்டித்தார். (த-4)

# கமரூனை தாக்கினார் ஜயரட்ண

பிரிட்டன் பிரதமரின் இலங்கைக்கு எதிரான கருத்தானது அந்நாட்டு தமிழ் வாக்குகளைப் பெறுவதற்கான உபாயமாகும் என்று பிரதமர் டி.எம். ஜயரட்ன நேற்று சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில நேற்று நடை பெற்ற வரவு - செலவுத் திட்டதின் மூன்றாம் நாள் வாசிப்பு மீதான விவாதத்தில் உரயாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரிட்டன் பிரதமர் வடக்குக்குச் சென்று அங்குள்ள மக்களைக் குழப்புவ தற்கு முயற்சித்தார். அத்துடன், பிரிட்டன் நாடாளுமன்றிலும் அவர் இலங்கைக்கு எதிரான கருத்துகளை வெளியிட்டார். இதற்கு எதிராக அந்நாட்டி லேயே எதிர்ப்புகளும் கிளம்பின. பிரிட்டனிலுள்ள தமிழ் வாக்குகளைப் பெறுவதற்காகவே அவர் இலங்கைக்கு எதிரான கருத்தை முன்வைத்துள்ளார் - என்றார்.

# தாயின் நண்பர் தாக்கிய குழந்தை சாவு

யாழ்ப்பாணம், நவ.26

தாயுடன் சேர்ந்து வசிக்கும் ஆண் ஒருவரால் தலையில் மிக மோசமாகத் தாக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒன்றரை வயது ஆண் குழந்தை சிகிச்சை பயனாளிக்காது 7 ஆவது நாளான நேற்று உயிரிழந்தது.

அரியாலை பூம்புகாரைச் சேர்ந்த வி.திலக்ஷன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்து உள்ளது.

குழந்தை தாக்கபட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மறுநாள் குறித்த சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குழந்தையின் தந்தை ஏற்கனவே கைவிட்டுச் சென்ற நிலையில் திருநகரைச் சேர்ந்த யாழ். மாநகரசபை தொழிலாளி ஒருவர் குழந்தையின் தாயாருடன் சேர்ந்து வாழ்ந்துள்ளார்.

அவரே குழந்தையை தினமும் அடித்து து[illegible]றுத்தி வந்துள்ளார். இவ்வாறு தாக்கபட்டு படுகாயம் அடைந்த நிலையில் அயலவர்களின் உதவியோடு குழந்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளது. விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-4)

### மனித உரிமைகள் தொடர்பில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.26

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் கிளிநொச்சி மாவட்ட சிவில் சமூகங்களுக்குமான கலந்துரையாடல் எதிர்வரும் 30 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

சிவில் சமூகத்துக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் இடையிலான உறவை மேலும் வளப்படுத்தும் வகையிலும் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு சிவில் சமூகங்கள் ஊடாக வழங்கி அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடனும் இந்தக் கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.

இதில் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சிவில் சமூக அமைப்புகளுக்கும் சமயத் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது.

அழைப்புகள் கிடைக்காதவர்கள் 021 222 2021 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஜ-5)

# சொன்னபடி பொறுப்புகள் பகிர்ந்து தரப்படவில்லை

## மாகாண சபை உறுப்பினர்கள் கவலை

யாழ்ப்பாணம். நவ. 26.

வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்களுக்குரிய பொறுப்புகள் ஆளுங்கட்சியின் ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினர்களுக்கும் பெயரளவில் மட்டுமே பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாதம் மாகாண சபையின் அமர்வுகள் முடிவடைந்த பின்னர், யாழ். பொது நூலகத்தில் வைத்து துறைசார் ஆலோசகர்களால் எமக்குப் பொறுப்புகள் சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டன என்றும் இன்றுவரை எமக்கு எந்தப் பொறுப்புகளும் தரப்படவில்லை. என்ன செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்படவில்லை. என்று மாகாணசபை ஆளுங் கட்சி உறுப்பினர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் ஏனைய 4அமைச்சர்கள் தவிர எஞ்சிய 25 ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் வடக்கு மாகாண சபையின் ஒவ்வொரு பொறுப்புகள் பகிர்தளிக்கப்படுகின் றன என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அறிவித்திருந்தார்.

இது தொடர்பாக ஊடகங்கள் வாயிலாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்பின்னர் வடக்கு மாகாண சபையின் இந்த மாத அமர்வு கடந்த 11 ஆம் திகதி முடிவடைந்துள்ளது. ஆனாலும் இன்றுவரை பொறுப்புகள் இன்றியே உறுப்பினர்கள் உள்ளனர்.

பொதுமக்கள் தமது குறைகள் தேவைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களிடம் நேரடியாகச் சென்று கருத்துத் தெரிவித்து வருகின்றனர். ஆனாலும் உறுப்பினர்கள் தமக்கு இருக்கும் அதிகாரங்கள், செயற்படுதன்மைகள் என்னவென்று தெரியாததால் பொதுமக்களுக்கு பதில் கூற முடியாதுள் ளதாக உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் மக்கள் மாகாண சபையின் செயற்பாடுகளில் விசனமடையும் நிலை தோன்றியுள்ளது.

தமக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்த சகல நடவடிக்கைகளும் முன்னெடுப்பதுடன் இதுதொடர்பில் மாகாண சபை உப விதிகளும் நிறைவேற்றப்பட வேண்டும் என்று உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் முதலமைச்சர் கடந்த வடக்கு மாகாண சபை அமர்வின் பின்னர் உறுப்பினர்களைச் சந்திக்க வில்லை என்பதையும் தெரிவித்தனர். (ஜ-5)

# வடக்கில் தாதியர்கள் பணிப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம். நவ. 26.

அரச தாதிய உத்தியோகத்தர்களின் பணிப்புறக் கணிப்பு போராட்டம் வடக்கிலும் முற்று முழுதாக கடைப்பிடிக்கப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 7 மணி தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 7 மணிவரை இவ்வாறு கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அன்றையதினம் அவசர நோயாளர்கள் தவிந்த ஏனையவர்கள் வைத்தியசாலைக்குச் செல்வதனை இயன்றவரை தவிர்க்குமாறும் அவர்கள் நோயாளிகளுக்கு அறிவுறுத்துகின்றனர்.

10 ஆயிரம் ரூபா கடமைத் தடைக்கொடுப்பனவை வழங்குமாறு கோரியும், மேலதிக பணிக்கு மணித்தியாலத்துக்கு 100 ரூபா வீதம் உள்ள கொடுப்பனவை 200 ரூபாவாக அதிகரிக்குமாறும் விசேட வகுப்புக்களைச் சேர்ந்தவர்களுக்கு தொலைபேசிக் கொடுப்பனவை 4 ஆயிரம் ரூபாவாக அதிகரித்த[illegible] தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரத்தை வழங்கல் உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து இரண்டு நாள்களும், தொடர்ச்சியாகப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

அரச தாதியர்கள், மருத்துவ உதவியாளர்கள் உட்பட 16 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுக்கின்றன. (மற்றுமோர் செய்தி 11 ஆம் பக்கத்தில்) (ஜ-4-9)

## கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு விவசாய பாவனைக்கு

*பொறியியலாளர் விஜயகாந் தெரிவிப்பு*



சுகாதாரத் திட்டத்தின் கீழ் உள்வாங்கும் கழிவுகளைச் சுத்திகரித்து அதன்மூலம் வெளிக்கொணரும் நீர் விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் என்று யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் பொறியியலாளர் வி.விஜயகாந் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று திங்கட்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் நல்லூர் பிரதேச திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லுண்டாயில் கழிவு நீர் சுத்திகரிப்புக்கான ஆலை அமையவுள்ளது. அங்கு சுத்திகரிக்கப்படும் நீர் நவாலி முதலியார் குளத்தில் விடப்படும் என்று அவர் தெரிவித்தார்.

கழிவு நீரை முதலியார் குளத்தில் சேர்ப்பதன்மூலம் சுற்றாடலில் உள்ள நல்ல தண்ணீர் மாசடைய வாய்ப்பில்லையா என்று கேட்டபோது:-

குறிப்பிட்ட நீர் முன்னதாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு சுற்றாடலில் உள்ள தண்ணீர் பாதிக்கப்பட மாட்டாது என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அது விவசாயத்துக்குப் பயன்படுத்தக்கூடியதாக குளத்துக்கு விடப்படும் என்று பொறியியலாளர் பதிலளித்தார்.

நிகழ்வில் சமூகவியலாளர் ஆர்.மோகனராஜா இரணைமடு நீர் விநியோகத்திட்டம் குறித்து விளக்கம் அளித்தார். நிகழ்வில் கிராம அலுவலர்கள், பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (வ-7)

## முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சியும்

யாழ்ப்பாணம், நவ.26

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் உள்ள அரியாலை கிழக்கு பிரதேசத்தில் ஜே/89 கிராம உத்தியோகத்தர் பிரிவில் முற்பகல் 10 மணிக் கும், அரியாலை தென் கிழக்கு ஜே/90 கிராம உத்தி யோகத்தர் பிரிவில் பிற்பகல் 3 மணிக்கும் இன்று செவ்வாய்க்கிழமை இடர் முகாமைத்துவப் பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சிச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பில் பொது மக்களை அமைதியாக இருக்குமாறும் இது ஓர் ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஓ)

## அபராதம்

தென்மராட்சி, நவ.26

தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு நுளம்பு உற்பத்திக்கு சாதகமான நிலையில் வளவுகளை வைத்திருப்போர் மீது வழக்குத் தாக்கல் மேற்கொள்ளப்படுகிறது. சுகாதாரத் திணைக்களத்தினரும் பொலிஸாரும் இணைந்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து வருகின்றனர். நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட வழக்கில் ஒருவருக்கு ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

## கல் ஏற்றிவந்த 'டிப்பரில்' முதிரைக் குற்றிகள்




பளை, நவ.26

வன்னிப் பகுதியிலிருந்து கிறசர் கல் ஏற்றிவந்த டிப்பர் வாகனம் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக் குற்றிகளை மறைத்துக் கொண்டு வந்தபோது பொலிஸாரிடம் வசமாக மாட்டிக்கொண்டது.

நேற்று முன்தினம் முகமாலைப் பகுதியில் வீதிப் பரிசோதனையில் ஈடுபட்ட பளைப் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவினர் டிப்பர் வாகனத்தைச் சோதனையிட்டபோது ஆறு முதிரை மரக்குற்றிகள் இருந்ததைக் கண்டுபிடித்தனர். இது தொடர்பாக பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் வாகனச் சாரதியை கைது செய்ததுடன் டிப்பரையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். (வ-9)

# தன்னாட்சி அதிகாரம் வழங்கினால் மாகாணசபை அர்த்தமுடையதாகும்

*பொதுநலவாய நாடுகளின் உள்ளூராட்சி ஒன்றிய பிரதிநிதிகளுடனான சந்திப்பில் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் தெரிவிப்பு*



வடமராட்சி, நவ.26

தமிழர்களின் பிரச்சினைகளுக்கு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தன்னாட்சி அதிகாரமும், சம உரிமையும் வழங்கப்பட்டால் மட்டுமே தற்போதைய மாகாண சபை நிர்வாகம் அர்த்த முள்ளதாக இருக்கும். இவ்வாறு வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ் பொதுநலவாய நாடுகளின் உள்ளூராட்சி ஒன்றியப் பிரதி நிதிகளுடனான தனிப்பட்ட கலந்துரையாடலின் போது தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளில் உள்ளூராட்சி மன்றங்களின் ஒன்றியத் தலைவரும், நியூஸிலாந்தின் ஹாஸ்ரிங்ஸ் மாவட்ட மேயருமான லோறன்ஸ் யூல் மற்றும் ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் காரல்றைற் ஆகியோரின் அழைப்பின் பேரில், கொழும்பு ரேணுகா சிற்றி விடுதியில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. தெரிவு செய்யப்பட்ட சில உள்ளூராட்சி மன்றங்களின் மேயர்கள் மற்றும் நகர முதல்வர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆகியோர் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது தலைவர் மேயர். லோறன்ஸ் யூல், செயலாளர் நாயகம் கார்ல்றைற் ஆகியோர் "வட மாகாணத்துக் காக மாகாண சபை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதால் உங்களுடைய மாகாணத்தை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்ய முடியும்" என்று வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவரிடம் குறிப் பிட்டிருந்தனர். அதற்குப் பதிலளித்த நகர சபைத் தலைவர்,

உலகத்தின் பார்வையில் தேர்தலை நடத்தி ஒரு மாகாண சபையை உருவாக்கி தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டதாக அரசு குறிப்பிடுவதைத்தான் உலக நாடுகளும் நீங்களும் நம்பிக் கொண்டிருக்கின்றீர்கள். ஆனால் பெயரளவில் அதிகாரம் உள்ள ஒரு சபையாகக் காட்டப்பட்டாலும், உங்கள் நாடுகளில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு உள்ள அதிகாரங்கள் கூட எங்களுடைய மாகாண சபைக்கு வழங்கப்படவில்லை.

தற்போது முதல் தடவையாக எங்களுக்கு எல்லா வகையிலும் தகைமையுள்ள ஒரு முதலமைச்சர் பொறுப்பேற்றுள்ள நிலையில் அரசு அவரது நிர்வாகத்துக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கு வதுடன் ஆளுநர் ஊடாக முட்டுக்கட்டைகள் போடாது இருக்க வேண்டும்.

நாங்கள் கேட்பது போல், தமிழர்களின் நிலங்களிலிருந்து படையினரை வெளியேற்ற வேண்டும், தமிழர்களுக்குச் சொந் தமான நிலங்களில் அத்துமீறி நடைபெற்றுக் கொண்டிருக் கும் சிங்களக் குடியேற் றங் களைக் கட்டுப்படுத்த காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைக்கு வழங் கப்பட வேண்டும். அப்போது தான் அதிகாரம் எங்களிடம் இருப்பதாகக் கருத முடியும்.

அதேவேளை வட மாகாணத்தின் ஆளுநராக இருக்கும் இராணுவத் தளபதியை நீக்கி சிவிலியன் ஒருவரை ஆளுநராக நியமித்து ஜனாதிபதி தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும். அத்துடன் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தன்னாட்சி அதிகாரமும், சம உரிமையும் வழங்கப்படுமானால் மட்டுமே மாகாண சபை நிர்வாகம் அர்த்தமுள்ளதாக இருக்கும் என்று எடுத்துக் கூறினார். வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் அவரது கருத்துக்களை ஏற்றுக் கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலிலும், இரவு விருந்திலும் குருநாகல் மாநகர முதல்வர் காமினி பெரமுனகே. மாத்தளை மாநகர முதல்வர் மொகமட் கில்மி, வல்வெட்டித் துறை நகர முதல்வர் ந.அனந் தராஜ், குளியாப்பிட்டிய நகர சபைத் தலைவர், கொழும்பு பல்கலைக்கழக அரசியல் பிரிவுத் திணைக்களத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் தம்ம திசநாயக்கா ஆகியோர் உட்பட நாடாளாவிய ரீதியில் சுமார் பத்து உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர். இக் கலந்துரையாடல் பொது நலவாய உள்ளூராட்சி மன்றங்களின் ஒன்றியத்தின் செயல் திட்ட முகாமையாளர் எஸ்.சண் முகராசாவால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. (வ-8)

## வவுனியாவில் உற்பத்தியான 'ரெட்லேடி' பப்பாசி ஏற்றுமதி

*ஒக்ரோபர் வரை 16 ஆயிரம் கிலோ*

யாழ்ப்பாணம், நவ.26

வவுனியா மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 'ரெட்லேடி' இன பப்பாசிகள் கடந்த ஒக்ரோபர் மாதம் வரை 16 ஆயிரம் கிலோ வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்று வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி சைலாபானு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வவுனியா வடக்கு நெடுங்கேணியைச் சேர்ந்த 200 விவசாயிகள் பப்பாசிச் செய்கைக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். ஐ.எல்.ஓ.நிறுவனத்தின் பங்களிப்புடன் சங்கங்கள் ஊடாக பதிவு செய்யப்பட்ட பழச் செய்கையாளர்கள் இந்தத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

இந்தத் திட்டம் கடந்த வருடம் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் காலநிலை சீரற்ற காரணத்தால் செய்கை பண்ணப்பட்ட பப்பாசி மரங்கள் அழிவடைந்தன. எனினும் மீண்டும் மே மாதம் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்காக விவசாயிகள் மற்றும் நிறுவனத்தின் பங்களிப்புடன் 15 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டது. அதன் பயனாக ஏழு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களில் 16 ஆயிரம் கிலோகிராம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

பயனாளிகளில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளமையால் ஒவ்வொருவரும் மாதாந்தம் 35 ஆயிரம் ரூபா வரையான வருமானத்தைப் பெற்றுக் கொள்கின்றனர்.

வாரத்தில் இரண்டு நாள்கள் ஏற்றுமதி இடம்பெறுவதால் பழச் செய்கையாளர்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளனர் எனவும் தெரிவித்தார். (ஓ-14)

## வவுனியாவில் மஞ்சள் செய்கை

யாழ்ப்பாணம், நவ.26

வவுனியா மாவட்டத்தில் ஏற்றுமதிச் செய்கைக்கான மஞ்சள் உற்பத்தி நடவடிக்கைகள் 10 ஏக்கர் நிலப் பரப்பில் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் சைலா பானு தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தின் தற்போதைய விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக அவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-


வவுனியா மாவட்டத்தில் இந்த வருடம் விவசாயத்தில் ஏற்றுமதிப் பயிர்ச் செய்கைக்கு முன்னோடியாக மஞ் சள் உற்பத்தி மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. இதற்கு ஏற்ப 10 ஏக்கர் நிலப்பரப்பில் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான அறுவடைகள் ஓரிரு மாதங்களில் நடைபெறுவதுடன் ஏற்றுமதியும் இடம்பெறும். இதற்காக உள்வாங்கப்பட்டுள்ள விவசாயிகள் அதிக நன்மையடைவர் என்றும் தெரிவித்தார். (வ-14)

# அவரது தாயார் 'ஜெ' இற்கு மனு

சென்னை, நவ.26
பேரறிவாளனை விடுதலை செய்யக் கோரி அவரது தாயார் அற்புதம்மாள் முதல்வர் ஜெய லலிதாவுக்கு கோரிக்கை மனு அளித்துள்ளார்.
இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட குற்றவா ளிகளில் பேரறிவாளன், சாந் தன், முருகன் ஆகிய மூவ ருக்கு அளிக்கப்பட்ட தூக்குத் தண்டனை, கடந்த 22 வருடங்களாக நிறை வேற்றப்படா மல் உள்ளது.
அண்மையில் சி.பி.ஐ. முன்னாள் அதிகாரி தியாக ராஜன், பேரறிவாளன் சொல்லாத சில வார்த்தைகளையும் அவரது வாக்குமூலத்தில் தான் சேர்த் ததாகக் கூறியுள்ளார். இது தற் போது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ள நிலையில் பல் வேறு அரசியல் கட்சி தலைவர்கள் பேரறிவாளனை விடு தலை செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்து வருகின்றனர்.
இந்தநிலையில், பேரறி வாளனை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கக் கோரி அவரது தாயார் அற்புதம்மாள், தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு மனு அளித்துள்ளார்.
இது குறித்து முதலமைச்சரின் தனிப் பிரிவில், பேரறிவாள னின் தாயார் அற்புதம்மாள் நேரில் அளித்த மனுவில், தனது மகன் நிரபராதி என்ப தற்கு ஆதாரம் உள்ளதாக கூறியுள்ளார். மேலும், சி.பி. ஐ. முன்னாள் அதிகாரி தியாக ராஜன் கருத்தையும் அந்த மனுவில் அற் புதம்மாள் சுட்டிக் காட்டியுள்ளார். அத்துடன் ஆவணப் படம் குறித்த இறு வட்டையும் மனு வுடன் இணைத்து கொடுத்துள்ளார்.
(வ)

# பேரறிவாளனுக்கு நியாயம் வழங்குக

## கருணாநிதி வலியுறுத்தல்



சென்னை, நவ.26
இந்தியாவின் முன்னாள் பிர தமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் எழுந்துள்ள பிரச் சினை யில் இனியாவது முழு மையான விசாரணை நடத்தி இத்தனை வருடங்கள் சிறை யிலே தன் இளம் பிராயத்தை செலவிட்ட பேரறி வாள னுக்கு நியாயத்தை வழங்க வேண் டும் என்று தி.மு.க. தலைவர் மு.கரு ணாநிதி வலியுறுத்தி யுள்ளார்.
இதுகுறித்து தி.மு.க. தலைவர் கலைஞர் வெளி யிட்டுள்ள கேள்வி - பதில் அறிக்கையில் கூறியி ருப்பதாவது:-
*கேள்வி:* ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்ற வாளி என்று குற்றம் சாட்டப்பட்ட பேரறிவாளன் வாக்கு மூலத்தை மாற்றம் செய்ததாக இந்த வழக்கை புலன் விசா ரணை செய்த முன்னாள் காவல்துறை கண்காணிப் பா ளர் ஒருவர் 22 ஆண்டுக ளுக்கு பின்னர் ஒப்புதல் அளித் திருப்பதாக ஏடுகளில் செய்தி வந்திருக் கிறதே?
*பதில்:* சில குற்றவாளிகள் தப்பினாலும் ஒரு நிரபராதி கூட தண்டிக்கப்படக் கூடாது என் பது தான் குற்றவியல் சட்டத்தின் அடிப்படை நெறி யாகும்.
அந்த அடிப்படையில் தற்போது வெளியாகி யுள்ள இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஏடு களில் காணும் போது, நடந்து முடிந்த வழக்கு விசாரணை யிலும், அதன் அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்பிலும் மிகப்பெரிய கேள்விக் குறி எழுந்துள்ளது.
எனவே இனியாவது இது குறித்து முழுமை யான விசா ரணை நடத்த அரசு முன்வர வேண்டும்.
ராஜீவ் காந்தி கொலை வழக் கில் இத்தனை ஆண்டுகள் சிறையிலே தன் இளம் பிரா யத் தைச் செல விட்ட பேரறி வாளனுக்கு நியா யத்தை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்-என் றார். (வ)

# மரண அறிவித்தல்

## திருமதி யோகேஸ்வரி விக்னேஸ்வரமூர்த்தி



தும்பளையைப் பிறப்பிடமாகவும், புற் றளையை வசிப்பிடமாகவும் கொண்ட யோகேஸ்வரி விக்னேஸ்வரமூர்த்தி 22.11.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.11.2013 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப. 10. மணியளவில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை தும்பளை வெளிச்சவீடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ள வும்.

புற்றளை
புலோலி தெற்கு புலோலி

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் சோமசுந்தரம்



நயினாதீவு 5ஆம் வட்டாரத் தைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட பொன் னம்பலம் சோமசுந்தரம் நேற்று (25.11.2013) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான காசிப் பிள்ளை பொன் னம்பலம்-சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், காலஞ் சென்றவர்களான கந்தையா- நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன் புக் கணவரும், காலஞ்சென்ற சந்திரபாலன்( பொறியியல்பீட முன்னாள் மாணவன், பேரா தனைப் பல்கலைக்கழகம்) மற் றும் கனகநாயகம் (கனடா), தயாளினி, ஏகநாயகி (ஆசிரியை நயினா தீவு மகா வித்தியாலயம் ), கோகுலதாசன் (ஆசிரியர், வவு னியா இறம்பைக்குள மகளிர் மாகா வித்தியாலயம்), சந்திரிகா (கொழும்பு), குமரகுரு (பிரதேசசபை உப அலுவலகம் நயினாதீவு), கிருபாகரன் (கொழும்பு), தனலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், கலைவாணி (கனடா), கிருபானந்தசிவம் (வர்த்தகர், விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ் நயினா தீவு), ஸ்ரீஞானேஸ்வரன் (ஆசிரியர், யா/ புங்குடு தீவு ஸ்ரீசித்தி விநாயகர் வித்தியாலயம்), சுதர்சினி (ஆசிரியை, வவுனியா இறம்பைக்குளம் மகா வித்தியாலயம்), கோகுலகுமார் (கொழும்பு), ஆராதனா, யசோதினி (கொழும்பு), கலைவண்ணன் (கனடா) ஆகியோரின் மாமனும், Dr. காசிலிங்கம், புவனேஸ்வரி, லாடாதேவி ஆகியோரின் அன்புச் சகோ தரரும், மீரஜன், கோபி, நிலக்ஷனா, தனுராஜ், கோசிகன், அபிஷியன், சுபன், சுபசங்கி, பிறேமன், துஷானந், லக்ஷிகன், கருஜெய, அஸ்வின், பிரவின், அல்வின் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சொர்ணலிங்கம் மற்றும் சிவபாக்கியம் (கனடா), காலஞ் சென்ற மாசிலாமணி மற்றும் விமலாம்பிகை, தனலட்சுமி, சிவானந்தராசா (சுவிஸ்), திர வியநாதன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சிவகாமசுந்தரி மற்றும் அற்புதராணி, நடேசபிள்ளை (ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி SLES), காலஞ்சென்ற விநாயகமூர்த்தி (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.11.2013) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 2.00 மணிக்கு நயினாதீவு சல்லிப்பரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம்செய்யப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5 ஆம் வட்டாரம், நயினா தீவு,
021 3735346, 077 9224503, 077 8888756

தகவல்:
குடும்பத்தினர்.

(14.17)(சி.13834)

# மரண அறிவித்தல்

## செல்வி கந்தையா பற்குணசோதி (சுலா)

( புனித சென். சார்ல்ஸ் ஆரம்பப் பாடசாலை முன்னாள் ஆசிரியையும் தற்போது கோண்டாவில் பரஞ்சோதி மகாவித்தியாலய ஆசிரியையும்)



பாலாவி வடக்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கந்தையா பற்குணசோதி நேற்று (25.11.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மாணிக்கம் தம்பதி யரின் அன்புமகளும் சுகுணாசோதி, சற்குணசோதி, சிவகுணசோதி, நற்குண சோதி, விக்கினேஸ்வரமூர்த்தி ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2013) செவ்வாய்க் கிழமை பி.ப. பலாலி வடக்கு கொடிகாமத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கச்சாய் கடற்கரை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

பாலாவி வடக்கு,
கொடிகாமம் (077 0601002, 077 9514375)

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னம்மா செல்லத்துரை



சாவகச்சேரி சரசாலை வடக்கைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை - பொன்னம்மா நேற்று (25.11.2013) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா, சரவணமுத்து, தங்கம்மா ஆகி யோரின் அன்புச்சகோதரியும் பத்மநாதன் (சுவிஸ்), இராசரத்தினம் (இளைப்பாறிய சாலை செயலாற்று உதவியாளர் மன்னார் சாலை) ஆகியோரின் பாசமிகு தாயும் சாந்திமாலா (சுவிஸ்), இராஜேஸ்வரி (கிராம அலுவலகர் மன்னார்) ஆகியோரின் அன்பு மாமியும் சபிதா (சுவிஸ்), சபேசன் (சுவிஸ்), தட்ஷாயினி (மன்னார் புனித ஆன் கல்லூரி), தர்சன், தனுஜினி, (ருவன்புர கல்வியல் கல்லூரி), தரணியா, தனுசன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சஜினாவின் (சுவிஸ்) பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்ற பூதவுடல் சரசாலை கொம்பிகுளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை வடக்கு
சாவகச்சேரி

தகவல்
செ. இராஜரத்தினம் (மகன் - இளைப்பாறிய சாலை செயலாற்று உதவியாளர் மன்னார் சாலை)

# பாய்த் தொழிற்சாலை மீள ஆரம்பித்தல்

*வாதரவத்தை மக்களுடன் சித்தார்த்தன் கலந்துரையாடினார்*

யாழ்ப்பாணம், நவ.26
புத்தூர், வாதரவத்தைப் பகுதியில் அமைந்திருந்த பாய்த் தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பது தொடர்பில், அந்தப் பகுதி மக்களுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.
வாதரவத்தை கிராமத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் நவலோக ராஜா ஆகியோர் சனிக்கிழமை சென்றனர்.
இதன்போது அந்தப் பகுதிகளை சித்தார்த்தன் பார்வையிட்டதுடன், வாதரவத்தைப் பகுதியில் பாய்த் தொழிற்சாலை அமைந்திருக்கும் பகுதிக்கும் சென்று பார்வையிட்டார்.
சுமார் முப்பது முதல் நாற்பது பெண்கள் வரையில் பணியாற்றி வந்த குறித்த பாய்த் தொழிற்சாலை இன்று முழுமையாக அழிக்கப்பட்ட நிலையில் உள்ளது. இந்த தொழிற்சாலையை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாகவும், கிராம மக்களின் தேவைகள் குறித்தும் ஆராயப்பட்டது. (த-5)



யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த வருடமும் அனுட்டிக்கப்பட்டதைப் போன்று மாவீரர் நாள் நிகழ்வுகள் இந்த வருடமும் அனுஷ்டிக்கப்படலாம் என்பதால் பல்கலைக்கழக மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இதனால் பல்கலைக்கழகம் வெறிச்சோடிய நிலையில் காணப்படுகிறது. (வ-5-20)

## 'கற்றாக்' பாதித்த 10 பேருக்கு சத்திர சிகிச்சை

காரைநகர், நவ. 26
காரைநகர் அபிவிருத்திச் சபையால் பிரிட்டன் காரை நலன்புரி சங்கத்தின் நிதி உதவியுடன் இரண்டாவது கட்டமாக 'கற்றாக்'கால் பாதிக்கப்பட்ட பத்து பேருக்கு கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
மிக வறுமையில் வாடும் தாங்கள் கண் பார்வைக் குறைவால் அவதிப்படுவதாகவும் தமக்கான கண் சத்திர சிகிச்சைக்கு உதவுமாறு கோரி காரைநகர் அபிவிருத்திச் சபையிடம் சுமார் இருபதுக்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்திருந்தனர்.
அவர்கள் அனைவரும் மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையில் கண் சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் குகதாசனால் பரிசோதிக்கப்பட்டு உடனடியாக சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டிய பத்துப் பேருக்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. கடந்த இரு மாதங்களுக்கு முன்னரும் பிரிட்டன் காரை நலன்புரி சங்கத் தின் நிதி உதவியுடன் 20 பேருக்கு கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-250)

# சூழ்நிலைகளால் நாட்டை விட்டு வெளியேறிய கல்விமான்கள்

*வடக்கு கல்வி அமைச்சர் தெரிவிப்பு*



யாழ்ப்பாணம், நவ.26
யாழ்ப்பாணத்தில் பிரபல கல்விமான்களை உருவாக்கிய பெருமை கடந்த காலங்களில் சிறப்பான கல்விச் சேவையை வழங்கிய பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களையே சாரும். எனினும் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் யாழ்ப்பாணத்தின் கல்விமான்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்று வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு அமைச்சர் த. குருகுலராசா தெரிவித்தார்.
யாழ் ஈ- சிற்றி கல்லூரியின் விருது வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். கிறீன் கிறாஸ் விடுதியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது:-
யாழ்ப்பாணத்தில் கடந்த 5 வருடங்களாக கல்விச் சேவையில் தடம் பதித்துள்ள ஈ-சிற்றி கல்லூரி ஆயிரக்கணக்கான மாணவர் களை உருவாக்கியதுடன் பொறுப் புணர்ச்சியுடன் தகுந்த பயிற்சிகளை வழங்கியுள்ளது.
யாழ்ப்பாணத்தில் இவ்வாறனதொரு தனியார் நிறுவனங்கள் மாணவர்களுக்கான கல்வி சேவையை வழங்கி வருவதால் மாணவர் களுக்கு சிறந்த எதிர் காலம் கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் மாணவர்கள் உரிய தொழில் வாய்ப்பை நிரந்தரமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.
யாழ். குடாநாட்டில் 1945 ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப் பகுதி யில் யாழ்.பல் கலைக்கழகத்துக்கு நிகராக 30 இற்கும் மேற்பட்ட பிரபல பாடசாலைகள் சிறந்த கல்விச் சேவையை வழங்கியிருந்தன. அக்காலத்தில் புகழ் பூத்த அதிபர்கள் தமது பண்புகளுக்கு ஏற்ப ஆளுமை வளர்ச்சியால் பாடசாலைகளை வழி நடத்தினர்.
தமிழ், ஆங்கிலம் என புலமைமிக்க கல்வி வாய்ப்புகள் வழங்கப்பட்டதால் அந்தக் காலத்தில் திறமையான பல கல்விமான்கள் உருவாக்கப்பட்டார்கள். எனினும் நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.
இவ்வாறானதொரு கல்வி மான்களை உருவாக்கியவை யாழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலைகளும், கல்வி நிறுவனங்களும் என்பது குறிப்பிடத்தக்கது - என்றார். நிகழ்வில் மாணவர்களது கலை நிகழ்வு களும் விருது வழங்கலும் இடம்பெற்றது. (வ-14-21)



பச்சிலைப்பள்ளி தமிழர் பகுதிகளில்

# படையினர் ஆக்கிரமிப்பு

*வடமாகாண சபை உறுப்பினர் அரியரத்தினம் தெரிவிப்பு*

தொடிகாமம்,நவ.26
படையினர் ஒருங்கிணைப்பு என்ற போர்வையில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கடந்த இரண்டு மாதத்துக்குள் 200 இற்கு மேற்பட்ட தமிழ் மக்களின் காணிகளை படையினர் ஆக்கிரமித்துள்ளனர். பிரதேசத்தில் மக்கள் தமது காணிகளில் மீளக் குடியமரலாம் என்ற ஆவலுடன் இருந்த காணிகளில் படையினர் முகாம்களை அமைத்து வருகின்றனர்.
இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம் சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,
போர் வேளையில் கிளிநொச்சி மாவட்டம் மிக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. கிளிநொச்சி நகரப் பகுதி கடந்த நான்கு வருடங்களில் பலவகையான அபிவிருத்தியைக் கண்டுள்ளது.
கிளிநொச்சி நகரின் அழிவைப் பார்த்தவர்கள் தற்போது மீண்டும் பார்த்தால் நகர்ப்பகுதி சேதமடைந்ததை நம்பமாட்டார்கள். கிளிநொச்சி வரை ரயில் சேவை இடம்பெறுகிறது. போக்குவரத்து வீதி (ஏ-9) மாற்றியமைக்கப்பட்டுள்ளது. ஆனால் நகருக்கு வெளியே உள்ள இடங்களுக்குச் சென்று பார்த்தால் அழிவுகளின் வடுக்கள் நீங்காத நிலை காணப்படுவதுடன் அங்கு வாழும் மக்கள் குடிதண்ணீருக்காக அலைவதையும் காண முடிகிறது.
மாவட்டத்தின் பல இடங்கள் இது வரை மீளக் குடியமர்வு இடம்பெறவில்லை.
இந்த நிலையில் இத்தாவில், கிளாலி, அல்லிப்பளை, இயக்கச்சி, ஊர்வணிகன் பற்று போன்ற இடங்களில் மாகாண சபைத் தேர்தலின் பின்னர் படையினர் சுமார் 200 ஏக்கருக்கு மேல் காணிகளை அபகரித்து முகாம் அமைத்து வருகின்றனர்.

> "–"
> **இத்தாவில், கிளாலி, அல்லிப் பளை, இயக்கச்சி, ஊர்வணிகன் பற்று போன்ற இடங் களில் மாகாண சபைத் தேர்தலின் பின்னர் படையினர் சுமார் 200 ஏக்கருக்கு மேல் காணிகளை அபகரித்து முகாம் அமைத்து வருகின்றனர்.**

இதனால் தமது சொந்த நிலங்களில் மீளக் குடியமர முடியாமல் பொருளாதார ரீதியில் பின் தங்கிய நிலையில் வாழும் மக்கள் மேலும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ் மக்களை அரசு ஏமாற்ற முயன்ற போதிலும் மக்கள் தாம் ஏமாந்து விடவில்லை என்பதை தேர்தலில் வாக்களித்ததன் மூலம் உலகுக்கு தெளிவு படுத்தியுள்ளனர்.
வடக்கு மாகாண சபையின் செயற்திட்டங்களுக்கு எதிர்க்கட்சியும் ஒத்துழைப்பு வழங்குவதாகக் கூறியுள்ளதால் மக்களின் எதிர் பார்ப்புகளுக்கு விரைவில் தீர்வு கிடைக்குமென நம்புகிறோம்" என்றார். (வ-9)

## கடை உடைத்து பொருள்கள் திருட்டு

வலி.வடக்கு,நவ.26
அரியாலை பாரதி வீதியில் உள்ள அழகுசாதனப் பொருள்கள் விற்பனை செய்யப்படும் கடை உடைத்து சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டன.
கடையின் முன்புறக் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த அழகு சாதனப் பொருள்கள் மற்றும் சிறிய அளவிலான பணம் என்பவற்றையும் திருடிச் சென்றுள்ளனர்.



நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தத் துணிகரமான திருட்டுச் சம்பவம் சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடை உரிமையாளரால் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (வ-86)

# அரியாலையில் முதியோர் இல்லம்

கொழும்புத்துறை, நவ.26
அரியாலையில் முதியோர் இல்லம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையம் எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டா ளர்கள் தெரிவித்துள்ளனர்.
அரியாலை ஆனந்தன் வடலி வீதி இல.272 இல் இந்த முதியோர் இல்லம் அமைக்கப்பட்டு வருகிறது.
இந்த சேவை யைப் பெற விரும்புவோர் 077 2571253 என்னும் இலககத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-135)

# கால்நடைகளின் வாழ்விடமாக எழுதுமட்டுவாழ் சந்தை

தென்மராட்சி, நவ.26
வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் எழுதுமட்டுவாழ் சந்தியில் 50 லட்சம் ரூபா செலவில் நவீன முறையில் அமைக்கப்பட்ட பொதுச் சந்தை கால்நடைகளின் இருப்பிடமாக மாறியுள்ளது.
கடந்த 2011 ஆம் ஆண்டு எழுதுமட்டுவாழ்தெற்கு பகுதி மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட போது மீளக் குடியமர்ந்த மக்களின் வேண்டுகோளின் பிரகாரம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் 50 லட்சம் ரூபா செலவில் பொதுச் சந்தை அமைக்கப்பட்டு, 2012 ஆம் ஆண்டு சாவகச்சேரி பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டது.
கட்டடம் திறந்து ஒரு மாத காலத்துக்கு சந்தை இயங்கியதாகவும் அதன் பின்னர் வியாபாரிகள் வேறு சந்தைகளுக்குச் சென்றதால் சந்தைச்சூழல் கவனிப்பாரற்று பற்றைகளாகக் காணப் பட்டன.
பிரதேச சபை உறுப்பினர் இ. தெய்வேந்திரம்பிள்ளையின் முயற்சியால் சந்தை துப்புரவு செய்யப்பட்டு அங்குள்ள விளையாட்டுக் கழகத்தினரால் கரப்பந்தாட்ட மைதானமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. (வ-9)



## வலைத்தளங்கள் தொடர்பில் புதிய சட்டங்கள் தேவை

புதுடில்லி, நவ.26

சமூக வலைதளங்களைக் கட்டுப்படுத்த சட்டம் இயற்றுவதுடன் இவற்றை இந்திய சட்டங்களின் கீழ் கொண்டுவர வேண்டும் என்று மத்திய உளவுத் துறை வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் தலைவர் ஆசிப் இப்ராஹிம் கூறும்போது,

"அண்மைக் காலமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப வேகம் காரணமாக வீட்டில் இருந்தபடியே பல சமூக விரோதச் செயல்கள் பரப்பப்படுகிறன. இது போன்ற சைபர் குற்றங்களைத் தடுப்பது, சவால்களை எதிர்கொள்வது குறித்து அனைவரும் கலந்து பேசி ஆராய வேண்டிய நிலையில் உள்ளோம்.

அண்மைய மோதல்கள் சமூக வலைத்தளங்கள் மூலம் பரவியதை பார்த்து இந்திய பாதுகாப்பு துறையினர் ஒன்றும் செய்ய முடியாதவர்களாக இருந்தனர்.

இது தொடர்பாக இந்தியாவில் இன்னமும் சட்டம் உரிய முறையில் வகுக்கப்படவில்லை. இத்தகைய சமூக வலைத்தளங்களில் கருத்துக்களைப் பதிவு செய்யும் வெளிநாட்டவரையும் இந்திய சட்ட திட்டங்களுக்கு உட்பட்டவராக கொண்டு வந்தால் மட்டுமே இந்தியாவில் சைபர் குற்றங்கள் கட்டுப்படுத்த முடியும்" என்று தெரிவித்தார். (ற)

## அணுமின் நிலையத்துக்கு எதிரான மனு தள்ளுபடி

சென்னை, நவ.26

கல்பாக்கம் அணு மின் நிலையத்தை மூட வேண்டும் என்று கோரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவைத் தள்ளுபடி செய்துள்ளது நீதிமன்றம்.

கல்பாக்கம் அணுமின் நிலையம் சுற்றுச்சூழல் துறை மற்றும் அணுசக்தி துறையின் அனுமதி பெறாமல் 30 ஆண்டுகள் இயங்கி வருகின்றது என்றும், அங்கு பாதுகாப்புக் குறைபாடுகள் காணப்படுகின்றன என்றும் தெரிவித்தே நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

அதுகுறித்து விளக்கம் அளித்துள்ள இந்திய மத்திய அரசு, கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் பாதுகாப்பு சிறப்பாக உள்ளது என கூறியது. இதை தொடர்ந்து மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது. (ற)

## மீண்டும் வருகின்றது புயல்



'ஹெலன்' புயல் ஆந்திராவை துவம்சம் செய்து ஓய்ந்துள்ள நிலையில், புதிதாக உருவாகியுள்ள புயல் ஆந்திராவை நோக்கி நகர்ந்து வருகின்றது. 'லெஹர்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் புயல் அந்தமான் கடலில் உருவாகி ஆந்திராவை நோக்கி நகரத் தொடங்கியுள்ளது. இந்தப் புயல் கரையைக் கடக்கும்போது பெரும் அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்தப் புயல் இன்னும் 5 நாள்களுக்குள் ஆந்திராவைத் தாக்கக் கூடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. மிகக் குறுகிய காலத்தில் ஆந்திரா மூன்று புயல் தாக்கங்களுக்கு உள்ளாகியுள்ளது. (ற)

## மணிப்பூரில் குண்டு வெடிப்பு

உக்ருல், நவ.26

மணிப்பூரில் சக்தி வாய்ந்த வெடிகுண்டு ஒன்று வெடித்துள்ளது. மணிப்பூர் மாநிலம் உக்ருல் மாவட்டத்தில் மியான்மார் எல்லையை ஒட்டியுள்ள புன்க்ரீட்டங் பகுதியிலேயே நேற்றுமுன்தினம் இரவு சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது.

இந்த சம்பவத்தில் உயிர்சேதம் எதுவும் ஏற்படவில்லை. அந்தப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் ஒன்று சேதமடைந்தது.

குறித்த தாக்குதலுக்கு எந்தவொரு தீவிரவாத அமைப்பும் உரிமைகோராத நிலையில் குறித்த குண்டு வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறுகின்றனர். (ற)



### பொதுநலவாய மாநாட்டில் இந்திய அரசு பங்கேற்றமை

# தமிழக மக்களுக்கு பெரும் அவமதிப்பு

### திருமாவளவன் கொதிப்பு

சென்னை, நவ.26

இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்துகொண்டதன் மூலம் தமிழக மக்களை அவமதித்துள்ளது என்று விசனம் தெரிவித்துள்ளார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"தமிழகத்தின் கடும் எதிர்ப்புகளைச் சற்றும் கவனத்தில் கொள்ளாத இந்திய மத்திய அரசு இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்றுள்ளது. இந்திய வெளியுறத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் மாநாட்டில் கலந்துகொண்டார். தமிழர் பிரச்சினைகள் குறித்து எதுவுமே பேசாது மாநாட்டை முடிந்து நாடு திரும்பியுள்ளார். தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்காது



பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொண்டுள்ள இந்திய மத்திய அரசு தமிழக மக்களை அவமதித்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை குறித்து வலியுறுத்தப்படும் என்று பிரிட்டனின் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார். அவரைப் பின்பற்றி இந்திய மத்திய அரசும் நாடாளுமன்றில் இலங்கையில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அது தொடர்பாக பிரதமரை சந்தித்து வலியுறுத்த உள்ளேன். தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமரைச் சந்தித்து வலியுறுத்த வேண்டும்." என்று தெரிவித்துள்ளார். (ற)

## எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிப்பு

### இந்திய இராணுவம் தெரிவிப்பு

புதுடில்லி, நவ.26

இந்திய - பாகிஸ்தான் எல்லையில் தீவிரவாத ஊடுவல்களைத் தடுக்கும் வகையில் கூடுதல் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர் என்று இந்திய இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அடுத்தாண்டு நடைபெறவுள்ள இந்திய நாடாளுமன்றத் தேர்தல்களைச் சீர்குலைப்பதற்கு தீவிரவாத அமைப்புகள் திட்டமிட்டு வருகின்றன என்று கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த இந்திய இராணுவ உயர் அதிகாரி ஒருவர்,

"பொதுவாக குளிர்காலங்களில் இந்தியாவுக்குள் ஊடுருவ தீவிரவாதிகள் அதிக முயற்சி எடுப்பது வழக்கம். இந்த முறை பனிப்பொழிவு சற்று குறைவாக இருப்பதால் இது தீவிரவாதிகளுக்கு சாதகமாக அமைய வாய்ப்பிருக்கிறது.

எனவே தீவிரவாதிகள் ஊடுருவலை முறியடிக்கும் வகையில் எல்லையில் கூடுதலாக படைகளைக் குவித்து வருகிறோம். குளிர் காலத்தைப் பயன்படுத்தி ஏராளமான தீவிரவாதிகள் இந்தியாவிற்குள் ஊடுருவ உள்ளனர் என உளவுத் துறையும் ஏற்கனவே எச்சரித்திருந்தது.

இந்த ஆண்டு இந்திய எல்லையில் தீவிரவாதிகள் ஊடுருவல் இதுவரை மிகவும் குறைவாகவே இருந்துள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஊடுருவ முயன்ற 30க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்நிலையில், தேர்தல்களை சீர்குலைக்கும் வகையில், தற்போது ஊடுருவத் தயாராகி வருகின்றனர் என்று கூறப்படுகிறது. தீவிரவாதிகள் அழிப்பு வேட்டையில் ஜம்மு காஷ்மீர் மாநில காவல்துறை குறிப்பிடத்தக்க உதவிகளை செய்து வருகின்றது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## 254 சட்டத்தரணிகளுடன் நீதிமன்று சென்ற ஸ்டாலின்

சென்னை, நவ.26



தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை அவதூறாகப் பேசினார் என்று தொடரப்பட்ட வழக்கில் மு.க.ஸ்டாலின் நீதிமன்றில் நேற்று முன்னிலையானார்.

திண்டுக்கல்லில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற தி.மு.க. தேர்தல் நிதியளிப்புக் கூட்டத்தில் பங்கேற்றார் மு.க.ஸ்டாலின். அந்தக் கூட்டத்தில் அவர் முதல்வர் ஜெயலலிதாவை அவதூறாக பேசினார் என்று தெரிவித்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கில் ஸ்டாலினை நீதிமன்றில் நேரில் முன்னிலையாக வேண்டும் என்று உத்தரவிடப்பட்டதை அடுத்து திண்டுக்கல் நீதிமன்றில் நேற்று முன்னிலையானார். அவருடன் சென்னை, மதுரை, கரூர், தேனி, திண்டுக்கல், ராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த 254 வழக்கறிஞர்கள் நீதிமன்றுக்கு வந்திருந்தார்கள். அத்துடன் மதுரையில் இருந்து காரில் திண்டுக்கல் சென்ற அவரை 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தி.மு.கவினர் வரவேற்றனர். (ற)

## தனித் தெலுங்கானாவுக்கு வலுக்கின்றது எதிர்ப்பு

### ஜெகன்மோகன் ரெட்டிக்கு ஆதரவாக ஒரிசா முதலமைச்சர் கருத்து

புதுடில்லி, நவ.26

தனித் தெலுங்கானாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜெகன்மோகன் ரெட்டிக்கு ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக் ஆதரவு தெரிவித்துள்ளார்.

ஆந்திரம் மாநிலத்தை இரண்டாகப் பிரித்து தனித் தெலுங்கானா அமைக்கும் இந்திய மத்திய அரசின் முயற்சிக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார் ஜெகன்மோகன் ரெட்டி.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை நேரில் சந்தித்த ஜெகன்மோகன் ரெட்டி, ஆந்திர மாநிலம் பிரிக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அத்துடன் ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக்கையும் நேரில் சென்று சந்தித்து தனது கோரிக்கைக்கு ஆதரவு அளிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்தச் சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த நவீன் பட்நாயக்

"மாநிலப் பிரிவினை என்பது பொது வாக்கெடுப்பு மூலம் நடத்தப்பட வேண்டும். அரசியல்வாதிகளின் குறுகிய ஆதாயங்களுக்காக நடைபெறக் கூடாது. மாநிலப் பிரிவினை மிகவும் உணர்வுப்பூர்வமான பிரச்சினை. அதை நிறைவேற்றும் முன்னர் மக்கள் கருத்தை அறிவது அவசியம்" என்று தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத்தொடர் அடுத்த மாதம் நடைபெறவிருக்கின்றது. இந்தக் கூட்டத்தொடரிலேயே தெலுங்கானா மாநிலம் அமைப்பதற்கான சட்ட வரைவைத் தாக்கல் செய்து நிறைவேற்ற மத்திய அரசு முயற்சித்து வருகின்றது. இந்த நிலையில் சட்ட வரைவை எதிர்க்க வேண்டும் என்று கோரி ஜெகன்மோகன் ரெட்டி பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு திரட்டி வருகின்றார். (ற)

## சீனாவில் நிலநடுக்கம்

பீஜிங், நவ.26
சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவுகோலில் 5.6 ஆகப் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.
இந்த நிலநடுக்கம் மங்கோலியா மாகாணத்தின் குயிமோ நகருக்கு அருகே பூமியின் மேற்பரப்பிலிருந்து 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.
அதேவேளை, ஜிலின் மாகாணத்தின் கிழக்குப் பகுதியில் கடந்த சனிக்கிழமை 5.0 ரிச்டர் அளவில் 3 முறை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. (ற)



தாய்லாந்து அரசுக்கு எதிராக அந்நாட்டுத் தலைநகர் பாங்கொக்கில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசின் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஆளும் அரசு பதவி விலக வேண்டும் என்று கோரி நடத்தப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்களால் அங்கு இயல்பு நிலை முற்றாகப் பாதிப்படைந்துள்ளது. (ற)

## மோசமான காலநிலையால் 8 பேர் சாவு

நியூயோர்க், நவ.26
அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் நிலவும் மோசமான காலநிலையால் பல்வேறு இடங்களில் நிகழ்ந்த சம்பவங்களில் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.
நியூமெக்ஸிகோ மாகாணத்தில் கிழக்குப் பகுதியில் நிலவிய பனிப்பொழிவு மற்றும் உறைபனி காரணமாக ஏற்பட்ட விபத்தில் 4 வயது பெண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. டெக்சாஸ் பகுதியில் சூறாவளி காரணமாக நிகழ்ந்த வாகன விபத்தில் சிக்கி 3 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.
கலிபோர்னியாவில் கடும் புயலுடன் பெய்துவரும் கன மழை காரணமாக கார் மீது மரம் விழுந்து பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)


## ஹோண்டுரஸில் ஜனாதிபதி தேர்தல்

லண்டன், நவ.26
மத்திய அமெரிக்க நாடான ஹோண்டுராஸில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றுள்ளது.
ஹோண்டுராஸ், ஹைதிக்கு அடுத்தபடியாக வறுமை நிறைந்த நாடாகும். இங்குள்ள மக்களில் 71 சதவிகிதம் பேர் வறுமையில் வாழுகின்றனர். இங்கு கடந்த 2009 ஆம் ஆண்டு நடந்த ஆட்சிக்கவிழ்ப்பு சதியில் இடதுசாரிக் கட்சியினரான ஜனாதிபதி மானுவல் ஜெலாயாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. நான்கு வருடங்கள் கழிந்த நிலையில் அடுத்த ஜனாதிபதிக்கான தேர்தல் வாக்கெடுப்பு கடும் பாதுகாப்புகளுக்கிடையே நேற்றுமுன்தினம் நடந்து முடிந்துள்ளது.
அந்நாட்டின் தலைமைத் தேர்தல் அதிகாரியான டேவிட் மடமோரோஸ் இந்தத் தேர்தல் 2009 ஆம் ஆண்டின் ஆட்சி கவிழ்ப்பின் காயங்களை மக்களுக்கு ஆற்றக்கூடும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.
8.5 மில்லியன் மக்கள் தொகை கொண்ட இந்த நாட்டில் ஒரு நாளைக்கு 20 கொலைகள் பதிவு செய்யப்படுவதாகத் தகவல்கள் கூறுகின்றன. (ற)

# சீனா - ஜப்பான் முறுகல்

## விமானப் பாதுகாப்பு மண்டலத்தால் ஆரம்பித்தது பிரச்சினை

வொஷிங்டன், நவ.26
ஜப்பானின் பராமரிப்பில் இருக்கும் இரு தீவுகளை உள்ளடக்கி விமானப் பாதுகாப்பு வான் மண்டலம் ஒன்றை சீனா அறிவித்ததை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.



குறித்த பகுதியில் விமானப் பாதுகாப்பு வான் மண்டலம் ஒன்றை உருவாக்கியிருக்கும் சீனா, அந்தப் பகுதியூடாகப் பறப்பை மேற்கொள்ளும் அனைத்து விமானங்களும் தமது அனுமதியைப் பெறவேண்டும் என்று அறிவித்துள்ளது. அத்துடன் அந்தப் பகுதியை சீனப் போர் விமானங்கள் எந்நேரமும் கண்காணிக்கும் என்றும் கூறியுள்ளது.
சீனாவின் இந்த அறிவிப்புக்கு ஜப்பான் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது. இது ஜப்பானுக்குக் கோபம் ஏற்படுத்துவதற்காகவே மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட செயல் என்றும் அந்நாடு தெரிவித்துள்ளது.
அதேவேளை, சீனாவின் இந்த நடவடிக்கை குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது. இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்கப் பாது காப்புத்துறை அமைச்சர் ஜோன் கெரி, "சீனாவின் இந்த ஒரு தலைப்பட்சமான முடிவு குறித்த பகுதியில் அழுத்தங்களை அதிகரித்து ஜப்பானுக்குப் பாதகத்தை உருவாக்கும். ஜப்பான் எமது நட்பு நாடு என்ற ரீதியில் அதனைப் பாதுகாக்கும் கடப்பாடு எமக்கு உண்டு" என்று தெரிவித்துள்ளார்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சீன பாதுகாப்பு அமைச்சு, "குறித்த பகுதிகள் சீனாவுக்குச் சொந்தமானவை அல்ல என்று கூறுவது ஆதாரமற்றது. அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இதுபோன்ற பொறுப்பற்ற பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.
சர்ச்சைக்குரிய தீவுகள் தொடர்பில் சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படுவதை அடுத்து அந்தப் பகுதியில் பதற்ற நிலை தொடர்கின்றது. (ற)

# ஈரான் உடன்படிக்கை ஒரு திருப்புமுனை

## ஜேர்மனி வெளிவிவகார அமைச்சர் கருத்து

பெர்லின், நவ.26
அணு ஆயுதம் தயாரிக்கும் விடயத்தில் ஈரானுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கை ஒரு திருப்புமுனை என்று தெரிவித்துள்ளார் ஜேர்மன் வெளியுறவுத்துறைஅமைச்சர் கைடோ வெஸ்ட்டர்வெல்.



ஜெனீவாவில் நடத்தப்பட்ட பேச்சுக்களில் ஏறக்குறையை ஈரான் தனது யுரேனிய பயன்பாட்டு மூலம் உருவாக்கும் அணுசக்தி உற்பத்தியை நிறுத்தி வைக்க உடன்பட்டது. அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து ஜேர்மனியின் வெளியுறவு அமைச்சர் தனது டுவிற்றர் சமூக வலைத்தளப் பக்கத்தில், "இந்த உடன்படிக்கையானது ஒரு திருப்புமுனையாக இருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.
எனினும் அதுகுறித்து வேறு எந்த தகவலையும் அவர் தெரிவிக்கவில்லை. (ற)

# நேபாளப் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி முன்னிலை

காத்மாண்ட், நவ.26
நேபாளத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் நேபாள காங்கிரஸ் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.
நேபாளத்தில் 2008ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் மாவோயிஸ்டுகள் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தனர். அதைத் தொடர்ந்து நேபாளத்தில் மன்னராட்சி ஒழிக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி நடைமுறைப் படுத்தப்பட்டது.
நிலையான ஆட்சி அமையாததால், மன்னராட்சிக்கு பின், நேபாளத்தில் அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்படவில்லை. கடந்த 19ஆம் திகதி 601 தொகுதிகளுக்கான நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அந்த தேர்தலில் 120 கட்சிகள் போட்டியிட்டன. 240 பேர் தேர்தலின் மூலமும் 335 பேர் கட்சிகள் பெற்ற வாக்குகளின் விகிதாசார அடிப்படையிலும் 26 பேர் நேரடி நியமனத்தின் மூலமும் தேர்வு செய்யப்பட உள்ளனர்.



தேர்தல் நடந்த 240 தொகுதிகளில் 239 தொகுதிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டு உள்ளன. நேபாள காங்கிரஸ் கட்சி 105 இடங்களிலும், நேபாள கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி 91 இடங்களிலும் ஏனைய கட்சிகள் 18 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன.
காத்மாண்டு மற்றும் சிரா தொகுதிகளில் போட்டியிட்ட முன்னாள் பிரதமர் பிரசாந்தா காத்மாண்டு தொகுதியில் நேபாள காங்கிரஸ் கட்சி வேட்பாளரிடம் தோல்வியடைந்துள்ளார். மற்றொரு தொகுதியான சிராவில் 900 வாக்குகள் வித்தியாசத்தில், பிரசாந்தா வெற்றி பெற்று உள்ளார். (ற)

## தெற்கு அட்லாட்டிக்கில் கடும் நிலநடுக்கம்

லண்டன், நவ.26
பிரிட்டனின் ஃபால்க் லேண்ட்ஸ் தீவுகளுக்கு தென் கிழக்கே தெற்கு அட்லான்டிக் கடற்பகுதியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.
நேற்றுக் காலை ஏற்பட்ட இந்நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7 அலகுகளாகப் பதிவாகியுள்ளது.
நிலநடுக்கம் ஃபால்க்லேண்ட்ஸ் தீவுகளின் தலைநகரமான ஸ்டான்லியில் இருந்து 320 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இடத்தை மையமாகக் கொண்டும், 15 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டது.
நிலநடுக்கம் சக்திவாய்ந்ததாக இருப்பினும் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. (ற)

# சிரிய உள்நாட்டுப் போரில் 11,000 குழந்தைகள் சாவு



அலப்போ, நவ.26
சிரியாவில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் உள்நாட்டுப் போரில் இதுவரை 11 ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகள் உயிரிழந்துள்ளன என்று திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.
சிரியாவில் 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கிய உள்நாட்டுப் போர் இன்று வரை தொடர்கின்றது. அதில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்து இருப்பதுடன், மில்லியன் கணக்கானவர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.
இந்நிலையில் உள்நாட்டுப் போரால் இதுவரையிலும் 11 ஆயிரத்து 420 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர் என்ற அதிர்ச்சி தகவல் தற்போது வெளியாகியுள்ளது. இவர்கள் அனைவரும் 17 வயதுக்குட்பட்டவர்கள். 128 குழந்தைகள் கடந்த ஓகஸ்ட் மாதம் நடந்த இரசாயன தாக்குதலில் உயிரிழந்தனர் என்றும் மேலும் கூறப்படுகின்றது. (ற)

# வரவு - செலவுத் திட்டத்தால் வடக்குக்கு பயனேதுமில்லை

## நாடாளுமன்றத்தில் சரவணபவன் எம்.பி.



வடமாகாண மக்களின் வாக்குகளால் இச்சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இங்கு சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் தொடர்பாக எமது மக்களின் எண்ணங்களை இங்கு முன்வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அது எனது உரிமையும் கூட!

போனவை போனதும், அதன் பின்பும் கூடப் பெரும் அழிவுகளையும் இடர்களையும் சந்தித்து வரும் எமது மக்கள் இந்த வரவு செலவுத் திட்டம் தொடர்பாகச் சில எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருந்ததை எவரும் தவறென்று சொல்லி விட முடியாது.

ஆனால் எமது மக்களுக்குக் கிடைத்தது மிகப்பெரும் ஏமாற்றமே என்பதை நாம் இங்கு சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. இந்த வரவு செலவுத் திட்ட உரையின் போது மேன்மை தங்கிய ஜனாதிபதி நாட்டின் ஏனைய பகுதிகளில் 7.3 வீத அபிவிருத்தி இடம்பெற்ற வேளையில் வடக்குக் கிழக்கில் 22 வீத அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

விமான நிலையங்கள் அமைக்கப்படுவதும், துறைமுகங்கள் விரிவாக்கப்படுவதும், பெருந்தெருக்கள் அகலிக்கப்படுவதும், சுற்றுலா விடுதிகள் அமைக்கப்படுவதும் போரினால் சிதைக்கப்பட்ட எமது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எவ்வகையில் உதவமுடியும் என்பதை நான் இங்கு கேட்டு வைக்க விரும்புகின்றேன். இத்தகைய அபிவிருத்திகளை நாம் வேண்டாம் எனச் சொல்லவில்லை. ஆனால் எதற்கு நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதே இங்கு எழும் கேள்வி.

### வடமாகாண சபைக்கு முன்னுரிமை வழங்கவில்லை

இங்கு கவர்ச்சிகரமான புள்ளி விவரங்கள் முன் வைக்கப்படுகின்றன. ஆனால் சிதைந்து போன எமது மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்பவும், மீண்டும் எமது மக்கள் ஏனையவர்களைப் போல் ஓர் இயல்பு வாழ்வை அனுபவிக்கவும், எந்தவித நிதியும் ஒதுக்கப்படவில்லை என்பதை இங்கு நான் மனவருத்தத்துடன் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

வடமாகாணசபை பெரும்பான்மையான தமிழ் மக்களின் வாக்குகளால் உருவாக்கப்பட்டது. அவர்கள் வடக்கு மாகாணசபைக்கு சில ஆணைகளை வழங்கியிருந்தனர். அவற்றை நிறைவு செய்ய வேண்டியது வடக்கு மாகாணசபையின் ஜனநாயகக் கடமையாகும்.

ஆனால் இன்று அரசு வடமாகாண சபை தொடர்பாக மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் அதன் அதிகாரங்களை நீர்த்துப் போகச் செய்யும் வகையிலேயே அமைந்துள்ளன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

வடமாகாணசபையை மத்திய அரசின் நோக்கங்களை நிறைவேற்றும் ஓர் அமைப்பாக மாற்றவே அரசு சகல விதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது என நாம் சந்தேகிக்கிறோம்.

### மக்கள் ஆணையை நிறைவேற்ற முடியுமா?

13ஆவது அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் மாகாணசபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை நிறைவேற்றவும், அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவும் போதுமானவையல்ல என்பதை நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்துள்ளோம். ஆனால் 13ஆவது அரசியலமைப்பின்படி வழங்கப்பட்ட குறைந்தளவு அதிகாரங்களைக் கூட வடக்கு மாகாண சபைக்கும் அரசு பகிர்ந்தளிக்க மறுப்பது அப்பட்டமான ஒரு ஜனநாயக விரோத நடவடிக்கை என்பதை எந்த ஒரு நியாயமான மனிதராலும் மறுத்துவிட முடியாது.

வடமாகாணசபையின் முதலாவது கூட்டத்திலேயே ஓர் இராணுவ அதிகாரியான ஆளுநர் நீக்கப்பட்டு மக்களின் உணர்வுகளைப் புரிந்து செயற்படத்தக்க ஒரு சிவில் அதிகாரி நியமிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாகாணசபை ஜனநாயக வழிமுறையில் செயற்படவும், இராணுவ வழிமுறையிலான அதிகார துஷ்பிரயோகங்கள் விலக்கப்படவும் இது ஒரு தவிர்க்க முடியாத தேவையாகும்.

ஆனால் அரசோ மேன்மை தங்கிய ஜனாதிபதியோ இத்தீர்மானம் பற்றி இதுவரை எவ்வித நடவடிக் கையும் எடுக்கவில்லை. இன்னும் ஆளுநரின் செயலர் உட்பட உயர் மட்ட அரச அதிகாரிகள் பலரும் ஆளுநரின் கட்டளைகளுக்கு ஏற்ப செயற்படும் நிலையே நிலவுகிறது.

இப்படியான ஓர் இக்கட்டான நிலையில் மாகாணசபை தனது நிர்வாகத்தைச் சீரான முறையில் மேற்கொள்ள முடியுமா? மக்கள் வழங்கிய ஆணையை நிறைவேற்ற முடியுமா? மாகாணசபை அமைக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்பட முடியுமா? எல்லாவற்றையும் விட மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கும், 13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்துக்கும் வழங்கப்படும் கௌரவம் தான் என்ன?

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் தேசிய நல்லிணக்கம் உருவாக்கப்படவேண்டும் என்பது ஒரு முக்கிய அம்சமாகும்.

இன்று அரசு மேற்கொள்ளும் வடமாகாணசபை தொடர்பான நடவடிக்கைகள் தேசிய நல்லிணக்கம் உருவாக்கப்படுவதற்கு விரோத மான அம்சங்களே என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று இலங்கையின் நற்பெயர் பற்றி அதிகம் பேசப்படுகிறது. ஆனால் இலங்கையின் நற்பெயருக்கும், ஜனநாயக வழிமுறைகளுக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் அரசே நடந்து கொள்வது ஒரு பெரும் நகை முரணாகும்.

### சர்வதேச விசாரணை அவசியம்

அண்மையில் இலங்கைக்குப் பயணம் செய்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் திருமதி நவநீதம் பிள்ளை இலங்கை தொடர்பான சுயாதீனமான சர்வதேச விசாரணை ஒன்றை வலியுறுத்தியுள்ளார். பொதுநலவாய தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள வந்த பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூனும் வடபகுதிக்கு பயணம் செய்து நிலைமைகளை நேரில் கண்டறிந்த பின்பு இலங்கை தொடர்பான சர்வதேச விசாரணைக்கு ஆதரவளிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உண்மையான நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் இந்த நிலை ஏற்பட்டிருக்குமா? என்பதை இந்தச் சபையின் ஒவ்வொரு உறுப்பினர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்ற நியாயபூர்வமான கோரிக்கையை நான் உங்கள் முன் வைக்கிறேன்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை நியாயபூர்வமாக அணுகி ஓர் உண்மையான நேரிய நல்லிணக்கத்தை உருவாக்க அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில் மேலும் பல நவநீதம்பிள்ளைகளும், டேவிட் கமரூன்களும் இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்வதை எவராலும் தடுத்துவிட முடி யாது.

இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், காணாமற் போனோர் விவகாரம், ஊடகவியலாளர் கொலைகள் உட்பட ஊடக அடக்குமுறைகள் இன்று சர்வதேச விவகாரங்களாக மாறி விட்டன, தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த திருப்திகரமான முயற்சிகள் எடுக்கப்படாமை உலக நாடுகளின் கண்டனத்துக்கு உட்பட்டுள்ளது.

எனவே இவையெல்லாம் எமது உள்நாட்டு விவகாரங்கள் எனச் சொல்லி தப்பிக்கொள்ள முடியாதபடி நிலைமைகள் விஸ்வரூபம் எடுத்து விட்டன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் அவர்களை இலங்கையின் சுழல் பந்து வீச்சாளர் முரளிதரன் சந்தித்த போது வெளியிட்ட சில கருத்துகள் பற்றி நான் ஒரு சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

### முரளியின் கூத்துக்கு கண்டனம்

இலங்கையில் தனக்குட்பட்ட தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களை மறப்போம் மன்னிப்போம் என அவர் தெரிவித்திருந்தார். இது இவரின் சொந்த விருப்பம். அதை நான் விளக்க விரும்பவில்லை. ஆனால் இலங்கையில் டேவிட் கமரூன் பிழையாக வழிநடத்தப்பட்டார். எனவும் 20 அல்லது 30 பெண்கள் படங்களை வைத்துக் கொண்டு இலங்கை நிலைமைகளைக் கணக்கிடக்கூடாது எனவும் அவர் தெரிவித்த கருத்தை நான் கண்டிக்காமல் விட முடியாது. அது மட்டுமன்றி அப்படிக் கூறுவதற்கான உரிமை அவருக்கு இல்லை எனவும் அவரிடம் ஆனித்தரமாக வலியுறுத்துகின்றேன்.

ஒரு தமிழ்ப் பெண் தன் கணவர் உயிரோடு இருக்கின்றாரா இல்லையா என்ற நிலையில் வாழ்வது எவ்வளவு அவலமானது என்பதை தமிழரான இவர் விளங்கிக் கொள்ளாமல் இருப்பது வியப்பைத் தருகின்றது. தனது தாலியைக் கழற்றுவதா நெற்றிப் பொட்டை அழிப்பதா என்று புரிய முடியாத நிலை எவ்வளவு கொடுமையானது. தனது பிள்ளை, கணவர் காணாமாற்போன ஒரு பெண்ணின் வலியையோ, ஒரு தந்தை காணாமற் போன பிள்ளையின் வலியையோ புரிந்து கொள்ள முடியாத ஒருவர் மனிதர் என்று கருதப்படவே தகுதி இல்லாதவர் என்று நான் கருதுகின்றேன்.

முத்தையா முரளிதரனுக்கு அவர் ஒரு சிறந்த பந்து வீச்சாளர் என்ற அடிப்படையிலும் தமிழர் என்ற வகையிலும் நிறைய அபிமானிகள் உள்ளனர். ஆனால் அவர் தான் ஒரு தமிழர் என்பதையும் மனிதர் என்பதையும் மறந்து இலங்கையில் இன ஒடுக்குமுறைகளை நியாயப்படுத்தும் வகையில் வெளியிட்ட அபத்தமான கருத்து அவரைத் தமிழ் மக்களிடம் மட்டு மன்றி மனிதாபிமானிகளிடமும் வெறுப்புக்குரிய ஒருவராக மாற்றி விட்டது. அது மட்டுமன்றி விளையாட்டுகளில் இனி அவரை எவரும் கணக்கில் எடுக்கப்போவதில்லை.

தான் பிறந்த தமிழினத்துக்கு விரோதமாக மட்டுமன்றி மனிகுலத்துக்கும் விரோதமாகச் செயற்பட்டதன் மூலம் தன்னைத் தானே தனிமைப்படுத்தும் நிலைக்கு அவர் தள்ளப்பட்டு விட்டார். ஒட்டுமொத்தத்தில் இந்த வரவு செலவுத் திட்டம் போரில் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களையும் தமிழ்மக்களின் நியாயமான அபிலாசைகளையும் புறந்தள்ளியே தயாரிக்கப்பட்டுள்ளது. இது தேசிய நல்லிணக்கத்தை உருவாக்கவோ ஒரு நிலையான நீதியான் சமாதானத்தையோ உருவாக்கப் போவதில்லை என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொண்டு எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

# நாட்டின் கல்வித்துறைக்கு மறுசீரமைப்பு அவசியம்

## சம்மாந்துறையில் நீதி அமைச்சர் தெரிவிப்பு

(சம்மாந்துறை நிருபர்)

நாட்டின் கல்வித்துறையில் மறுசீரமைப்பு அவசியம். நாங்கள் அதனை ஏற்படுத்த நாடாளுமன்றத்தில் தனிச் சட்டம் ஒன்றை கொண்டுவர தயாராகி வருகின்றோம்.

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சம்மாந்துறைப் பிரதேசத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அல் அர்ஷப் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:- கல்வியில் அவ்வப்போது தேக்க நிலை காணப்படுகின்ற போது அந்த தேக்க நிலைக்கு தனியாக ஆசிரி யரையோ, அதிபரையோ, பெற்றோர் களையோ குறை கூறுவதை ஏற்க முடியாது.

ஒருங்கிணைந்த செயற்பாட்டில் எங்கோ ஓர் இடத்தில் இடை வெளி ஏற்பட்டுள்ளது என்று தான் பார்க்கப்பட வேண்டும்.

நாம் முன்னேற வேண்டுமாயின் நாட்டின் கல்வித் துறையில் மறுசீரமைப்பு அவசியமாகின்றது. நாங்கள் அதனை செயற்படுத்த நாடாளுமன்றத்தில் தனிச்சட்டம் ஒன்றை கொண்டு வர தயாராகி வருகின் றோம்.

இந்த கல்விச் சட்டத்தை கொண்டு வருவதற்கு முன்பே இருக்கின்ற எங்களுடைய மனித வளத்தையும், பௌதிக வளத்தையும் கொண்டு உச்ச பயன்பாட்டை அடைந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இன்று 1000 பாடசாலைகள் அபிவிருத்தி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வரவு - செலவுத்திட்டத்தில் 6 வீதமான பணம் கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று பல ஆண்டுகளாக தெரி விக்கப்பட்டு வருகின்றபோதும் அந்த இலக்கு இதுவரை எட்டப்படவில்லை.

இந்த வருட வரவு - செலவுத்திட்ட ஒதுக்கீட்டில் கல்விக்கான ஒதுக்கீடு போதியளவில் இல்லை என்று எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்கின்றன.

சம்மாந்துறைப் பிரதேசத்தின் கல்வித்துறை அடைவுகளில் தற்போது பின்னடைவுகள் இருக்கின்றன என்ற விமர்சனம் இருந்தாலும் சம்மாந்துறை என்ற ஊர் கல்வித்துறையில் உச்ச நிலைக்கு முன்னேறிய வரலாறுகள் உண்டு. -என்றார். (ச)

*மன்னார் நகர சபையின்*

## வரவு - செலவுத் திட்டம் தொடர்பான விசேட கூட்டம்



மன்னார், நவ.26
மன்னார் நகர சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பான விசேட கூட்டம் அதன் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் கடந்த 21 ஆம் திகதி இடம் பெற்றது.
ஆசிய அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்த விசேட கூட்டத்தில் மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாசன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ.துரம்,வவுனியா நகர சபையின் கணக்காளர் கே.கஜேந்திரன்,ஆசிய அபிவிருத்தி நிறுவனத்தின் வட மாகாண இணைப்பாளர் கே.சசிதரன், மன்னார் நகர சபையின் செயலாளர் பிரிட்டோ, பொது அமைப்புக்கள்,நகர சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துரையாடி மன்னார் நகர சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் சமர்ப்பிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.
இது தொடர்பாக மன்னார் நகர சபை உறுப்பினர் இரட்ண சிங்கம் குமரேஸ் தெரிவிக்கையில்;
2014 ஆம் ஆண்டு மன்னார் நகர சபைக்குட்பட்ட அனைத்துக் கிராமங்களுக்கும் நன்மை தரக்கூடிய வகையில் இந்த வரவு - செலவுத்திட்ட ஆரம்ப நிகழ்வு இடம் பெற்றது.
இதன்போது வர்த்தகர் சங்கம், மீனவர் சமாசம், மாதர், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினர்.
வரவு - செலவுத்திட்டத்துக்கான முன்மொழிவுகள் முன் வைக்கப்பட்டுள்ள நிலையில் அவை தயாரிக்கப்பட்டு மன்னார் நகர சபையின்கவனத்துக்குகொண்டு வரப்படும்.பின்னர் அது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-12)

*கிளிநொச்சி மாவட்டத்தில்*

# மீளக் குடியமராத 640 குடும்பங்கள்

அக்கராயன், நவ.26
கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னமும் 640 குடும்பங்கள் மீளக் குடியமர வேண்டியுள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் தெரிவித்தார்.
கிளிநொச்சியில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் மிதிவெடிகள் அகற்றப்படாத கிராமங்களில் மக்கள் இதுவரை மீளக் குடியமர்த்தப்படவில்லை.
மேலும், கிளிநொச்சி நகரின் பரவிப்பாஞ்சான் கிராமத்தில் 93 குடும்பங்கள் மீளக்குடியமர வேண்டியுள்ளது.
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள இத்தாவிலில் 88 குடும்பங்களும், முகமாலையில் 222 குடும்பங்களும் , வேம்பொடுகேணியில் 214 குடும்பங்களும், கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் பரவிப்பாஞ்சான் கிராமத்தில் 93 குடும்பங்களும், கிருஷ்ணபுரத்தில் 06 குடும்பங்களும், மலையாளபுரத்தில் ஒரு குடும்பமும், பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் மட்டுவில் நாடு மேற்கில் 16 குடும்பங்களும் மீளக் குடியமர வேண்டியுள்ளன. பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள 3 கிராமங்களிலும் மிதிவெடிகள் அகற்றப்படாததால் மக்கள் மீளக் குடியமரவில்லை.
கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 3 கிராமங்களிலும் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஒரு கிராமத்தில் இராணுவமும், பொலிஸாரும் நிலை கொண்டுள்ளனர். இதனால் இங்கு மீளக்குடியமர்வு இடம்பெறவில்லையென அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

### குறைந்த அளவில் உர விநியோகம்

வேப்பங்குளம், நவ.26
வவுனியாவில் இம்முறை பெரும்போக நெற்செய்கைக்கான மானிய உரம் குறைந்த அளவில் விநியோகம் செய்யப்படுவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.
இது தொடர்பாக கமநல சேவைகள் நிலையத்தின் உயரதிகாரியுடன் தொடர்பு கொண்ட கேட்டபோது;
இம்முறை மானிய அடிப்படையில் விநியோகம் செய்வதற்கென குறைந்த அளவில் உரம் வழங்கப்பட்டதால் இந்த நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவித்தார்.
தற்போது அளவு குறைக்கப்பட்டுள்ளதால் தாம் மேலதிகமாகத் தேவைப்படும் உரத்தைக் கொள்வனவு செய்வதில் நெருக்கடியை எதிர் கொள்வதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (க-421)



கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி ஒருவருக்கு அதற்கான நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் கிளிநொச்சி அரச அதிபரும், வடமாகாண பிரதிப் பிரதம செயலாளருமான தி.இராசநாயகம் பரிசில் வழங்குகின்றார். (க-6)

## ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய கோரிக்கை

*கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் கடிதம்*

மாங்குளம், நவ.26
கரைச்சிப் பிரதேச சபையில் நிலவும் ஆளணிப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யுமாறு சபைத் தவிசாளர் நா.வை. குகராசா வடமாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கடிதம் மூலமாகக் கோரிக்கை விடுத்துள்ளார்.
அந்தக் கடிதத்தில்;
கரைச்சிப் பிரதேச சபையானது வன்னியில் இடம்பெற்ற போரின் பின்னர் மீள் உருவாக்கம் பெற்ற சபையாகும். இந்தச் சபையானது சுகாதாரம், வருமானம், கட்டுமானம் சார் அபிவிருத்திதொடர்பில் குறைந்த ஆளணியோடும் பல்வேறு அகப்புறத் தாக்கத்தோடும் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டிய நிலையில் உள்ளது.
இந்தப் பிரதேச சபையில் 104 பேருக்கான ஆளணி உள்ள போதிலும் 67 பேர் மட்டுமே கடமையாற்றுகின்றனர். இன்னமும் 37 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளது. இதனைவிட 3 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் ஒருவர் கூட தற்போது நியமிக்கப்படவில்லை. எமது தேவைகளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பங்களிப்புடனேயே நிறைவேற்றி வருகின்றோம்.
தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்பார்வை செய்வதற்கு பொறியியலாளர்கள் எவரும் இல்லை. வருமான வரி அறவிடும் உத்தியோகத்தரும் இளைப்பாறிவிட்டதால் பல்வேறு சிரமங்கள் தோன்றியுள்ளன.
மேலும் ஏ-9 வீதியில் அமைந்திருக்கும் கிளிநொச்சிப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்த உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடங்களைநிரப்புவதற்கு ஆவன செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. (க-422)

## கால்நடைகளை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை

வவுனியா, நவ.26
வவுனியாவில் இரவு வேளைகளில் வீதிகளில் அலைந்து திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு அவற்றின் உரிமையாளர்களுக்கு பொலிஸார் அறிவித்தல் விடுத்து வருகின்றனர்.
தற்போது காலபோக நெற்செய்கை இடம்பெற்று வருவதாலும், வீதி விபத்துகள் இடம் பெறுவதாலும் இந்த அறிவித்தலை பொலிஸார் விடுத்து வருகின்றனர்.
இரவுவேளைகளில் திரியும் கால்நடைகள் விவசாய நிலங்களை அழித்து வருகின்றன. மேலும் வீதிகளின் குறுக்கே படுத்திருப்பதால் விபத்துக்களும் ஏற்படுகின்றன. பொலிஸார் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நட வடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். மேலும் பிடிக்கப்பட்ட கால் நடைகளின் உரிமையாளர்கள் மீது வழக்குத் தொடரப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-421)

## பெரும்போக நெற்செய்கை தொடர்பான கலந்துரையாடல்

*மன்னார் மேலதிக அரச அதிபர் தலைமையில்*





மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் பெரும்போக நெற்செய்கை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.
மன்னாரில் பெரும்போகச் செய்கைக்கான சாதக, பாதக நிலைமைகளை ஆராயும் இரண்டாம் கட்ட கலந்துரையாடலாகஇதுஇடம்பெற்றுள்ளது.
நானாட்டான் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இந்த மாதம் 22ஆம் திகதி மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.
இம்முறை மன்னார் மாவட்டத்தில் பெரும்போகச் செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயிகள் முழுமூச்சில் ஈடுபட்டபோதிலும் மழைவீழ்ச்சி குறைவாக உள்ளதால் ஏமாற்றமடைந்துள்ளனர்.
இந்த நிலையில் பெரும் போகச் செய்கைக்கான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் இரண்டாம் கட்ட கலந்துரையாடலில் பெருமளவிலான விவசாயிகள், கால்நடை வளர்ப்பாளர்கள், கமக்கார அமைப்பினர் உள்ளிட்ட பல அமைப்புக்களினதும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.
கடந்த மாதம் இது போன்றதொரு கலந்துரையாடல் உயிலங்குளம் பகுதியில் இடம்பெற்றிருந்தது.
இதன் போது கட்டுக்கரைக் குளத்தின் சேமிப்பில் உள்ள சுமார் 6,300 ஏக்கர் அடி நீரைப் பயன் படுத்தி மன்னார் மாவட்டத்தில் சுமார் 24,438 ஏக்கர் நிலப்பரப்பில் இம்முறை கால போகச்செய்கையை முன்னெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.
ஆயினும் அந்த நிலை தற்போது மாறியிருக்கும் நிலையில் சுமார் 3,000 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் புழுதி விதைப்பை யாவது காப்பாற்ற வேண்டிய தேவைப்பாடு எழுந்துள்ளது.
இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செயலர் சந்திரய்யா, மாவட்ட உதவிச்செயலாளர் எஸ்.பரமதாஸ், நீர்ப்பாசனப் பொறியியலாளர் மற்றும் துறை சார் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-86)

## பஸ் நிலையத்தில் நவீன மலசலகூடம்



புதிய நவீன முறையிலான பொது மலசல கூடத் தொகுதி ஒன்று மன்னார் தனியார் பஸ் நிலையத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்றது.
தேசிய நீர்வழங்கல் அமைச்சின் ஏற்பாட்டுக்கு அமைவாக குறித்த நவீன பொது மலசல கூடம் அமைக்கப்பட்டு வருகின்றது.
இந்த பிரதான பஸ் நிலையத்தில் நெடுங்காலமாகப் பொது மலசல கூடம் ஒன்று இல்லாத நிலை காணப்பட்டது.
இதனால் உள்ளூர் மற்றும் வெளியூர் பயணிகள் பல சிரமங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.
பொது மலசலகூடத்தை இங்கு அமைத்து வழங்குமாறு பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் நவீன முறையிலான பொது மலசல கூடத் தொகுதி ஒன்றை அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியின் மூலமாக இந்த நவீன பொது மலசலகூடம் அமைக்கப்பட்டு வருகின்றது.
இதற்கென 5.4 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு வேலைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.
குறித்த நவீன மலசலகூடம் அமைத்து கொடுப்பதன் மூலமாகப் பயணிகள் அசௌகரியமின்றித் தமது பயணங்களை மேற்கொள்வதற்குவழிசமைத்து கொடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (க-12)


# சுயதொழில் உபகரணம் மக்களுக்கு கிடைத்தன



மட்டக்களப்பு,நவ.26
காத்தான்குடி பிரதேசத்திலுள்ள 3 குடும்பங்களுக்கு சுயதொழிலுக்கான உபகரணங்கள் சனிக்கிழமை வழங்கப்பட்டன.
பெண்களுக்கான வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இந்த நிலையில், வை.எம்.எம்.ஏ. நிறுவனத்தின் பெண்கள் பிரிவின் நிதி உதவியில் 3 குடும்பங்களுக்குச் சுயதொழிலுக்கான உபகரணங்களும் காஸ் அடுப்புக்களும் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வில் காத்தான்குடி உதவிப் பிரதேச செயலர் ஏ.சி. அகமட் அப்கர், பெண்களுக்கான வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளரும் காத்தான்குடி நகரசபை உறுப்பினருமான சல்மா ஹம்சா உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

# இம்முறை மட்டக்களப்பில் பாரம்பரிய நெற் செய்கை

மட்டக்களப்பு,நவ.26
மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன் முறையாக பாரம்பரிய நெல்லினம் இந்தமுறை பெரும்போகத்தின்போது பயிரிடப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட செயலக விவசாய திணைக்களப் பணிப்பாளர் கே.உலகநாதன் தெரிவித்தார்.
இந்த மாவட்டத்தில் இத்தகைய பாரம்பரிய நெல்லினம் 600 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.
மடத்தவாலு, பச்சைப்பெருமாள், புருளுத்தொட, கருப்புச் சீனெட்டி போன்ற பாரம்பரிய நெல்லினங்களே இவ்வாறு பயிரிடப்பட்டுள்ளன.
இவை வாகரை, செங்கலடி, வவுணதீவு, ஆரையம்பதி, வெல்லாவெளி, கிரான், களுவாஞ்சிக்குடி போன்ற இடங்களில் பயிரிடப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.



குறைந்த நிலங்களில் செய்கை பண்ணப்பட்டுள்ள இந்த நெல்லினங்களின் அறுவடையை மூன்றறை மாதங்களில் செய்ய முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.
இந்த மாவட்டத்தில் பெரும்போக செய்கைக்கென 17,000 கிலோ பாரம்பரிய விதை நெல்லினங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

### இந்திய உதவித்திட்டம் மூலம்

# 3,000 வீடுகள் மட்டக்களப்பில்

ஏறாவூர்,நவ.26
இந்திய உதவித் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 3,000 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.
இந்தத் தகவலை மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன் தெரிவித்தார்.
போரால் பாதிக்கப்பட்ட பெண்களின் ஒன்று கூடல் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்திய வீடமைப்புத் திட்டத்தில் போரி



னால் பாதிக்கப்பட்ட பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு மேலதிக புள்ளித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட் டுள்ளது.
இந்திய வீட்டுத் திட்டத்தின் பயனாளிகள் தெரிவுக்காக ஏற்கெனவே ஒரு புள்ளித் திட்டம் நடை முறையிலிருந்தாலும், அதில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள் முன்னுரிமை பெற வேண்டும் என்பதற்காக மட்டக்களப்பு அரச அதிபர் அந்தக் குடும்பங்களுக்கு மேலதிகமாக 30 புள்ளிகள் வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மேலும் எட்டாயிரம் வீடுகள் தேவைப்படுகின்றன.
அதேவேளை இந்திய உதவித் திட்டத்தின் கீழ் மூவாயிரம் வீடுகள் கிடைத்துள்ளன. -என்றார். (ச)

# கிழக்கு மாகாணத்தில் காணிப் பிரச்சினைகள்

### பிள்ளையான் தெரிவிப்பு

மட்டக்களப்பு,நவ.26
கிழக்கு மாகாணத்தில் காணி மற்றும் சமூகம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் எழுந்துள்ளன என்று கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.
மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட சாதனையாளர் பாராட்டு விழா சனிக்கிழமை கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் அவர் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களுடைய கல்வியை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு எங்கள் எல்லோருக்கும் இருக்கின்றது.
அதற்காக நாங்கள் பல திட்டங்களைத் தீட்டியிருக்கின்றோம்.
இதில் அரசியல் பேதங்களை



மறந்து அனைவரும் இணைந்து கல்விப்பணியை ஆற்றினால் எமக்கு வெற்றி கிடைக்கும். மட்டக்களப்பு மாவட்டம் வறுமையை எதிர் நோக்கியுள்ளது. மட்டக்களப்பில் எல்லோரும் வறுமை என்று எந்த நேரமும் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.
பிறக்கும் போது வறுமையாக இருந்தாலும் இறக்கும்போது வறுமையாக இருக்கமுடியாது.
இந்த எண்ணம் அனைத்து மாணவர்களுக்கும் இருக்க வேண்டும். -என்றார். (ச-32)

# வவுணதீவில் விழிப்புணர்வு வேலைத்திட்டம்

மட்டக்களப்பு,நவ.26
வவுணதீவுப் பிரதேசத்தில் உள்ள மக்களின் அரச காணி அனுமதிப்பத்திரம் பெறல் மற்றும் காணி தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைகள் குறித்து எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான கருத்தரங்கு இடம் பெற்றது.
மண்முனை மேற்கு, வவுணதீவு உதவிப் பிரதேச செயலர் எஸ்.ராஜ்பாபு தலைமையில் இடம்பெற்றஇந்த கருத்தரங்கில், பொதுமக்கள்,கிராம சேவை அதிகாரிகள்,சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரிப் பயிலுநர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச)



அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் 22 ஆவது சாமஸ்ரீ சமுக சேவையாளர் விருது வழங்கும் விழா திருகோணமலை சென் மேரிஸ் கல்லூரியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத், திருமலை மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மீனவர் பிரச்சினை குறித்து ஆராய்வு

மட்டக்களப்பு, நவ.26
கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் உயர் மட்டக் கலந்துரையாடல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.
அம்பாறை மாவட்ட மீனவ சம்மேளனத்தினரால் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.
கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சர் ராஜித சேனாரட்ன தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், கடற்றொழில் நீரியல் வளங்கள் பிரதியமைச்சர் சரத் குமார குணரட்ண, நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட மீனவ சம்மேளன பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.
அம்பாறை மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளான எரிபொருள் மானிய வழங்கலில் தாமதம், உயிர் பாதுகாப்பு அங்கி வழங்காமை, தரிப்பிடங்களில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் உட்பட பல பிரச்சினைகள் பேசப்பட்டு தீர்வுகள் காணப்பட்டன. (ச-10)

# காணாமற்போனோர் பதிவுகள் வவுணதீவில்

மட்டக்களப்பு,நவ.26
மட்டக்களப்பில் காணாமற்போனோரின் விவரங்களை பதிவு செய்யும் நடவடிக்கையை இலங்கை தாயக மக்கள் மறுமலர்ச்சிக் கழகம் முன்னெடுத்து வருகின்றது.
இந்தப் பதிவு வவுணதீவுப் பிரதேசத்தில் இடம்பெற்றது.
இந்தப் பதிவை இலங்கை தாயக மக்கள் மறுமலர்ச்சிக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிபபாளர் அ.செல்வேந்திரன் மேற்கொண்டார்.
இந்தப் பதிவு நடவடிக்கைகள் மட்டக்களப்பில் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

“-”
பதிவு நடவடிக்கைகள் மட்டக்களப்பில் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

பதிவை மேற்கொள்ளாதவர்கள் மட்டக்களப்பு தெற்கு, எல்லை வீதியில் அமைந்துள்ள தங்களது அலுவலகத்துக்கு வந்து பதிவை மேற்கொள்ள முடியும் என்று இலங்கை தாயக மக்கள் மறுமலர்ச்சிக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கூறினார். (ச)

# சர்வமத தலைவர்களுடனான சந்திப்பு

மட்டக்களப்பு,நவ.26
படையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட அம்பாறை மாவட்ட சர்வமத தலைவர்களுடனான சந்திப்பு அக்கரைப்பற்று அதாஉல்லா அரங்கில் இடம்பெற்றது.
அம்பாறை மாவட்ட இராணுவப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் ஹரின் பெரேரா தலைமையில்





இடம்பெற்ற இந்தநிகழ்வுக்கு கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி லால் பெரேரா கலந்து கொண்டு அம்பாறை மாவட்டத்தில் ஏற்படும் அசம்பாவிதம் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விளக்கம் தெரிவித்தார்.
இதேவேளை நிந்தவூர் பிரதேசத்தில் 'கிறிஸ் மனிதன்' வேடம் தரித்து தற்போது களவுகள் இடம்பெறுவதால் மக்கள் மத்தியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.
இது தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினர் யாருமே கண்டு கொள்ளாமல் உள்ளனர் என்று நிந்தவூர் பிரதேசத்திலிருந்து வருகை தந்த மதத் தலைவர்களால் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி லால் பெரேராவிடம் தெரிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிவில் பாதுகாப்பு பொறுப்பதிகாரி ஹரின் வீரசிங்க உட்பட பல இராணுவப் பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்டனர். (ச)

# சர்வதேசத்தின் தலையீட்டை நிச்சயம் எதிர்கொள்ளவேண்டும்

## விசாரணைகள் உரிய காலத்தில் முடிக்கப்பட வேண்டும் என்கிறது ஐ.தே.க.



இலங்கை அரசு வாக்குறுதி அளித்துள்ளதன்படி நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்தி, விசாரணைகளை நடத்தி உரிய காலத்தில் முடிக்காவிட்டால் சர்வதேச தலையீடுகளை எதிர்கொண்டேயாக வேண்டிவரும் என பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அரசு சர்வதேச விசாரணைகளுக்கு ஒத்துழைக்கப் போவதில்லை என்று நாட்டு மக்களுக்குக் கூறிக்கொண்டு, மறுபுறத்தில் சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிவதற்கான வழிமுறைகளை பொதுநலவாய மாநாட்டின் ஊடாக ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்று ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் பிபிசிக்கு தெரிவித்துள்ளமை வருமாறு.

பொதுநலவாய மாநாட்டின் இறுதியில் அரசு தலைவர்கள் வெளியிட்டுள்ள இணக்கப்பாடுகளின்படி, இலங்கையின் மனித உரிமை விவகாரம் சர்வதேச நீதிமன்றம் ஒன்றின் முன்னால் கொண்டு செல்லப்பட வழியேற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய மாநாட்டின் இறுதியில் அரச தலைவர்கள் இணங்கி வெளியிட்ட பிரகடனத்தில் உள்ள 98 விடயங்களில் 39ஆவது பிரிவு மிக முக்கியமானது. அதன்படி, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான வியன்னா பிரகடனத்தை நடை முறைப்படுத்துவதற்கு இலங்கை ஒப்புக் கொண்டுள்ளது.

இதனால், மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச சட்டதிட்டங்களுக்கு இலங்கை மதிப்பளிக்க வேண்டும். அதனை மீறினால் சர்வதேச சமூகம் இந்த விவகாரத்தில் தலையிட முடியும். ஆனால் இந்த அரசு நாட்டு மக்களுக்கு அதை மறைக்கிறது.

இலங்கை வாக்குறுதி அளித்துள்ளதன்படி, தம்மீதுள்ள மனித உரிமைக் குற்றச்சாட்டுக்களை எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் விசாரித்து முடிக்க வேண்டும். இல்லாவிட் டால் சர்வதேச மட்டடத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் கூறியிருந்தார்.

எங்களின் விடயங்களில் சர்வதேசம் விரல் நுழைக்க ஏன் நீங்கள் இடமளிக்க வேண்டும் என்றுதான் நாங்கள் அரசிடம் கேட்கிறோம்?

இலங்கையின் எந்தவொரு குடிமகனையும் போர்க் குற்ற நீதிமன்றத்துக்கோ வேறு எந்த நீதிமன்றத்துக்கோ கொண்டுசெல்ல சட்டம் எதுவும் இல்லை. 2002ஆம் ஆண்டில் ரோம் சமவாயம் கைச்சாத்திடப்பட்டபோது அப்போதைய இலங்கைப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அதில் கைச்சாத்திடவில்லை. - எனத் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவின் 10 இறக்குமதி பொருள்களுக்கு வரி விலக்கு

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 10 பொருட்களுக்கு அரசு வரி விலக்கு அளித்துள்ளது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்படாத பொருள்களுக்கே இந்த வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்குமாறு இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வந்த நிலையில், அரசு கடந்த 22 ஆம் திகதி சமர்ப்பித்த 2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தினூடாக அப்பொருட்களுக்கு வரி விலக் களித்தது.

## உலோக குழாய்களை திருடிய ஆறு சந்தேகநபர்கள் கைது

கொட்டாவ - கட்டுநாயக்க அதிவேக வீதி அமைப்புப் பணிகளுக்கென வைக்கப்பட்டிருந்த உலோக குழாய்களைத் திருடிய ஆறு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துருகிரிய பொலிஸ் பிரிவில் போரே பிரதேசத்தில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் அத்துருகிரிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் மேலும் பல குற்றச் செயல்கள் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

மொத்தமாக 127 குழாய்களை இவர்கள் திருடியுள்ளனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# காணி, பொலிஸ் அதிகாரங்களை அரசு ஒருபோதும் வழங்காது


காணி, பொலிஸ் அதிகாரங்களை அரசு ஒருபோதும் வழங்காது. அதற்காகப் போராடுவதில் எந்தவித பயனும் இல்லை என ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் விசேட சித்திபெற்ற மாணவர்களையும் அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வொன்று ஜிந்துப்பிட்டி விவேகானந்த சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒரு மாகாணசபை மூலம் எமக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் என்ற இரண்டே இரண்டு வரப்பிரசாதங்கள் கிடைத்துள்ளன. இவற்றை அரசு ஒருபோதும் வழங்கப் போவதில்லை. அதற்காக சண்டையிட்டும் எவ்வித பயனும் இல்லை.

மேலும், மாகாண சபை மூலம் கிடைக்கபெற்றுள்ள ஏனைய வரப்பிரசாதங்களான



கல்வி, சுகாதாரம், போக்குவரத்து முதலானவற்றில் சுகாதாரம் மற்றும் போக்குவரத்து ஆகியவற்றிலும் மத்திய அரசு தலையிடுகின்றது. ஆகவே, எங்களுக்குக் கிடைத்துள்ள ஒரே வரப்பிரசாதம் கல்வி தான். - எனத் தெரிவித்துள்ளார்.

## 5ஆம் தர பரீட்சை குறித்த அறிக்கை சில வாரங்களில்

5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து கல்வியாளர்களிடம் பெறப்பட்ட கருத்துகள் அடங்கிய அறிக்கை அடுத்த சில வாரங்களில் வெளியிடப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இம்முறை சிறுவர் தினத்தில் புலமை பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப் பட்டதால் ஏற்பட்டுள்ள சர்ச்சைக்குரிய நிலை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முறைப்பாட்டின் அடிப்படையில் 30 கல்வியாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோருடன் பேச்சு நடத்திய மனித உரிமைகள் ஆணைக் குழு, அதன் இறுதி அறிக்கையை இன்னும் சில வாரங்களில் வெளியிடும் என மனித உரிமைகள் ஆணையாளர் கலாநிதி பிரதிபா மகாநாம ஹேவா தெரிவித்துள்ளார்.

# பராக்கிரமபாகு போலவே நானும் செயற்படுவேன்

## அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவிப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல்வேறு தடைகளையும் பிரச்சினைகளையும் தாண்டி நாட்டுக்காக உழைக்கின்றார். நானும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை போன்றவன். எனது எதிராளிகள், போட்டியாளர்களை நினைத்து நான் ஒருபோதும் பயப்படவில்லை. பராக்கிரமாபாகு மன்னனைப் போன்று என்னைத் தேர்வு செய்த மக்களுக்காக எனது பணிகளை முன்னெடுப்பேன் என பொது மக்கள் உறவுகள் அமைச்சர் மேர்வின் தெரிவித்துள்ளார்.

களனி பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"நான் மக்களுக்காக செயலாற்றாமல் அமைதியாக இருக்கின்றேன் என எவரும் என்னைப்பார்த்து கூறமுடியாது. நான் சுறுசுறுப்பானவன். நான் களனி பிரதேச மக்களுக்காக மட்டும் செயலாற்றவில்லை. கம்பஹா மாவட்ட மக்களுக்காகவும் செயலாற்றுக்கின்றேன். என்னை தேர்ந்தெடுத்த மக்களுக்காகப் பணி புரிவது எனது கடமையாகும்.



களனி பிரதேச சபையில் இலஞ்ச ஊழல்கள், மோசடிகள் இடம்பெறுகின்றது என நம்பிக்கைக்குரிய ஐந்து பேர் தகவல்களை வழங்கி வருகின்றனர். இத்தகைய செயற்பாடுகளுக்கு எதிராக நான் சரியான நேரத்தில் நடவடிக்கை எடுப்பேன்' எனத் தெரிவித்துள்ளார்.

## துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய தந்தைக்கு 100 வருடங்கள் சிறைத்தண்டனை

10 வயது மகளை நிர்வாணமாகப் படம்பிடித்து பல நாட்களாக துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் தந்தையை குற்றவாளியாக இனங்கண்ட நீதவான் கடும் வேலைகளுடன் கூடிய 100 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதித்துள்ளார்.

கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி பியசீலி விக்ரம சிங்கவே மேற்கண்டவாறு நேற்று தண்டனை விதித்ததுடன் குற்றவாளியான தந்தைக்கு 90 ஆயிரம் ரூபா தண்டமும் ஒரு இலட்சம் ரூபா நட்டஈடும் வழங்குமாறு உத்தரவிட்டார்.

தன்னுடைய மகளுக்கு பாதுகாப்பாக இருக்கவேண்டிய தந்தையே துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி இருப்பதால் அதனை தெளிவுப்படுத்துவ தற்கு சிங்களத்தில் வார்த்தைகள் இல்லை என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

# அரச தாதியர், மருத்துவர் நாளை பணிப் பகிஷ்கரிப்பு

அரச வைத்தியசாலைகளின் தாதிகளும் துணை மருத்துவர்களும் நாளை தொடக்கம் 48 மணித்தியால வேலைநிறுத்தமொன்றை நடத்தவுள்ளார்கள்.

தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய உதவிப்படிகளை அரசு இழுத்தடிப்பதைக் கண்டித்தே இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது என தாதியர் மற்றும் துணை மருத்துவர் கூட்டிணைப்பின் அமைப்பாளர் சமன்ரத்னபிரிய தெரிவிக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பல தடவைகள் எமது கோரிக்கைகளை சுகாதார அமைச்சுக்கு அறிவித்த போதிலும் இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை. அமைச்சின் உயரதிகாரிகள் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய சகல உதவித் தொகைகளையும் ஊக்குவிப்புத் தொகைகளையும் கிரமமாகப் பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால் எங்களுக்கான கொடுப்பனவுகளைப் புறக்கணித்து வருகிறார்கள்.

எங்களது பிரதான கோரிக்கைகளில் ஆயிரம் ரூபா அனர்த்த உதவிப்படி, போக்குவரத்து உதவிப்படி ஆகியவற்றுடன் மேலதிக வேலைக்கு மணித்தியாலம் ஒன்றுக்கு 100 ரூபா வீதம் கொடுப்பனவு ஆகியவை உள்ளடங்குகின்றன. இதுவரை நிதியமைச்சோ, சுகாதார அமைச்சோ எங்களது நியாயமான கோரிக்கையைப் பரிசீலிக்கவில்லையென்பதால் இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளோம்.

நாளை(27ஆம் திகதி) நடைபெறவுள்ள இந்த வேலைநிறுத்தத்தில் நாடெங்குமுள்ள அரச வைத்தியசாலைகள், 12 சுகாதார மையங்கள், சகல மாகாண சுகாதாரப் பணிப்பாளர் காரியாலயங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த தாதியர்களும் துணை மருத்துவர்களும் பங்கேற்பர். - எனக் கூறினார் சமன் ரத்னபிரிய.

# 3 எழுத்து வாகனங்களால் 250 மில்லியன் வருமானம்

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் அண்மையில் அறிமுகப்படுத்திய ஆங்கில எழுத்துக்கள் மூன்று அடங்கிய விசேட வாகனங்களால் இதுவரையில் 250 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டுள்ளது என்று அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முன்னைய வாகனப்பதிவுகளின் போது, இரண்டு ஆங்கில எழுத்துக்களே உள்ளடக்கப்பட்டிருந்தன. இருப்பினும், புதிய நடைமுறைக்கமைய இந்த மூன்றெழுத்து அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த புதிய நடைமுறைக்கமைய முதல் 3 ஆயிரம் இலக்கங்களும் வாடகை வாகனங்களுக்காக பதிவு செய்யப்பட்டு விட்டன என்று திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எஸ்.எச்.ஹரிஸ்சந்திர தெரிவித்துள்ளார்.

ஒரு நாளைக்கு 15 முதல் 20 வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன. ஒரு வாகனத் துக்காக 70 ஆயிரம் ரூபா பதிவுச் கட்டணமாக அறவிடப் படுகின்றது' என்றும் குறிப்பிட்டுள்ளார்

மாதமொன்றுக்கு 30 ஆயிரம் வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன. அவற்றில் 5 ஆயிரம் மோட்டார் சைக்கிள்கள் அடங்குகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மாவீரர் தினத்தை அனுமதியுங்கள்

**போ**ர் முடிவடைந்த பின்னர் ஒவ்வொரு ஆண்டு நவம்பர் மாதமும் ஒருவித பதற்றத்துடனேயே ஆரம்பிக்கிறது. மாதத்தின் இறுதி வாரத்தில் இந்தப் பதற்றம் உச்ச நிலைக்குச் சென்றுவிடுகிறது. வெறும் சர்ச்சைகளாக மட்டுமன்றி, மோசமான உணர்வுச் சிக்கல்களையும் மன அழுத்தங்களையும் தமிழ் மக்களிடம் ஏற்படுத்தி வருகிறது.

விடுதலைப் புலிகளின் காலத்தில் உருவாக்கப்பட்டு பூஜிக்கப்பட்ட மாவீரர் நாள், போரின் பின்னர் தமிழர்களால் கடைப்பிடிக்கப்படக்கூடாத ஒன்று என இராணுவத்தினரும் பொலிஸாரும் காட்டும் கெடுபிடி, அடக்குமுறைப் போக்குத்தான் இதற்குக் காரணம்.

பயங்கரவாதிகளை நினைவுகூருவதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது என அரசு இதற்குக் காரணம் சொல்கிறது. அப்படிச் செய்வது பிரிவினைவாதச் சிந்தனையைத் தொடர்ந்தும் ஊக்குவிப்பதாக அமையும் என்றும் அது கருதுகின்றது. விடுதலைப் புலிகளின் மீள் உருவாக்கத்துக்கு மாவீரர் நாள் துணையாகி விடுமோ என்ற அச்சமும் சந்தேகமும்கூட உண்டு. ஆனால் இந்த அச்சமும் சந்தேகமும் தேவையற்றவை.

அரச படைகளிடம் தஞ்சமடைந்த 11 ஆயிரம் விடுதலைப் புலிகளில் ஒரு சில நூறு பேரைத் தவிர ஏனையவர்களை சமூகமயமாக்கி இருப்பதாகக் கூறிக்கொள்ளும் அரசு இறந்துபோன மாவீரர்களை மட்டும் அதே மனித நேயத்துடன் அணுக மறுப்பது ஏன்? அவர்கள் உயிருடன் இருந்திருந்தால் அவர்களும் இதேபோன்று அரசால் சமூகமயமாக்கப்பட்டிருப்பார்கள் அல்லவா?

மாவீரர்கள் நாள் என்பது பிரிவினைக்கான ஊக்கியாக அமையும் என்ற அரசின் அச்சமும் அர்த்தமற்றது. ஆயுதப் போர் முடிவுக்கு வந்த பின்னர் பிரிவினை என்பது காலச் சாத்தியமற்றது என்பதை உணர்ந்தே, கூட்டாட்சி தேர்தல் முன்மொழிவுக்கு ஆதரவாக கடந்த மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு முழு ஆதரவையும் வழங்கியிருந்தார்கள். அப்படியிருக்கும்போது மாவீரர் நாளால் பிரிவினை எண்ணங்கள் தூண்டப்படும் என்ற வாதம் நியாயமற்றது.

மாவீரர் நாளையொட்டி அடக்குமுறைகளை ஏவிவிட எடுக்கப்படும் எத்தனங்களும், படைத் தளபதிகள் மற்றும் சில அரசியல்வாதிகள் தெரிவிக்கும் கருத்துக்களுமே தமிழர்களிடம் கோப உணர்வைத் தூண்டி பிரிவினைவாத எண்ணங்களை வளர்க்கின்றன என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

மாவீரர் நாள் என்பது, தமிழ் மக்களுக்கு விடிவைப் பெற்றுக் கொடுப்போம் என்ற கனவுடன் தன்னலமற்ற பல இளைஞர்கள் தமது இன்னுயிர்களை ஈந்தமைக்கு நன்றிகூறி அவர்களை நினைவுகூரும் ஒரு நாளே தவிர, அது பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதற்கான நாள் அல்ல. தமக்கு நன்மை தந்த சூரியன் முதற்கொண்டு தம்மைக் காத்த வைரவர் வரையும் கடவுள்களாக வழிபடும் மரபைக் கொண்டவர்கள் தமிழர்கள். அவ்வாறே தன்னலம் பாராது தமக்காக உயிர் நீத்த இளைஞர்களுக்கு அஞ்சலி செலுத்தி வழிபட மாவீரர் நாளையும் வரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாவீரர் நாளிலே துயிலும் இல்லங்களுக்குச் சென்ற ஒவ்வொருவருக்கும் இது தெரிந்திருக்கும். அங்கே கண்ணீரும் அன்பும் நன்றியளித்தலும்தான் முதன்மை பெற்றிருக்கும். வேறு எவையும் அல்ல.

எனவே தஞ்சமடைந்த விடுதலைப் புலிகளை சமூகமயப்படுத்தியதைப் போன்றே உயிரை ஈந்த போராளிகளையும் சமூகமயப்படுத்த அரசு மாவீரர் தினத்தை அனுமதிக்க வேண்டும்.

## இலங்கையில் நல்லிணக்கம்

# தெ.ஆபிரிக்க முயற்சி வெற்றி அளிக்குமா?

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
-கோகுலன்

அரசின் வரவு - செலவுத் திட்டத்தையடுத்து வெளியான வரி அதிகரிப்புகள் பல்வேறு நுகர்வுப் பொருள்களின் விலைகளை அதிகரிக்கச் செய்துள்ளன. இவைகளில் சீனி, மாசிக் கருவாடு, உப்புக் கருவாடு, நெத்தலி, கடலை, பயறு, மரக்கறி எண்ணெய் மற்றும் பழங்கள் என்பன அடங்கும். இந்த விலை அதிகரிப்பானது குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களின் வாழ்க்கைச் செலவை அதிகரித் திருப்பதுடன் சீஸ், பாஸ்டா, சூப் வகை, தானியங்கள், பட்டர், மாஜரின் கட்டுமானப் பொருள்கள், சிமெந்து, இரும்புப் பொருள்கள், பூட்டுகள், இணைப்புகள் போன்றவற்றின் விலைகளும் அதிகரிக்கும் என்று தெரிகிறது. பாவித்த கார்களின் தீர்வையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. முச்சக்கர வாகனங்கள், ஸ்கூட்டர்களின் தீர்வையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. வேறும் பல பாவனைப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கும் என்று தெரிகின்றது. நுகர்வுப் பொருள்களின் விலை அதிகரிப்பானது உள்ளூர் உற்பத்திகளின் பாதுகாப்புக்காக கொண்டு வரப்பட்டது என்று அரசுத் தரப்பில் கூறப்படுகின்றது. ஆனால் இவைக ளில் பல பொருள்கள் உள்ளூரில் செய்யப்படுவதில்லை. உள்ளூரில் செய்யப்படுபவைகளும் போதாமல் உள்ளன.

கடந்த வாரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடமாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராகவும் செயற்படும்படியாக கேட்டுக் கொண்டார். ஏனைய எல்லா மாவட்டங்களிலும் அரச அதிபர் அல்லது மாகாணச் செயலாளர் இந்தக் கூட்டங்களுக்கு தலைமை வகித்து வருகிறார்கள். ஆனால் வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுவுக்கு மாத்திரம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமை வகித்து வந்துள்ளார். இந்த பதவியை ஏற்பதா இல்லையா என்பது குறித்து தாம் இன்னமும் ஒரு முடிவுக்கு வரவில்லையென்று விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இந்தப் பதவியை ஏற்றுக் கொள்வதானது வடக்கில் மேற்கொள்ளப்படும் அநேகமான வளர்ச்சித் திட்டங்களுக்கு மஹிந்த சிந்தனையின் படி செயற்பட வேண்டியிருக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் கருதுகின்றன.

கடந்த வாரம் பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேக் பத்திரிகையாளர் ஒருவருக்கு அளித்திருந்த பேட்டியில் எதிர்வரும் ஜெனீவா மனித உரிமைகள் சபை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக மூன்றாவது தீர்மானம் ஒன்றும் கொண்டு வரப்படுவதற்கான சாத்தியம் இருப்பதாகக் கூறியிருந்தார். ஆனால் அது பற்றி அவர் விவரிக்கவில்லை. ஏற்கெனவே மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள இரண்டு தீர்மானங்களும் அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்டவை. அடுத்த ஆண்டில் கொண்டுவரப்படக் கூடிய தீர்மானம், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் கூட்டு முயற்சியிலானதாக இருக்க முடியும். இந்தியா கடந்த அமெரிக்க தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்துள்ள நிலையில் அடுத்த ஆண்டு என்ன செய்யும் என்று கூற முடியாமல் இருக்கிறது.

பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொண்ட பிரிட்டன் பிரதமரின் செயற்பாடுகளும் கருத்துகளும் சர்ச்சைகளைக் கிளப்பியிருந்தன. இலங்கைக்குபுறப்படுவதற்குமுன்னர்தம்மைச் சந்தித்துப் பேசிய புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புக்களிடம் அவர்களை தாம் கைவிடமாட்டார் என்று கூறியதாகச் செய்திகள் கூறின.

பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த தென் ஆபிரிக்க அதிபர் ஜேகொப் சூமா, இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படுவதற்கான சில யோசனைகளை இலங்கை அரசுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் வழங்கியிருந்தார். உண்மை மற்றும் மீள் நல்லிணக்கம் தொடர்பான அவரது ஆலோசனைகள் இப்போது அரசினால் ஆராயப்பட்டு வருவதாகத் தெரிகின்றது. தமது ஆலோசனைகள் தொடர்பாக அதிபர் சூமா இலங்கை அதிபர் ராஜபக்ஷவுடன் ஏற்கெனவே பேசியுள்ளார் என்றும் அது பற்றி தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினருடன் பேசவிருப்பதாகவும் அறிக்கைகள் கூறின.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் தலைமையிலான குழுவினருடன் அதிபர் சூமா பேச்சுக்கள் நடத்தியுள்ளார். கூட்டமைப்பு இது தொடர்பாக அடக்கி வாசித்ததுடன் ஒரு சில ஊடகங்களுக்கு மாத்திரம் அறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கையில் தென்னாபிரிக்க அதிபர் ஜேகொப் சூமாவுடன் 17.11.2013 அன்று கூட்டமைப்பு சந்திப்பொன்றை நடத்தியதாகவும் பேச்சில் தென்னாபிரிக்க வெளியுறவு அமைச்சர் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. மிக விரைவில் இது பற்றி நாங்கள் மேலும் ஆலோசனைகள் நடத்தவிருக்கிறோம்.

இது பற்றி நீண்டகாலமாக இதில் அக்கறை கொண்டுள்ள இந்தியாவுடனும் வேறு நாடுகளுடனும் பேசுவோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகைச் செய்திகள் குறித்து தென்னாபிரிக்க அதிபர் சூமா விளக்கமளிக்கையில்;

தென்னாபிரிக்காவானது மிக ஆழமான சிக்கல் மிக்க மோதல் நிலையில் இருந்து வெளிப்பட்ட நாடு என்பது எல்லாரும் அறிந்ததே. நாம் ஒரு செயற்பாட்டை முன்னெடுத்தோம், கலந்துரையாடல்கள் மூலம் எமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டோம். பின்னர் பல்வேறு நடைமுறைகளையும் செயற்படுத்தினோம். எமது சவால்களைத் தீர்த்துக்கொள்வதற்கு எங்களிடம் ஒரு நல்ல அனுபவம் இருக்கிறது என்று நம்புகின்றோம். அவைகளை உலகில் உள்ள சகோதர, சகோதரிகளுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றோம் என்றார்.

அவர் மேலும் கூறுகையில்;

இந்த அடிப்படையில்தான் இலங்கை அரசுடனும் எமது செயற்பாடுகளில் பங்காளிகளாக இருந்துள்ள மற்றும் எமது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்ட சில தென்னாபிரிக்க நாடுகளுடனும் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம். நாம் இப்பொழுது எமது பங்களிப்புத் தேவைப்படுகின்றதா என்பதை உறுதி செய்துகொள்வதற்காக உயர் மட்டங்களிலும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளோம். அவர்கள் தென்னாபிரிக்காவும் ஒரு பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்று விரும்புவார்களாகில் அதற்காக ஆயத்தமாக இருக்கிறோம். ஓர் உயர் மட்டத்தை அடையும் வகையில் நாம் தொடர்ச்சியாக எமது உரையாடல்களை வைத்துக்கொள்ள விரும்புகின்றோம். ஏனென்றால் இந்த நாட்டின் பிரச்சினை முற்றுமுழுதாக தீர்க்கப்பட்டு அமைதி உறுதிப்பாடு மற்றும் நல்லிணக்கம் நிலைபெற வேண்டும் என்பதை விரும்புகின்றோம். ஆக எம்மிடம் சில அனுபவங்கள் வழங்கக்கூடியனவாக இருக்கின்றன. அவைகளை இலங்கை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இருப்பதாகக் கருதுகிறோம். அதில் எமக்கு மகிழ்ச்சியும் உண்டு. எனவே அந்தவகையில் சில உதவிகளை வழங்குவதற்கு. எதனையும் செய்வதற்கு தயாராய் இருக்கின்றோம் என்றார்.

பதவியை ஏற்றுக் கொள்வதானது வடக்கில் மேற் கொள்ளப்படும் அநேகமான வளர்ச்சித் திட்டங்களுக்கு மஹிந்த சிந்தனையின்படி செயற்பட வேண்டியிருக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் கருதுகின்றன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே பிரிட்டோறியா இவ்வாறு உதவி புரிய முன் வந்ததிலிருந்து கொழும்புக்கும் பிரிட்டோறியாவுக்குமிடையில் உத்தியோகபற்றற்ற தொடர்புகள் இந்த விடயத்தில் இருந்துவந்துள்ளன. இதில் அந்த நாட்டின் பிரதி வெளியுறவு அமைச்சர் இப்றாகிம் இம்றாகிம் முக்கிய பங்கு வகித்து வந்துள்ளார்.

இரு தரப்புக்குமிடையில் பேச்சு வார்த்தைகளும் தொடர்புகளும் இருந்து வந்த போதிலும் அவை இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்துள்ளன. எல்லா தரப்புகளும் ஒரு புரிந்துணர்வுக்கு வரும் வரை ஊடகங்களுக்குச் செய்திகள் போவதை தென்னாபிரிக்கா விரும்பவில்லையென்று தெரிகின்றது. இந்த விடயமாக சிங்கப்பூரில் இரகசியக் கருத்தரங்கொன்றும் நடைபெற்றிருப்பதாகத் தெரிகின்றது.

இலங்கைத் தரப்பில் கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் விசாரணைகள் முடிவுற வேண்டும் என்று கருதப்பட்டதாகத் தெரிகின்றது. இந்தியாவின் கருத்தை அறிய வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பியதையடுத்து இந்தியா மட்டுமல்ல அமெரிக்கா பிரிட்டன், கனடா போன்ற முக்கிய நாடுகளுடனும் கலந்துரையாடப்பட வேண்டும் என்று தென்னாபிரிக்க விருப்பம் தெரிவித்ததாகத் தெரிகின்றது.

எதுவானாலும் அடுத்த வருடம் மார்ச் மாதம் மனித உரிமைகள் சபையின் மாநாடு முடிவடையும் வரையில் தென்னாபிரிக்காவின் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவது சாத்தியமில்லையென்று கருதப்படுகின்றது. அத்துடன் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷ இன்னும் சில வாரங்களில் மலரவிருக்கும் புத்தாண்டில் பல விதமான சவால்களை எதிர் நோக்கி நிற்கிறார் என்பது மட்டும் நிச்சயம்.

# தேவை அனைத்துலக விசாரணை

இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்களுக்கான உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமறூன், இலங்கை தன்னால் இழைக்கப்பட்ட போர் மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்குப் பதிலளிக்க வேண்டும் என அழுத்தம் கொடுத்துள்ளார். அமைப்பின் விழுமியங்கள் மற்றும் அனைத்துலகச் சட்டங்கள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு, இலங்கைக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள உதவித் திட்டங்கள் மற்றும் பொதுநலவாய அமைப்பின் செயலகத்தால் வழங்கப்பட்டுள்ள உதவிகள் என்பன நிறுத்தப்பட வேண்டும். இதற்குப் பதிலாக, இலங்கையில் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களுக்கு அனைத்துலக விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

இந்நிலையில் மார்ச் 2014 இற்குள் இலங்கை தன்மீதான போர்க் குற்றங்கள் தொடர்பில் சுயாதீன விசாரணையை நிறைவு செய்ய வேண்டும் எனவும் இல்லாவிட்டால் ஐ.நா மனித உரிமைகள் பேரவை யில் இலங்கை மீது அனைத்துலக விசாரணை மேற்கொள்ளப்பட வேண் டும் எனவும் தான் அழுத்தம் கொடுப் பேன் என பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமறூன் இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய உச்சி மாநாட்டின் போது வலியுறுத்தியிருந்தார். ஆனால் பிரதமர் கமறூன் பிரிட்டனுக்குத் திரும்பிச் சென்ற பின்னர், மார்ச் 2014இற்குள் இலங்கையானது சுயாதீன விசாரணையை மேற்கொள் ளத் தொடங்காவிட்டால் அனைத்துலக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தான் அழுத்தம் கொடுப்பேன் என்ற அறிவிப்பை மேற்கொண்டுள்ளார்.

இந்த நிலையில் விசாரணையை மேற்கொள்வதற்கு நீண்ட காலம் எடுக்கும். நாங்கள் மக்களின் மனங்களை மாற்றி மக்களினுடைய சிந்தனைகளை மாற்றி விசார ணையை மேற்கொள்வதற்கு இன்ன மும் கால அவகாசம் தேவைப்படுகிறது. வடக்கில் வாழும் மக்களை மட்டுமன்றி தெற்கில் வாழும் மக்களையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். இந்த வகையில், இந்த விசாரணையை ஒரு வாரத்தில் அல்லது நான்கு மாதங்களில் செய்து முடிக்க வேண்டும் என நீங்கள் கூறமுடி யாது. இது மிகவும் அநீதியானது என இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொது நலவாய உச்சி மாநாட்டின் ஊடக வியலாளர் சந்திப்பின் போது தெரிவித்திருந்தார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பிரதான வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளை ஆராய்ந்து பொது நலவாய அமைப்பின் செயற்திட்டக் குழு தனது கருத்துக்களை வழங்கியுள்ளதாகவும் இதன் அடிப்படையிலேயே தான் இலங்கை விடயத்தை அணுகவுள்ளதாகவும் பொதுநலவாய அமைப்பின் செயலர் கமலேஸ் சர்மா தெரிவித்திருந்தார். இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் ஏற்கனவே பலவந்தமான விசாரணைகளை மேற்கொண்டவர்களால் தலைமை தாங்கப்படும் ஓர் அமைப்பால் வழங்கப்படும் தொழில்நுட்ப உதவியானது எல்லா விதத்திலும் நம்பகமானதாக இருக்க மாட்டாது.

அனைத்துலகத் தலையீட்டுடன் மேற்கொள்ளப்படும் உள்ளக விசாரணையானது இலங்கை அனைத்துலக நியமங்களையும் சட்டங்களையும் மீறுவதைத் தடுக்கவில்லை என்பதைக் கடந்த கால சம்பவங்கள் சுட்டிநிற்கின்றன. இலங்கையில் இடம்பெற்ற 16 முக்கிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு நவம்பர் 2006இல் உள்ளக விசாரணை ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் ஓய்வுபெற்ற இந்தியாவின் பிரதம நீதிபதி பி.என்.பகவதியின் தலைமையில் அனைத்துலக சுயாதீன வல்லுநர்களால் கண்காணிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்ட போதிலும், இதில் இலங்கை அரச அதிகாரிகளின் தலையீடுகள் காணப்பட்டதுடன், அனைத்துலக சுயாதீன வல்லுநர்கள் தமது கடமைகளிலிருந்து விலகிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

உண்மையான மற்றும் மீளிணக்கப்பாட்டிற்கான ஆணைக் குழுவை எடுத்துக்கொண்டால், அடக்கு முறைகள் பரவலாகக் காணப்படுகின்ற ஒரு சூழலில் இதனால் செயற்பட முடியாது என்பது உண்மையாகும். பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாடு இடம்பெற்ற இரண்டு நாள்கள் காணாமற் போனோரின் உறவி னர்களால் ஆர்ப்பாட்டங்கள் மேற் கொள்ளப்பட்டன. ஆனால் இவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதைத் தடுப்பதற்காக இவர்கள் மீது தாக் குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. தமது பிள்ளைகள் எங்கே எனக் கேட்ட மக்கள் பயங்கரவாதிகள் போல் நடத்தப்படுகின்ற ஒரு நாட்டில் உண்மையான மற்றும் மீளிணக்கப்பாட்டிற்கான ஆணைக்குழு எவ்வாறு செயற்பட முடியும் என்பதே இங்கு முன்வைக்கப்படும் கேள்வியாகும்.

இரண்டாவதாக, பொறுப்புக்கூறுதல் என்பது மிக முக்கிய விடயமாகும். மார்ச் 2011ல் ஐ.நா வல்லுநர் குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையில், உண்மை, நீதி, பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுகள் போன்றன உள்ளடங்கலாக போர்க் குற்ற மீறல்கள் தொடர்பில் பொறுப்பளிக் கப்பட வேண்டும். இலங்கை அரசா னது தனது பங்களிப்பை மேற் கொள்ள வேண்டும். தனது குடிமக்க ளின் உரிமைகள் மீறப்படுவதற்கான காரணம் என்ன என்பதற்கு இலங்கை அரசு பொறுப்பளிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், உண்மையான மற்றும் மீளிணக்கப்பாட்டிற்கான ஆணைக் குழுவானது மீறல்கள் தொடர்பில் உண்மையை எடுத்துரைப்பது, இழப்பீடுகளை வழங்குவது போன்றவற்றுக்கு அனுசரணையாக இருக்க முடியும். ஆனால் இலங்கை அரசால் பொறுப்பளிக்க வேண்டிய விடயங்களுக்கு இந்த ஆணைக்குழு என்ன செய்ய முடியும்?

இலங்கையில் தொடரப்பட்ட உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை இராணுவம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்புக்களிலும் தனிப்பட்டவர்களால் தவறிழைக்கப்பட்ட மீறல்களுக்கு பொறுப்பளிப்பது யார் என்பது தொடர்பாக ஆராயப்பட வேண்டும். அனைத்துலக சமூகமானது இவ்வாறான மீறல்கள் தொடர்பில் விசாரணை செய்யவேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது. ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களும் பிரதான போர்க் குற்றவாளிகளாக உள்ளநிலையில், ராஜபக்ஷ போர்க் குற்ற விசாரணையை மேற்கொள் வார் என எதிர்பார்ப்பது சாத்திய மற்றதாகும். இந்த விவாகரத்தை அனைத்துலக விசாரணை ஒன்றின் மூலம் மட்டுமே தீர்க்க முடியும்.

இலங்கையில் போர்க் குற்றங்கள் தொடர்பான அனைத்துலக விசாரணையை மேற்கொள்வதற்கான காலம் கடந்துவிட்டது. இந்நிலையில், அனைத்துலக சமூகமும் பொது நலவாயமும் இலங்கையை சிறு குழந்தை போல் அணுகாது, போர்க் குற்றங்கள் தொடர்பில் இலங்கையின் பொறுப்புக் கூறாத நடவடிக்கைகளை ஒட்டுமொத்ததில் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் மொறிசியஸ் நாட்டின் பிரதமர் கூறியது போன்று உலகத் தலைவர்கள் செயற்பட முன்வர வேண்டும். உண்மையான மற்றும் மீளிணக்கப்பாட்டிற்கான ஆணைக் குழு அல்லது தேசிய விசாரணை வெற்றிபெறுமா அல்லது காலத்தை வீணடித்துவிட்டதா என்பதைப் பார்ப்பதற்கு மார்ச் மாதம் வரை பொறுத்திருக்க வேண்டும். இலங்கை மீதான அனைத்துலக விசாரணையை முன்னெடுப்பதற்கான காலம் இதுவாகும்.

*(நன்றி: புதினப்பலகை)*

# இரப்பைப் புண் Gastric ulcer

மருத்துவர்
திருமதி அ.சுதர்மன்

இன்று பெரும்பாலானவர்களில் காணப்படும் நோய்களில் இந்த இரப்பைப் புண்ணும் ஒன்றாகும். சிறுவர் முதல் பெரியோர் வரை அதிலும் குறிப்பாக பெண்களைப் பாதிக்கும் பெரிய பிரச்சினையாக இந்த இரப்பைப் புண் உள்ளது.

எமது தோலின் மேற்பகுதி இல்லாது போகும்போது அந்தப் பகுதியை "புண்" (ulcer) என்று கூறுகின்றோம். 'புண்' உடலின் எந்தப் பகுதியிலும் ஏற்படலாம். கை, கால் போன்ற இடங்களில் அதிகம் ஏற்படும். இதுவே இரப்பையின் தோல் எடுபடும்போது இரப்பைப் புண் (Gastric ulcer) என்று கூறுகின்றோம்.


ஆனால் இன்று நோயாளிகளாக வைத்தியரிடம் வருபவர்களோ, வைத்தியரிடம் எனக்கு (ulcer) என்று கூறிக் கொண்டு வருகின்றார்கள். அவர்கள் (ulcer) என்று குறிப்பிடுவது இரப்பைப் புண்ணையே.

எமது இரப்பையில் இரப்பைச் சாறு உணவு சமிபாடு அடைவதற்காக சுரக்கப்படுகின்றது. நாம் சாப்பிடாது விடும்போது சுரக்கப்படும் இரப்பைச் சாற்றுக்கு சமிபாடு அடையச் செய்ய உணவு இல்லாது போகும். எனவே இரப்பைச் சாறு இரப்பைச் சுவரை அரித்து விடுகின்றது. இவ்வாறு இரப்பைச் சுவர் அரிபடும் ஆரம்பநிலை இரப்பை அழற்சி (Gastric inflam mation, gastritis) என்று குறிப்பிடப்படும். இது மீண்டும், மீண்டும் அரிபட்டு இரப்பைச் சுவர் அழியும் போது இரப்பைப் புண் (Gastric ulcer) உருவாகின்றது.

ஆக, நாம் சுரக்கப்படும் இரப்பைச் சாறுக்கு ஏற்ப உணவை எமது இரப்பையில் வைத்து இருப்போமானால் இரப்பைச் சாற்றினால் இரப்பைச் சுவர் அரிபடமாட்டாது. எனவே நாம் எமது சாப்பாட்டு நேரத்தை ஒரு ஒழுங்கு முறையின் பிரகாரம் (Time table) உண்ணல் வேண்டும்.

பெண்கள் குறிப்பாக நீண்ட கால விரதங்களை பின்பற்றுவது அவர்களுக்கு இந்த இரப்பைப் புண் ஏற்படுவதற்கு ஏதுவாகின்றது. இது தவிர நாம் அதிகளவு காரம் சேர்ந்த உணவுகள், எண்ணெயில் பொரித்த உணவுகள், அதிகளவு மதுசாரம் (Alcacol) ஆகியவற்றை உண்ணும்போது இரப்பைச் சுவரில் புண் ஏற்படுகின்றது. எமக்கு புண் உள்ளது என்பது அறிகுறியாக எமக்கு நெஞ்செரிவு (Burning sensation of chest), வாந்தி (Vomiting), வயிற்றுநோ (Abdominal pain), வயிற்றோட்டம் (Diarrhoea) இவைகளில் ஒன்றோ அல்லது இரண்டோ அல்லது மேற்கூறிய யாவையுமே ஏற்படலாம். இது தவிர எமக்கு மனதில் கவலை, பயம், பதட்டம் (Stress), (Tension) ஏற்படும்போதும் தூண்டப்படும் நரம்புகளினாலும் இரப்பைச் சாறு அதிகளவு சுரக்கப்படும். எனவே எமக்கு கவலை, பயம் இவைகளினாலும் இரப்பைப் புண் ஏற்படலாம். அதிகளவு வாசனைத் திரவியங்களை(Aromatithings) உணவில் சேர்ப்பது, தேயிலை, கோப்பி இவைகளை அதிகளவு குடிக்கும்போது இவற்றிலுள்ள தனின், Caffin இவைகளுமே இரப்பைச் சுவரில் புண்ணை ஏற்படுத்தும். புகையிலையிலுள்ள நிகொட்டின் (Nicotin) இதுவும் இரப்பையில் புண்ணை ஏற்படுத்தும். எனவே வெற்றிலை உண்பவர்கள், புகைப் பிடிப்பவர்களுக்கும் இரப்பைப் புண் ஏற்படுவது அதிகமாகும்.

சில பக்றீரியா (Bacteria) வகைகளினால் (Helicobacter bacellai) இரப்பையில் தொற்று ஏற்படும் போதும் இரப்பை அழற்சி ஏற்பட்டு இரப்பைப் புண் ஏற்படலாம். இது மிகவும் அரிதான சந்தர்ப்பம் ஆகும். இவ்வாறு இரப்பைப் புண் ஏற்பட இன்னொரு காரணம், எமக்கு வேறு வருத்தங்கள் உள்ளபோது நாம் பாவிக்கும் மருந்துகளின் வீரியத்தினாலும் (Steroids drugs) இரப்பையில் புண் ஏற்படுகின்றது.




மேற்படி காரணங்கள் பல இருப்பினும் இரப்பைப் புண் ஏற்படுவதற்கு அதிகளவு காரணம் நாம் நேர ஒழுங்கின்படி உணவு உண்ணாமையே என்பது யாவருக்கும் தெரிந்ததுதான். இதற்கு எமக்கு உணவு இல்லாமை வறுமைதான் காரணமில்லை. இருக்கும் உணவை உண்பதற்கு நேரமில்லாது ஓடுபவர்களே அநேகம்பேர்.

இரப்பைப் புண்ணுக்கு நிவாரணம் ஆக எமது உணவு உண்ணும் நேரத்தை ஒரு ஒழுங்கு முறையின் பிரகாரம் பின்பற்றுதல் வேண்டும். தினமும் எமது உணவில் ஓர் இலைக்கறி வகையை உண்ணுதல் வேண்டும். பால், மோர் இவைகளை உணவில் சேர்த்தல் வேண்டும். பழங்களில் அன்னாசி தவிர்ந்த பழங்கள் இரப்பைப் புண்ணுக்கு நன்று.

மாமிச உணவுகளில் கோழி இறைச்சி சேர்த்தல் கூடாது. மீன்கள் அதிகம் காரமில்லாது சமைத்து உண்ணலாம். நண்டு பாவித்தல் கூடாது. கணவாய் உண்ணலாம்.

இரப்பைப் புண்ணுக்கு மிகவும் சிறப்பான உணவாக சவ்வரிசியினால் ஆன கஞ்சி, பாயாசம் நல்லது. வில்வம் பழம், நற்சீரகம், கற்றாளைச் சோறு (முற்றிய கற்றாளையின் கீழ்ப்பகுதியில் காணப்படும்), பீர்க்கு, புடோல், சர்க்கரைப் பூசணிக்காய், ஜெலி வகைகள் (Jelly) இவைகளை உணவில் சேர்த்தல் நல்லது.

Butter, Cheesc இவைகளில் செய்யப்பட்ட உணவுகள், Cream biscuits இரப்பைப் புண்ணுக்கு உகந்ததல்ல. எண்ணெயில் பொரித்த உணவுகளான Mixture, Bites, Rolls, Pastry, Chips இவைகளையும் உண் ணல் கூடாது.

இரப்பைப் புண் உள்ளவர்கள் இடை நேர உணவாக (Tiffin) இதரை வாழைப்பழம், Cream இல்லாத Biscuits, வறுத்த கடலை இவற்றை உண்ணலாம்.

இரப்பைப் புண்ணைக் கவனிக்காது விடும்போது இரப்பைப் புற்று நோயாக மாறுவதற்கும் சந்தர்ப்பம் உண்டு. ஆகவே எமது உணவுப் பழக்கத்தை நேர அளவின் பிரகாரம் சீராக உண்டு வரும்போது எமக்கு இரப்பைப் புண் ஏற்படுவதற்கான சந்தர்ப்பத்தைக் குறைக்கலாம்.

பூநகரி பிரதேச செயலகத்தின்

# கட்டடப் பணிகள் டிசெம்பருக்குள் பூர்த்தி

*மீள் எழுச்சித்திட்ட பிரதிப் பணிப்பாளர் தகவல்*

அக்கராயன்,நவ.26

பூநகரி பிரதேச செயலகத்தின் கட்டடப் பணிகள் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் நிறைவு பெற்றுவிடுமென கிளிநொச்சி மாவட்ட மீள் எழுச்சித்திட்ட பிரதிப் பணிப்பாளர் அ.விஜய கிருஸ்ணன் தெரிவித்தார்.

கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீண்டகாலமாகப் பூர்த்தி செய்யப்படாமல் உள்ள பூநகரி பிரதேச செயலகத்தின் கட்டடப் பணிகள் தொடர்பாக கூட்டத்தில் வினா எழுப்பப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மீளக்குடியமர்வின் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட கட்டட வேலை இன்னும் பூர்த்தியாகாததால் மீளக்குடியமர்ந்த மக்கள் பெரும் நெருக் கடிகளை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அண்மையில் தமிழ்மொழித் தின விழா இடம்பெற்றது. கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் தமிழ்ச் சங்கத் தலைவர் அ.திருமருகன் தலைமையில் இடம்பெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும், வடக்கு மாகாண விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் கலந்துகொண்டு மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ-5)

# அபிவிருத்தித் திட்டம் பொன்னகரில் ஆரம்பம்



யாழ்ப்பாணம்,நவ.26

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத் துறைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் பொன்னகர் கிராமத்தில் சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு அண் மையில் இடம் பெற்றது.

இந்திய உதவியுடன் கையளிக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த 50 குடும்பங்களின் வாழ்வாதார நிலையை மேம்படுத்தும் நோக்கில் புலம் பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்தால் மேற்கொள்ளப் பட்ட சுழற்சி முறையிலான கடன் வழங்கல், கிணறு மற்றும் சூரிய மின் சக்தியால் இயங்கும் நீர்ப் பம்பி ஆகியவற்றை உள்ள டக்கிய அபிவிருத்தித் திட்டமே ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், கரைதுறைப் பற்று உதவிப் பிரதேச செயலர் எஸ்.குருபரன், கிராம அலுவலர், மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (வ-5)

# பாடசாலைக்கு வழங்கப்படும் நிதி தொடர்பான விழிப்புணர்வு வேண்டும்

*கூறுகிறார் பிரதிக் கல்விப் பணிப்பாளர்*

அக்கராயன், நவ.26

பாடசாலைகளுக்கு வழங்கப்படும் நிதி தொடர்பாக பாடசாலை நிர்வாகமும் பெற்றோரும் விழிப்பாக இருக்க வேண்டும் என கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.செல் வராஜா தெரிவித்தார்.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் இடம்பெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற் றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பாடசாலைகளின் வளர்ச்சியில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் காட்டுகின்ற அக்கறை பாராட்டுக்குரியது.

குறிப்பாக இந்த விழாவின் வெற்றிக்காக மாணவர்களை வழி நடத்திய ஆசிரியையின் பங்கு சிறப்பானது.

அவர் யாழ்ப்பாணத்தி லிருந்து நாள்தோறும் பாடசாலைக்கு வருகை தந்து மாணவர்களை வழிப்படுத்துவது இலகுவான செயலல்ல.

ஆனால் இந்த ஆசிரியை போன்றவர்களால் மாணவர்களின் கல்வி உயர்ந்த நிலையை அடைந்து வருகின்றது எனவும் தெரிவித்தார். (க-18)

" "

**இந்தப் பாடசாலைகளின் வளர்ச்சியில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் காட்டுகின்ற அக்கறை பாராட்டுக்குரியது.**

## ஒட்டுசுட்டான் ம.விக்கு பழைய மாணவன் உதவி

முல்லைத்தீவு, நவ.26

லண்டனில் வசிக்கும், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் ஒருவர் தாம் கல்வி கற்ற பாடசாலைக்கு பெருமளவு நிதியுதவியை வழங்கியுள்ளார்.

வளர்ந்து வரும் தொழிலதிபரான அல்லிராசா சுபாஸ்கரன் என்பவரே குறித்த பாடசாலைக்கு 10 மில்லியன் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளார்.

அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பிரிட்டனின் சார்பில் வளர்ந்து வரும் தொழிலதிபர் என்ற வகையில் கலந்து கொண்ட இவர், தான் கல்வி கற்ற பாடசாலையை மறக்காது அங்கு சென்று இந்த நிதியுதவியை வழங்கினார். (க-500)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

**உங்களுக்கு எப்படி?**

நாளை

கார்த்திகை-11 புதன்கிழமை 27.11.2013

திதி: நவமி மு.ப.11.25 வரை

நட்சத்திரம்: பூரம் கா.07.22 வரை

சுபநேரம்: 04.42 - 06.12 வரை

இராகுகாலம்: 12.12 - 01.42 வரை



**மேடம்:** சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப் படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.



**இடபம்:** துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும். முன்கோபம் குறையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.



**மிதுனம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியங்களைச் சாதிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஒத்துழைப்பு உண்டு. வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். மாணவர்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள்.



**கடகம்** : பழைய நல்ல சம்பவங்களை நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும்.



**சிங்கம்:** அநாவசிய பேச்சைத் தவிர்ப்பது நல்லது. சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விடயங்களை பகிர்ந்துக் கொள்ளாதீர்கள். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ள வேண்டாம்.



**கன்னி:** மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டாம். யாரையும் எடுத்தெறிந்து பேச வேண்டாம். அரசு காரியங்கள் இழுபறியாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் ஏற்படும்.



**துலாம்:** ஆரவாரமின்றிச் சில வேலைகளை முடிப்பீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. தன்னம்பிக்கை துளிர்விடும். அரச வேலைகளிலிருந்து வந்த தடைகள் நீங்கும்.



**விருச்சிகம்:** மனக்குழப்பங்கள் நீங்கும். நம்பிக்கைக்குரியவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.



**தனுசு:** அதிரடியாகச் செயற்பட்டு சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் வெற்றியுண்டு. மாணவர்களின் சிந்தனைத்திறன் அதிகரிக்கும்.



**மகரம்:** அலைச்சலும், சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள். சிலர் உதவுவதைப் போல் உபத்திரவம் தருவார்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.



**கும்பம்:** சில தினங்களாக முடியாமல் இழுத்தடித்த காரியங்களெல்லாம் இனி முடிவுக்கு வரும். அரச வேலைகளில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**மீனம்:** மன உளைச்சல் நீங்கும். கலகலப்பாக சிரித்துப்பேசும் சூழல் அமையும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.

# சுடோக்கு

**எண் விளையாட்டு**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 9 | 3 | | | | | 2 |
| 4 | | | 2 | | 5 | 3 | | |
| | 8 | 2 | 9 | 1 | | | 5 | 7 |
| 6 | | | | | 3 | 7 | 2 | |
| | | | | | | | | |
| | 1 | 5 | 6 | | | | | 8 |
| 2 | 7 | | | 3 | 8 | 5 | 1 | |
| | | 4 | 7 | | 1 | | | 3 |
| 8 | | | | | 9 | 6 | | 4 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 5 | 8 | 6 | 9 | 7 | 4 | 2 |
| 8 | 4 | 9 | 7 | 3 | 2 | 5 | 1 | 6 |
| 7 | 2 | 6 | 1 | 4 | 5 | 9 | 3 | 8 |
| 4 | 6 | 7 | 2 | 9 | 3 | 1 | 8 | 5 |
| 3 | 8 | 1 | 6 | 5 | 7 | 4 | 2 | 9 |
| 5 | 9 | 2 | 4 | 8 | 1 | 3 | 6 | 7 |
| 9 | 7 | 4 | 3 | 2 | 6 | 8 | 5 | 1 |
| 2 | 5 | 3 | 9 | 1 | 8 | 6 | 7 | 4 |
| 6 | 1 | 8 | 5 | 7 | 4 | 2 | 9 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## பிராந்திய அபிவிருத்தியில் பங்களிப்பு வழங்கும் பஷன் பக்

இலங்கையின் முன்னணி நவநாகரீக ஆடை விற்பனையகமும் நாடு முழுவதும் 17 விற்பனையகங்களை கொண்டியங்கும் பஷன் பக், தனது 'சிசு திரிமக' சமூக பொறுப்புணர்வு செயற்திட்டத்துக்கு அமைவாக கணினித் தொகுதி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

பிராந்திய அளவில் தகவல் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்யும் நோக்கில், இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இலங்கையின் தென் மாகாணத்தின் கம்புருபிட்டிய பகுதியில் அமைந்துள்ள பின்தங்கிய பாடசாலையான தும்பே கனிஷ்ட வித்தியாலயத்துக்கு இந்த கணனி தொகை அன்பளிப்பு செய்யப்பட்டிருந்தது. அனைத்து இனங்களையும் சேர்ந்த 200க்கும் அதிகமான மாணவர்கள் இந்த பாடசாலையில் கல்வி பயின்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களின் கணனி ஆளுமையை விருத்தி செய்வது என்பது, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையின் முக்கிய நோக்கமாக அமைந்துள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு கணனிகளை வழங்குவது, மாணவர்களுக்கு தமது கல்வியறிவை வளர்த்துக் கொள்ள அவசியமான மென்பொருட்களை வழங்குவது போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (த)





## பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் நிறுவனத்தின் முதன்மை விருதுகள்

பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பீஎல்சி நிறுவனம் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்திய தனது பணியாளர்களைக் கௌரவிக்கும் முகமாக அண்மையில் முதன்மை விருதுகள் 2013 என்ற கண்ணைக் கவரும் மாலைப்பொழுது நிகழ்வொன்றை பிரமாண்டமாக ஏற்பாடு செய்திருந்தது. தொடர்ந்து 14 ஆவது ஆண்டாகவும் இந்த நிகழ்வு இடம்பெற்றது. கடந்த நிதியாண்டில் மிகச் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்த பணியாளர்கள் மற்றும் கிளைகளைக் கௌரவித்து அவர்களுக்கு வெகுமதி வழங்கும் வகையிலேயே இந்த விருதுகள் நிகழ்வு இடம்பெற்றது.

மேலும் தேசிய மட்டத்தில் இடம்பெற்ற போட்டிகள் மற்றும் நிகழ்வுகளில் நிறுவனத்தின் சார்பில் கலந்துகொண்டு நிறுவனத்திற்கு பெருமை சேர்ப்பித்தவர்கள் மற்றும் மிகச் சிறந்த வர்த்தக சமூக நலன்புரிச் செயற்திட்டங்களை முன்னெடுத்திருந்த கிளைகளும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பீஎல்சி நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியும், பொது முகாமையாளருமான டி.பி குமாரகேயின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நிறுவனத்தின் வர்த்தக முகாமைத்துவ அணியினர் மற்றும் கிளை ஊழியர்கள் என 600 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பீஎல்சி நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியும், பொது முகாமையாளருமான டி.பி குமாரகே இந்நிகழ்வு தொடர்பில் விபரிக்கையில்,

இலங்கையில் குத்தகைத் தொழிற்துறையில் சந்தையில் முன்னிலை வகிக்கும் ஒரு நிறுவனம் என்ற வகையில் எமது வெற்றிகளுக்குப் பின்னால் உள்ளவர்களை இனங்கண்டு அவர்களுக்கு உரிய கௌரவத்தை வழங்கவேண்டும் என்பதில் தீவிரமான அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம்.


எமது அனைத்து தொழிற்பாடுகளிலும் ஒரு முக்கிய அங்கமாக விளங்கி அர்ப்பணிப்புடன், கடின உழைப்பை வெளிப்படுத்தும் எமது ஊழியர்களை இனங்கண்டு அவர்களைக் கௌரவித்து, வெகுமதியளிப்பதை எமக்குக் கிடைக்கப்பெற்ற ஒரு கௌரவமாகவே நாம் கருதுகின்றோம் என்று குறிப்பிட்டார். (த)

## CDB நிறுவனத்தின் வரிக்கு பின் இலாபம் ரூ.271 மில்லியன்

சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பிஎல்சி (CDB) நிறுவனமானது 2013/2014 முடிவடைந்த நிதியாண்டு காலப்பகுதியில் வரிக்கு பின்னரான இலாபத்தில் 13வீத வளர்ச்சியைப் பெற்று அதன் தொடர்ச்சியான வளர்ச்சி வேகத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. கொழும்பு பங்குசந்தையின் இடைக்கால முடிவுகளின் பிரகாரம், CDB ஆனது 2013 செப்டெம்பர் மாதத்துடன் முடிவடைந்த ஆறு மாதங்களில் 270.97 மில்லியன் ரூபாவைப் பெற்றுள்ளது.


வரிக்கு முன்னரான இலாபம் ரூ.355 மில்லியன் அதே அடிப்படையில் 24 வீதத்தால் அதிகரித்திருந்தது. கடந்த ஆறு மாதங்களுக்கான விரிவான மொத்த வருமானம் 414.51 மில்லியன் ரூபா ஆகும்.

ஸீம்ய நிறுவனமானது 12 புதிய கிளைகளை திறந்து அதன் நேரடி தொடர்புடைய விநியோக வலையமைப் பினை நாடுபூராகவும் 56 ஆக விஸ்தரித்துள்ளது. இதன் மூலம் கொமர்ஷல் வங்கியின் நாட்டின் மிகப்பெரிய ATM வலையமைப்பு மற்றும் VISA வர்த்தகநாமம் கொண்ட ATM அட்டைகளுக்கு உலகின் எப்பாகத்திலிருந்தும் அணுகுவதற்கான வரப்பிரசாதம்; அடங்கிய 24 மணிநேர சேவை ஆண்டின் 365 நாட்களும் வழங்கப்படுகிறது. CDB ஆனது அதன் CDB VISA சர்வதேச வரவட்டை (Debit Card) மூலம் வாடிக்கையாளர் கணக்குகளை மேற்கொள்வதற்கான வசதியை வழங்குகிறது.



இலங்கை வங்கியின் நெல்லியடிக் கிளையில் சிறுவர் சேமிப்புக் கணக்கைப் பேணிவரும் 53 சிறுவர்களுக்குப் பிறந்தநாள் பரிசு வழங்கும் வைபவம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய அதிபர் பி.சந்திரபாகு கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசுப் பொருள்களை வழங்கினார். (த-10)

## 402 மில்லியன் இலாபமீட்டியுள்ள எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ்




2013/14 நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி, 14.9 பில்லியன் ரூபாவை வருமானமாக பதிவு செய்துள்ளது.

கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்த பெறுமதி 12.6 பில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது. இதன் மூலம் நடப்பு ஆண்டில் 18 வீத வளர்ச்சியை எய்தியுள்ளது.

குழுமத்தின் வரிக்குப் பிந்திய நிகர இலாபம் 402 மில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்ததுடன், பங்குதாரர்களுக்கான நிகர இலாபம் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் வழங்கப்பட்ட தொகையான 289 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 342 மில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹனீஃவ் யூசுவ் கருத்து தெரிவிக்கையில்,

இரண்டாம் காலாண்டில் பதிவாகியுள்ள நிதி பெறுபேறுகளின் மூலம் கப்பற் சரக்கு துறையில் இந்திய உபகண்டத்தில் சரிவான நடவடிக்கைகள் பதிவாகிய போதும், புதிய சந்தைகளில் நாம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளின் நிலையான செயற்பாடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் தளம்பல்களை கொண்ட சந்தை சூழ்நிலைகளிலும் குழுமத்துக்கு உயர்ந்த இலாப பெறுமதிகளை பதிவு செய்ய முடிந்துள்ளது.

கப்பற் சரக்கு துறையில் புதிய சந்தை வாய்ப்புகளை எய்துவதும், ஏனைய துறைகளில் முன்னெடுக்கும் வர்த்தகங்களில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்துவதும் எமது நோக்கமாக அமைந்துள்ளது என்றார்.

குழுமத்தின் பிரதான துறையான, கப்பற்சரக்கு போக்குவரத்து மற்றும் சரக்கு கையாளல் துறை கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சீரான ஆரோக்கியமான வருமானத்தையும் இலாபத்தையும் பதிவு செய்துள்ளது.

## பா/சீனன்கலட்டி ஞானோதயாவின்
# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் நீண்டகாலம் ஆங்கில பாட ஆசிரியராகக் கடமையாற்றிய

**செல்வி காலாம்பிகை ஆறுமுகம்**

23.11.2013 சனிக்கிழமை காலமானார். அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
பா/சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாலயம், அளவெட்டி.

(40498)(45.8.3)

# கண்ணீர் அஞ்சலி



எமது நிலைய முதல் நிலை
இலிகிதரின் பாசமிகு தந்தை

**தம்பையா கனகசபை**

( பிரபல ஆயுள்வேத வைத்தியர்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர்களும்,
கமநல சேவை குழு உறுப்பினர்களும்.

(33014)(3.6.4)

# மரண அறிவித்தல்

## தம்பையா கனகசபை

(சின்னத்தம்பி பரியாரியார்)
(ஆயுள்வேத வைத்தியகலாநிதி, இளைப்பாறிய உத்தியோகத்தர் நீர்வேலி பிரதேசசபை)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கு, கோப்பாயை நிரந்தர வசிப்பிடமாகவும், கைதடி கிழக்கு,கைதடியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கனகசபை நேற்று (25.11.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற காமாட்சியின் ஆருயிர்க்கணவரும், காலஞ்சென்றவர்களான ஆயுள்வேத வைத்தியகலாநிதிகள் சோமசேகரம், தியாகராசா, தாமோதரம் பிள்ளை, சாமியாபிள்ளை, மயில்வாகனம், கணபதிப்பிள்ளை, தருமலிங்கம் மற்றும் கோபாலு (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அம்பிகாதேவி (பிரதேசசபை - நீர்வேலி), தயாநிதி (ஆசிரியர், கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை), பார்த்தீபன் (கமநலசேவைகள் நிலையம் - கைதடி), பிரபாகரன் (ஆசிரிய ஆலோசகர் - தீவகக்கல்விவலயம்) ஆகியோரின் ஆருயிர்த்தந்தையும், பிறேமகுமார் (வர்த்தகர்), தமிழ்செல்வன் (குகன் மியூசிக் சென்ரர்- இணுவில்), குகாமினி (கைதடி), கஜலட்சுமி (ஆசிரியர் - புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்ற ஜிலக்ஷன் மற்றும் கஜப்பிரியன், கஜலக்ஷன், கோபீசன் (B.B.C Kopay), மதீசன், பிரபாஷ், தீவிகா(யாழ்.இந்து ஆ.பாடசாலை), பிரவீன் (B.B.C Kopay) ஆகியோரின் பாசமிகு பேரனும், திருமதி பேரின்பநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), நடேசன் (வர்த்தகர் - கல்வியங்காடு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2013) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் கைதடி ஊற்றலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(40496)
(12.3)

தகவல்:
**பார்த்தீபன்** (திருநிறைவாளன் - மகன்)
0779184646/0778691022

கைதடி கிழக்கு,
கைதடி.

# மரண அறிவித்தல்

## கைலாயபிள்ளை கமலநாதன்



இல. 751, சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும், கனடா, சிலாபம், மலேசியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாயபிள்ளை கமலநாதன் 22.11.2013 வெள்ளிக்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் கைலாயபிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சாரதாவின் அன்புக் கணவரும், றவீனா, ஹர்சன், பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிலாபம் சோமாஸ்கந்தன்-தர்மவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், கிருஸ்ணவேணி (கனடா), ரகுநாதன் (கனடா), சேதுநாதன் (கனடா), தனலட்சுமி (ஆசிரியை - கொழும்பு), வசந்தவேணி (கனடா), கமலவேணி (கனடா), இரவீந்திரநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருநாவுக்கரசு (கனடா), உமாதேவி (கனடா), சரோஜினிதேவி (கனடா), பற்குணசிங்கம் (கிராம அலுவலர் - கனகபுரம்), சபாரட்ணம் (கனடா), சிறிஸ்கந்தராசா (கனடா) , சத்தியமீரா (கனடா), யதீஸ்வரன் (லண்டன்), நந்தகுமார் (கனடா), லலிதசிறீ (டென்மார்க்) காலஞ்சென்ற பிரதீப் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிறேமராணி (கனடா), இந்திரன் (வட்டக்கச்சி), பவானி (கனடா), கிருபாநிதி (கனடா) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (26.11.2013) செவ்வாய்க்கிழமை மலேசியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
க. பற்குணசிங்கம் (மைத்துனர்)
கிராம அலுவலர்,
கனகபுரம், கிளிநொச்சி.
077 967 6434

(37591)
(7.6.3)

## கூட்டம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ந-9)

## வாசிப்பு மாத போட்டி முடிவு


மீசாலை பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பாடசாலை மாணவர்கள், முன்பள்ளிச் சிறார்கள் ஆகியோருக்கு இடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

வாசிப்பு
ம.பானுகா-சாவகச்சேரி இந்துக்கல்லூரி, பா.லக்ஸிகா-மட்டுவில் சரஸ்வதி வித்தி, ர.பாவலன்-மீசாலை விக்னேஸ்வரா ம.வித்தி.

சித்திரம் - மத்திய பிரிவு
சி.சாரணி-சாவகச்சேரி மகளிர் கல்லூரி, யோ.சுலோகன்- மட்டு வில் தெற்கு சரஸ்வதி வித்தி., வ.துவாரகா-மீசாலை விக்னேஸ்வரா ம.வி.

சித்திரம்- மேற்பிரிவு
த.சுசாந்-சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சு.டிலாந்தன்- சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, அ.சிம்ரோன்-மீசாலை விக்னேஸ்வரா ம.வி.

சொல்வளம்
ரகுராம், மாதுமை, இஷான்-கணபதி முன்பள்ளி, தெ.துவாரகன், உ.உமாசுதன், த.லக்ஸன்-நாவலர் முன்பள்ளி. (ந-9)



கைதடி சைவ ஐக்கிய சங்கம் நடத்திய ஆறுமுகநாவலர் விழா ஞாயிற்றுக்கிழமை கைதடி இணுங்கித்தோட்டம் கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.சத்தியநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். நாவலர் குரு பூசையையொட்டி கைதடிப் பிரதேசப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

## அமரர் சின்னத்தம்பி சிவசம்பு



தோற்றம் 10.04.1926 — மறைவு 27.10.2013

கடந்த 27.10.2013 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்தியம் இன்று (26.11.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

இந் நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு சகல வழிகளிலும் உதவிபுரிந்து ஆறுதல் தெரிவித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


கல்லூரி வீதி,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

(40495)(3.6.4)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25 ★ 09 ★ 1928



மறைவு
07 ★ 12 ★ 2012

## சின்னத்தம்பி சிவஞானசுந்தரம், BA.

(முன்னாள் அதிபர்)
திதி: 26.11.2013

தண்ணிழலாம் இந் நிழலைத் தந்த எம் நிழலே
கண்ணிகர்த்த கல்வி தந்து (அறியாமை) இருள் களைந்த
—ஒளி விளக்கே!
அறிவில் ஆழ்கடலாய் பண்பில் வானுயர்ந்து பாச மழையான
—எங்கள் தந்தையே!
கவலையில் கலங்குகின்றோம் கண்ணீர் வடிக்கின்றோம்
ஆண்டொன்று சென்றாலும் ஆறுதில்லை எங்கள் மனம்

"தண்ணிழல்"
21/5, பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(39989)(5.6.4)

# வாழ்க்கைச் செலவுப் படியில் சமநிலை பேணப்பட வேண்டும்

## ஓய்வூதியர்கள் விசனம்

தென்மராட்சி, நவ.26

அத்தியாவசியப் பொருள்கள், அரச உத்தியோகத்தர்களுக்கு ஒரு விலை, ஓய்வூதியர்களுக்கு ஒரு விலை என்ற வேறுபாட்டில் விற்கப்படுகின்றனவா? நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் வரவு - செலவுத் திட்ட அறிக்கைகளில் வாழ்க்கை செலவுப் படி அதிகரிப்பால் அரச உத்தியோகத்தர்கள், ஓய்வூதியர்கள் சமநிலை பேணப்படல் வேண்டும்.

இவ்வாறு அண்மையில் வெளியான வரவு - செலவுத்திட்ட அறிக்கை தொடர்பாக ஓய்வூதியம் பெறுவோர் கருத்துத் தெரிவித்தனர்.

அரச சேவையிலிருந்து இளைப்பாறியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. சேவையில் இருக்கும்போது பெற்ற வேதனத்தை விட ஓய்வூதியம் குறைவானது. அரச உத்தியோகத்தர் ஓய்வு பெறும்போது பெற்ற இரட்டிப்பு வேதனத்தில் குறிப்பிட்ட அளவு தொகையே திரட்டிய ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

வாழ்க்கைச் செலவுப் படி என்பது விலையினை அடிப்படையாகக் கொண்டு வரவு - செலவுத் திட்ட அறிக்கைகள் மூலம் அரச உத்தியோகத்தர்கள், ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படுகிறது.

அதிலும் சேவையில் உள்ளவர்களுக்கு அதிகரித்த படியும், ஓய்வூதியர்களுக்கு குறைந்த படியும் வழங்கப்படுவது அரச சேவையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு செய்யும் நன்றி கெட்ட செயலாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு ஆயிரத்து 200 ரூபாவும் ஓய்வூதியர்களுக்கு 500 ரூபா மற்றும் 350 ரூபாவும் வழங்க முன்மொழியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-9)



இலங்கை உயர் தொழில் நுட்பவியல் நிறுவன மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற, யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் பணிப்பாளர் சகாயன், முன்னாள் பணிப்பாளர் திலகரத்தினம், விரிவுரையாளர் சாந்தி, விரிவுரையாளர் விஜயநாதன், மக்கள் வங்கியின் யாழ். பல்கலைக் கழக கிளை முகாமையாளர் சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு சான்றிதழ் வழங்கினர். (ந-5)

## கௌரவிப்பு நிகழ்வு

தென்மராட்சி, நவ.26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற, தேசிய சேமிப்பு வங்கி, சாவ கச்சேரி கிளையில் சிறுவர்களுக்கான ஹப்பன் சேமிப்பு கணக்கு வைத்துள்ள மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் வி.அருளானந்தமும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் கலந்து கொள்வர். (ந-9)

## ஆபரண வடிவமைப்பு பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், நவ.26

யாழ்ப்பாணத்தில் ஆபரண வடிவமைப்பு தொடர்பான இலவசப் பயிற்சி நெறி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது. திசைகாட்டி நிறுவனத்தால் நடத்தப்படும் இந்தப் பயிற்சி நெறியில் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் சித்தியடைந்த இருபாலாரும் பங்கு பற்றலாம். ஆர்வமுடையவர்கள் இல.175, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தியில் அமைந்துள்ள திசைகாட்டி நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளலாம். (ந-14)

## ஏலத்தில் மணல்

யாழ்ப்பாணம், நவ.26

யாழ்.நீதிவான் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்ட மணல் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஏல விற்பனையில் மணலைப் பெற்றுக் கொள்வோர் யாழ்.நீதிமன்ற வளாகத்தில் அன்றைய தினம் உடன் கொடுப்பனவைச் செலுத்தி மணலைப் பெற்றுக் கொள்ளலாம் என்று பதிவாளர் அறிவித்துள்ளார். (ந-14)

## நிர்வாகிகள் தெரிவு

வலி.வடக்கு, நவ.26

வட மாகாண உடற் கல்வி டிப்ளோமா ஆசிரியர்சங்க ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

இதன் போது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர் ப.தர்ம குமாரன், உப தலைவர் க.கருணாகரன், செயலாளர் த.திவாகர், உப செயலாளர் அ.ரூபவாணன், பொருளாளர் கு.பகீரதன், இதழாசிரியர் ச.சாரூசன், ஏனைய நிர்வாக உறுப்பினர்களாக ச.சுவிற்றபிரியா, ம.சயந்தரூபன், ர.அனுசியா, ந.டனிஸ், ச.சுகன்யா, சு.சயந்தன், அ.ஜெயந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ந-86)

**அறிவித்தல்**

**காரைநகர் பிரதேச சபை, காரைநகர்**

2014ஆம் ஆண்டுக்கான சபையின் நிகழ்ச்சித் திட்ட வரவு செலவுத் திட்டம் 1987ஆம் ஆண்டு பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 15 ஆம் இலக்க 168ஆம் பிரிவுக்கமைய தயாரிக்கப்பட்டு 26.11.2013 தொடக்கம் ஏழு (07) நாள்களுக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

மு.ஆ.வே.ஆனைமுகன்
தலைவர்,
காரைநகர் பிரதேச சபை. (சி/14999) (7.6.3)

**தவறிவிட்டது**

நடராஜா நந்தமோகன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (813091879V), சவுதி சாரதிப்பத்திரம், ATM காட்ஸ்(2) என்பன அடங்கிய பேர்ஸ் கைத்தொழில் பேட்டை வீதிக்கும், ஆவரங்கால் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

சுதா ரயர் வேக்ஸ், ஆவரங்கால்.
077 817 1094/077 795 0023

**பெயர்மாற்றம்**

வேலணை சரவணை மேற்கை நிரந்தர வதிவிடமாகவும் அளவெட்டியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட [illegible] ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை, [illegible] என பெயர்மாற்றம் செய்வதோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

கணேஸ் ஞானாம்பிகை.

**தவறிவிட்டது**

சச்சிதானந்தம் பாமராஜ் என்பவருடைய தே.அ. அட்டையுடன் (733081200V), பேர்ஸ் 18.11.2013 அன்று யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே: 077 336 5843 (40497) (7.6.3)

## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs.In milion) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Improvements and Repairs of the Sewerage Treatment Plant. | 500.00 | 56,000.00 | 90 | 2.79 | C-8 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the Institute for Construction, Training and Development (ICTAD).
3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 2013.11.27 until 2013.12.04. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
5. Sealed bids shall be delivered to the address below at before 10.00 hrs on 2013.12.05, late bides will be rejected. Bids will be open at 10.15 hrs at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
26/11/2013.

(சி/14996) (7.6.3)

மாபெரும் மலிவு விற்பனை
&
Year End Sales
25th Nov – 31st Dec 2013
75% OFF
யாழ்ப்பாணம் நெல்லியடி
கிளிநொச்சி வவுனியா
திருகோணமலை வெள்ளவத்தை




MICRO PC SYSTEMS
Conditions Apply

வெள்ளவத்தை:-115C, W.A Silva Mw,011-2367405,யாழ்ப்பாணம்:-218,Hospital Rd, 021-2225893, வவுனியா:-73, 2nd Cross St,024-2221969, நெல்லியடி:-Kodikamam Rd, 021-2262929,கிளிநொச்சி:-A9 வீதி கச்சேரி முன்னால் , 021-2285593, திருகோணமலை:- 235, Main St.(வசீஹரன் ஹாட்வெயார் முன்னால்) , 026-2226977

# கண்ணீர் அஞ்சலி

எமது வலயக்கல்வி அலுவலகத்தில் சித்திர பாட சேவைக்கால
ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றும்
க. பிரபாகரன் அவர்களின் அன்புத் தந்தை

## தம்பையா கனகசபை

நேற்று 25.11.2013 இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/40441)(3.6.4)

நலன்புரிக்கழகம்,
வலயக்கல்வி அலுவலகம், தீவகம், வேலணை.

# மரண அறிவித்தல்

## கந்தசாமி பரமகுரு

(முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர், பருத்தித்துறை கோட்டம், முன்னாள் கொத்தணி அதிபர்- நாகர் கோயில்)

ஊரிக்காட்டைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பரமகுரு 25.11.2013 காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஈஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், திருமதி ஜெயகுமாரி தயாநிதி (ஆசிரியர், யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), காலஞ்சென்ற ஸ்கந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், P.தயாநிதி (கிராம அலுவலர் J/403, J/402) அவர்களின் அன்பு மாமனாரும், ஜெயகுமாரன் (யா/ஹாட்லிக் கல்லூரி) அவர்களின் பேரனும், தயானந்தகுரு, சித்திர வேலாயுதகுரு, விஜயகுமரகுரு, சதானந்தகுரு, உமாபதிசிவம், விமலேந்திரகுமார், பத்மலோஜினி, தேவரஞ்சிதலோஜினி, கமலாதேவி, இந்திராதேவி, மேகலலோஜினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (26.11.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: (C/14997)(3.6.4)

பத்திரகாளி கோயில் வீதி,
பருத்தித்துறை.

மருமகன் பொ.தயாநிதி
(கிராம அலுவலர் J/403, J/402)

### காலி மாநகர பிரதிநிதிகள் மட்டக்களப்புக்கு வருகை

காலி மாநகர சபையின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதன் அதிகாரிகள் திங் கட்கிழமை மட்டக்களப்பு மாநகரசபைக்குவருகை தந்துள்ளனர்.

தேசிய சமாதான பேரவையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாநகர சபைக்கு வருகை தந்த அவர்களை மட்டக்களப்பு மாநகர சபை ஆணை யாளர் கே.சிவநாதன் மற்றும் அதன் அதிகாரி கள் வரவேற்றனர். (ச)

### மீனவர்கள் கைது

மூதூர்.நவ.26

தடைசெய்யப்பட்டவலைகளைப் பயன்ப டுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 8 மீனவர்களை மூதூர் பொலிஸார் நேற்று திங்கட்கிழமை கைது செய் துள்ளனர்.

கொட்டியாரக்குடாக் கடலில் மூதூர் பொலிஸார் மேற்கொண்டதிள் சுற்றிவளைப்பின் போதே, அவர் கள் கைது செய் யப்பட்டனர். மீன்பிடிக்குப் பயன்படுத்தப்பட்ட 4 படகுகளும் தடைசெய் யப் பட்ட வலைகளும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் கூறினர். (ச)

# மரண அறிவித்தல்கள்



## திருமதி மகேஸ்வரி தவராஜா

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், நியூசிலாந்து ஒக்கிலன்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி தவராஜா 23. 11. 2013 சனிக்கிழமை இறைவனுடன் இணைந்தார்.

அன்னார் மனோகரன் (இளைப்பாறிய பிராந்திய முகாமையாளர், ஸ்ரீலங்கன் விமானசேவை), சிறீகரன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), கருணாகரன்(பொறியியலாளர், ஆஸ்திரேலியா), யசோதரா ஆகியோரின் அன்பு அன்னையாரும், மல்லிகா, பாலறஞ்சனி (மருத்துவர்), சிவசக்தி, கிருஷ்ணராஜ் (கணக்காளர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற திருச்சிற்றம்பலம், காந்திமதி, சிவகாமி அம்மாள், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மற்றும் திருமதி அருந்ததி, காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் இராமநாதன், பரமநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஹம்ஷாகினி, தக்ஷாகினி, காலஞ்சென்ற அபலக்ஷாகினி மற்றும் மயூரி, றம்யா, யாதவன், ஜனகன், கேசினி, பிருந்தாவன், அரவிந்தன், ஜனனி, ஜனார்த்தன் ஆகியோரின் ஆருயிர் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (26.11.2013) செவ்வாய்க்கிழமை ஒக்கிலன்டில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலக்கம் 2,கெயின் தெரு,
மவுன்ட் ஈடின்,
ஒக்லன்ட், நியூசிலாந்து.

(40443)
(12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## நாகநாதர் நாகரத்தினம்



(ஓய்வுபெற்ற உதவி ஆணையாளர் மதுவரித் திணைக்களம், முன்னாள் முகாமையாளர் தினக்குரல் விருந்தினர் விடுதி)

சிறுவிளான் இளவாளையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி, நாவலர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதர் நாகரத்தினம் நேற்று முன்தினம் (24.11.2013) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதர்- விசாலட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டன்- ராணி தம்பதியரின் மூத்த மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், ராஜரட்ணம், காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் ராஜலக்ஷிமி, திருமதி ருக்குமணி சந்திரராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோபாலகிருஷ்ணனின் அன்புத் தந்தையும், சிவகுமாரியின் அன்பு மாமனும், ஜெகஜீவன் (யாழ். இந்துக் கல்லூரி), கம்சாயினி (சென் பொஸ்கோ), ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான காலகண்டன், விடாகண்டன் மற்றும் திருநீலகண்டன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11. 2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:


383/26, நாவலர் லேன்,
நாவலர் வீதி, ஆனைப்பந்தி.

(40500) (7.6.3)

புஸ்பராணி நாகரத்தினம் (மனைவி)
021 222 3276

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை புஷ்பபாலன்



(இளைப்பாறிய அதிகாரி, சுங்கத்திணைக்களம்)

வட்டுக்கோட்டை, சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை புஷ்பபாலன் 22-11-2013 வெள்ளிக்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - ஞானசிரோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்- நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சித்திரபூபதியின் அன்புக் கணவரும், தில்லைராஜன், Dr.கமலநயனி, பத்மநயனி, Dr.ஜெகதீசன், அரவிந்தன், திவாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான ஞானசவுந்தரி, கெங்காதரம்பிள்ளை மற்றும் கமலாதேவி, காலஞ்சென்றவர்களான குணவீரசிங்கி, திசாநாயகி மற்றும் லோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரஞ்சனா, சிவானந்தன், ஜெயரட்ணம், அனிந்தினி, வசந்தாதேவி, ரஞ்சிதமணி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பரராசசேகரம், நகுலாம்பிகை, தம்பிஐயா, கோசலாதேவி, காலஞ்சென்ற கதிர்வேல்நாதன், அரியசுவர்ணபுவனராணி, குணபூஷணம், காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிருத்திகா, சிவமாறன், சம்யுக்தா, சிவநயனி, சிவரூபன், சரண்யா, பிரவீன், சஞ்சயன், சாரங்கன், கீர்த்தனா, பிரதாப், யாழினி, தனஞ்சயன், வருணன், சுருதி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புதன்கிழமை 27/11/2013, முற்பகல் 09:00 - 11:00 Highland Funeral Home Cremation Centre - Scarborough Chapel, 3280, Sheppard Avenue East, Scarborough, ON M1T 3K3, Canada என்னும் முகவரியில் நடைபெற்று, பூதவுடல் புதன்கிழமை 27/11/2013, முற்பகல் 11:30 மணியளவில் St. John Norway Cemetery Crematorium, 256 Kingston Road, Toronto, ON M4L 1S7, Canada வில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
தில்லைராஜன் - (கனடா)
தொ.பே: +14162837343, செ.பே:+16478820900
Dr.கமலநயனி - (கனடா) தொ.பே.:+12043072112
பத்மநயனி - (கனடா)
தொ.பே:+14162876220, செ.பே:+14167328762
அரவிந்தன் - (கனடா) தொ.பே:+14162863871
திவாகரன் - (கனடா)
தொ.பே: +19058787207, செ.பே: +14166552826
Dr.ஜெகதீசன் - (கனடா) தொ.பே: +19057371383, செ.பே:+14167052124

தகவல்:
குடும்பத்தினர்.

## தவறுதல் ஏற்பட்டுவிட்டது

யாழ். போன் சொப்பில் நேற்று (25.11.2013) காலை 10 மணியளவில் தாயும் மகளும் போன் ஒன்று வாங்கி செல்லும் போது தவறுதலாக இன்னுமொரு போனையும் எடுத்துச் சென்று ள்ளார்கள்.

நடந்தவை அனைத்தும் கண்காணிப்பு கமராவில் பதிவாகியுள்ளது. இருவரது முகங்களும் துல்லயமாகத் தெரிகின்றன. எனவே தவறுதலாக எடுத்துச்சென்ற போனை தயவு செய்து தந்துதவு மாறு கேட்டுக்கொள்கின்றோம். ஸ்ரோர் இலக்கம் 09 நல்லூர் சந்தை (வெளிப்புறம்) 021 2223817, 077 3611282

## மரண அறிவித்தல்

### கனகராசா நாகேஸ்வரன் (ஈசன்)



சித்தன்கேணியைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகராசா நாகேஸ்வரன் (ஈசன்) நேற்று (25.11.2013) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான கனகராசா- சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர் களான கந்தையா-சரஸ்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன்மணியின் (ஆசிரியர்) அன்புக்கணவரும், சாரதாம்பாளின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2013) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக வழுக்கியாறு இந்து மயானத்துக்குஎடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோயிலடி, சித்தன்கேணி.

தகவல்: சி. றோஜிந்தன் (பெறாமகன்)

## மரண அறிவித்தல்

### திருமதி சரோஜினிதேவி நவரெத்தினம்



வேலணை கிழக்கு அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், 103/1 கோயில் வீதி நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நவரெத்தினம் சரோஜினிதேவி நேற்று (2013.11.25) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - நகுலேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான புங்குடுதீவு செல்லத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்புமருமகளும் தேவதாஸ் (கனடா), தேவிகா ஆகியோரின் அன்புத்தாயும் சுகந்தினி, விஜயகுமார் (நந்தன்) ஆகியோரின் அன்புமாமியும் துஷ்யந்தன், கௌதமன், கௌதமி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளவும்.

103/1 கோயில் வீதி, நல்லூர்.

தகவல்: விஜயகுமார் (நந்தன் - மருமகன்)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா சின்னத்துரை



பலாலி வீதியைப் பிறப்பிட மாகவும், நல்லூர் அரசடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சின்னத்துரை 25.11.2013 திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்துரை யின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பவளத்தின் அன்புச் சகோதரியும், தவமலர் (பவா), இராசாத்தி, பிள்ளையம்மா, ரேவதி காலஞ்சென்ற சிவராசா ஆகியோரின் அன்புத் தாயா ரும், இராசதுரை, காலஞ்சென்ற அழகர் மற்றும் காந்தன், காலஞ்சென்ற சின்னத்தம்பி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2 ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர். (40444) (7.8.3)

தகவல்: குடும்பத்தினர்.

## மனித உரிமைகள் தொடர்பான செயலமர்வு கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம், நவ.26

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் மனித உரிமைகள் தொடர்பான செயல மர்வு எதிர்வரும் 30 ஆம் திகதி இடம்பெறவுள் ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மனித உரிமைகள் தொடர்பான இந்தச்செயலமர்வு காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரையும் கரைச் சிப் பிரதேச சபை மண்டபத்தில் இடம் பெறும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்தியக் காரியாலயம் கடந்த ஆண்டு முதல் கிளிநொச்சி மாவட்டத்துக்கான உப அலுவலகத் தைத் திறந்து அதன் மூலம் சேவையாற்றி வருகின்றது.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மக்களுக்கு மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிவில் சமூக அமைப்புக்களுக்கான மனித உரிமைகள் தொடர் பான இந்தச் செயல மர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ் தெரிவித்தார். (க-6)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 29.11.1930

உதிர்வு 27.09.2013



### அன்னம்மா சின்னத்துரை (பூமனி)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (26.11.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

( இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

20 விதானையார் வீதி, சுண்டுக்குழி.

பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### இன்னாசிமுத்து யோன்பிள்ளை



அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இன்னாசி முத்துயோன்பிள்ளை நேற்று (25.11.2013) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இன்னாசி முத்து அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பொன் னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மேரிபுஸ்பத்தின் அன்புக் கணவரும், கிறீஸ்ரீன் னம்மா, இராசேஸ்வரி, லில்லிமலர், செல்வமணி, காலஞ்சென்ற அரியரெட்ணம் மற்றும் மேரி யோசப்பினா, மேரிஜசிந்தா, காலஞ்சென்ற மேரி அஞ்சளா ஆகியோரின் அன்புத் தந்தையும், திரேசா, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சின்னையா, இராசநாயகம், குணபாலசிங்கம், குணதாசன், காலஞ் சென்ற செல்வமணி மற்றும் சகாயதாசன், பிரான்சிஸ், நீக்கிலாப்பிள்ளை ஆகியயோரின் மாமனும், மிக்கல்ராசன், றதீஸ்வரன், காலஞ்சென்ற ரவிசங்கர் மற்றும் ரமேஸ், இராஜேஸ்கண்ணா, லக்ஷிகா, சுகந்தினி, சுகுணராஜ், அசோக்குமார், அனிதா, ஆசா, யாழி, சுபேஸ், சமிந்தா, சஞ்புசீவன், றஜிதா, விஜிதா, எர்வின், கல்வின் ஆகியோரின் பேரனும், ஜெனாக்ஷன், ஜொனக்ஷன், ராமனுஜன், அபிராயன், பிரவீன், மனோஜ், ரீஷாந், திபுசன், நாராஜினி, யதுர்ஷிகா, எழில்அழகி, நில்ஷான், லஜானி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை மறுதினம் (28.11.2013) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அல்லைப்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி.

தகவல்: குடும்பத்தினர்.

## நல்லூர் பிரதேச சபை கொக்குவில்

### குத்தகைக்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2014

05.11.2013 ஆம் திகதி செய்யப்பட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டுக்கு பின்வரும் சந்தைகள் இறைச்சிக்கடைகளுக்கு மீள்கேள்வி கோரப்படுகின்றது.

| இல | சந்தைகள் (துவிச்சக்கரவண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | மீளளிக்கப் படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த ரூபா) |
|---|---|---|---|---|
| | **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1. | திருநெல்வேலிச்சந்தை (துவிச் சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத் துடன்) | 1000.00 | 15000.00 | 16.695.000.00 |
| 2. | திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச் சிக்கடை | 500.00 | 5000.00 | 210.000.00 |
| 3. | திருநெல்வேலிச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 368.655.00 |
| | **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 1. | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.000 | 5000.00 | 105.105.00 |

கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி 09.12.2013 திங்கட்கிழமை மு.ப. 12 .00 மணி வரை

கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 10.12.2011 செவ்வாய்க்கிழமை ந.ப. 12.00 மணிவரை

கேள்வி திறக்கும் திகதி : 10.12.2013 செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணி

குத்தகை தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பிரதேச சபை
கொக்குவில். 26.11.2013

ப. வசந்தகுமார்
தவிசாளர்
நல்லூர் பிரதேசசபை.

# ‘13’ அரசமைப்புக்கு அமைய அதிகாரத்தை வழங்குங்கள்

## அஸாத்சாலி வேண்டுகோள்

கொழும்பு, நவ.26
தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே மாகாண சபை முறை கொண்டுவரப்பட்டது.
அதே போன்றே 13 ஆவது அரசமைப்புத் திருத்தமும் செய்யப்பட்டது. இதற்கிணங்க 13 ஆவது அரசமைப்பின்படி அதிகாரங்களை வழங்க வேண்டும்.
இவ்வாறு மத்திய மாகாண சபை உறுப்பினர் அஸாத் சாலி வேண்டுகோள் விடுத்துள்ளார்.
கண்டி, பள்ளேகலையில் நடைபெற்ற மத்திய மாகாண சபையின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நான் தமிழ் மக்களைப் பற்றியும் முஸ்லிம் மக்களைப் பற்றியும் பேசுகின்றேன். அதனால் நான் இனவாதி ஆகிவிடுவேனா? மத்திய மாகாண மக்களின் நிதியில் நடத்திய கூட்டங்களுக்கான செலவு 60 கோடி ரூபா. ஆனால் அபிவிருத்தி திட்டங்கள் ஏதாவது என்றாவது நடைபெற்றதா? மத்திய மாகாண சபை மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகளை திருப்திகரமாகவும் முறையாகவும் செய்வதாகத் தெரியவரவில்லை.
மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மக்கள் நலனுக்காகவும் அபிவிருத்திக்காகவும் சமர்ப்பிக்கின்ற பிரேரணைகள் தொடர்பான எந்தவித தகவல்களும் அது நிறைவேற்றப்பட்ட பின் வெளியிடப்படுவதில்லை. பிரேரணைகள் தொடர்பாக எந்தவித மீள் பரிசீலனைகளும் செய்யப்படுவதில்லை. உரிய அதிகாரிகளும் இவை தொடர்பாக சபைக்கு அறிவிப்பதில்லை-என்றார். (ச-10)





புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌர விக்கும் நிகழ்வு அல் அர்ஷப் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

## முதலைகள் கணக்கெடுப்பு

கொழும்பு,நவ.26
இலங்கையில் உள்ள முத லைகளைக் கணக்கிடு வதற்கு உலக முதலை நிபுணர்கள் குழு தீர்மானித் துள்ளது.
இக்கணக்கெடுப்பின் மூலம் இலங்கையில் உள்ள முதலை இனங்கள் மற்றும் அவற்றின் நடவடிக்கைகள் சம்பந்தமான தரவுகள் சேகரிக்கப்படும் என்று குழுவின் தென்னாசியாவுக் கான தலைவர் அன்ஸ லம் டி சில்வா தெரிவித்துள்ளார்.
வனஜீவராசிகள் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் மேற் கொள்ளப் படவுள்ள இந்தக் கணக் கெடுப்பு அடுத்த மாதத்தில் ஆரம்பிக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-22)


### பிறந்தநாளில் வெற்றித்திருமகளாய் வாழி



26.11.2013
ஜெகதீஸ்வரி நாகலிங்கம்
(B.A.Dip-in-Ed)
ஓய்வு நிலை ஆசிரியை யா/மல்லாகம் மகா வித்தி யாலயம்) முன்னாள் ஆசிரிய ஆலோசகர் - சுவிஸ் பார்சல் தமிழ் பாடசாலை, பழைய மாணவி- யா/இராமநாதன் கல்லூரி)
ஆசையம்மாவை வாழ்த்தும்,
பேராமக்கள், மருமக்களான,
பிரபாகரன், குணாளன், மோகன்,
ரவிராஜன், திருமாலினி, தயாலினி.
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
021 224 1829

### Job Vacacnies @KU
Prove your intelligence and win
1)**Marketing Coordinator** [ Under 30 Years ,CIM/SLIM /similar qualification+1 Year experience in education industry]
2)**Course Consultants**(A/L English Medium-3 passes in any discipline ,female,under 30 years)
2) **IT part time lecturers** [ BCS/ACS/MCSE/MCP or a recognized Diploma in IT ]
Walk in interview 28/12/2013 - 11.AM-2PM
(Bring your CV )(No calls regarding jobs )
KU Education
**Knowledge Universe** ,
No 424,K.K.S Road, Jaffna.
Tel : 021-2217335(Not for job enquiries )
Web : http://edu.kugroup.info

### விசேட கருத்தரங்கு
தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி
கொழும்பிலிருந்து வருகை தரும் பிரபல்யமான வளவாளர்களினால் 2015 பரீட்சைக்குத் தோற்றும் க.பொ.த (சா.த) மாணவர்களுக்காக விசேட கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

| திகதி | பாடம் | நேரம் | வளவாளர்கள் |
|---|---|---|---|
| 27.11.2013 புதன்கிழமை | வரலாறு | 9.00 - 4.00 | M.S.M. பைசால் M.A வரலாறு பிரபல ஆசிரியர் கொழும்பு |
| 28.11.2013 வியாழக்கிழமை | தமிழ் | 9.00 - 4.00 | கலாநிதி S.S. ஆனந்தன் பிரபல தமிழ் ஆசிரியர் கொழும்பு |
| 29.11.2013 வெள்ளிக்கிழமை | கணிதம் | 9.00 - 4.00 | திருமதி அருந்ததி ராஜவிஜயன் மேல்மாகாண கணித ஆசிரிய ஆலோசகர் கொழும்பு |
| 30.11.2013 சனிக்கிழமை | விஞ்ஞானம் | 9.00 - 4.00 | திரு. G. சுதாகரன் பிரபல விஞ்ஞான ஆசிரியர் கொழும்பு |

அனுசரணை வழங்குபவர்
மகாஜனன் கலாநிதி. S. சிவபாலானந்தன்
இங்கிலாந்து
மகாஜனக் கல்லூரி கல்வி அபிவிருத்தி நிறுவனம் - கொழும்பு


## ஆண்டொன்றில் ஓய்வு பெறுகின்றனர் 18,000 பேர்

கொழும்பு,நவ.26
ஆண்டொன்றில் 18.000 பேர் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றனர் என்று ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் இத் திணைக்களத்தின் பங்க ளிப்பைப் பெற்றிருந்த ஒட்டு மொத்த ஓய்வூ தியர்களின் எண்ணிக்கை 5,10,343 பேர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
அந்த ஆண்டில் ஓய்வூதியச் சம்பளங்களை வழங்குவதற்காக அரசு செலவிட்டுள்ள தொகை 126 மில்லியன் ரூபாவாகும்.
2008 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டின் ஓய்வூதியர்களின் அதிகரிப்பு விகிதாசாரம் 14.65 வீதமாகும்.
2008 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ஓய்வூதியச் சம்பளங்களின் தொகையுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டின் விகிதாசாரம் 49.47 வீதம் என்று திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது. (ச-22)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்
சாமஸ்ரீ தேசமான்ய விருது 2013





அகில இன நல்லுறவு ஒன்றியத்தால் திருகோணமலை சென் மேரிஸ் கல்லூரியில் 23.11.2013 அன்று நடத்தப்பட்ட சாமஸ்ரீ விருது வழங்கும் விழாவில் சமய மற்றும் சமூக கலை கலாசார தொண்டாற்றுதல் பொருட்டு நல்லூர் வண்ணை ஸ்ரீ வீரமாகாளிஅம்மன் ஆலய பிரதம குருவும் ஆதீன கர்த்தாவுமான.
"சிவாச்சார்ஜ இளவரசு " சக்திகிரிஜா வியாசர் " சக்திதாசன் "
சிவஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்
அவர்களுக்கு அதிஉயர் கௌரவ விருதான சாமஸ்ரீ தேசமான்ய என்னும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். இவ்வுயர் விருது பெற்ற ஐயா அவர்களை வாழ்த்துவோடு ஐயா அவர்களின் சமய சமூக பணிகள் மேன்மேலும் தொடரவும் இது போன்ற இன்னும் பல விருதுகளைப்பெறவும் எல்லாம் வல்ல அன்னை வீர மாகாளியையும் கெருடையாம் பதி தொட்டிடல் கந்தசுவாமியாரையும் வேண்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துபவர்கள்: சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக்குருக்கள் - முத்துச்சாமி குருக்கள் குடும்பத்தினர்கள்.
பிரதம குருவும் ஆதீன கர்த்தாவும் கெருடையாம்பதி தொட்டில் கந்தசுவாமியார் ஆலயம்
கெருடாவில் தொண்டைமானாறு

### தவறிவிட்டது
வை. சுதாகரன் ஆகிய எனது சாரதி அனுமதிப் பத்திரம், வாகனத்துக்கான இன்சூரன்ஸ், ரக்ஸ் ஆகியன உசன்-கொடிகாமம்- நெல்லியடி- யாழ்ப் பாணம்-சித்தங்கேணி ஆகிய பிரதேசங்களுக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தந்துதவவும். தொடர்பு:- 077 6441615

### நளின் வாடிக்கையாளர் கவனத்திற்கு
தங்களால் திருத்துவதற்கு வழங்கப்பட்டு 2மாதங்களிற்கு மேலாக மீளப்பெறாத கீழ்வரும் குறிப்பு இலக்கமுடைய (Job No) பொருட்களை தயவுசெய்து எதிர்வரும் 5ம் திகதிக்கு முன்னர் மீளப்பெற்றுக்கொள்ளவும் பொறுப்பேற்க தவறும் பட்சத்தில் கீழ் குறிப்பிட்ட பொருட்களுக்கு நளின் நிர்வாகம் பொறுப்பேற்காது.

| pc | | | PRINTER | LAPTOP |
|---|---|---|---|---|
| 1362 | 1681 | 4779 | 1720 | 1541 |
| 1471 | 2012 | 4987 | 1169 | 1742 |
| 1629 | 4179 | | 4328 | 1963 |
| 1644 | 4265 | | 1161 | 5063 |

வடக்கின் முன்னணிக் கணனி வலையமைப்பு
NALIN Information Technologies (Pvt)Ltd
195/4 Parameswara junction Palaly road,Jaffna.
0212221166, 0777667975
facebook/nalinit.


## அழியும் மிருகங்கள் இலங்கையில் அதிகம்

அழிந்து போகும், அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ள மிருக இனங்கள் அதிகமுள்ள நாடுகளிடையே இலங்கை பத்தாவது இடத்துக்கு வந்துள்ளது.
இதற்கு முன்னர் இந்தப் பட்டியலில் இலங்கை 16 ஆவது இடத்திலேயே இருந்துள்ளது.
இந்தத் தகவல் சர்வதேச சிவப்புத் தரவுகள் புத்தகத்தில் வெளியிடப்படும்.
இந்த பட்டியல் சம்பந்தப்பட்ட அறிக்கை கடந்த ஒக்ரோபர் மாதத்தில் வெளியிடப்பட் டது.
இலங்கையில் அழிவுற்றுவரும் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ள மிருக இனங்களின் எண் ணிக்கை 546 ஆகும். இப்பட்டி யலில் உச்சத்தில் இருப்பது ஈக்குவடோர் நாடேயாகும்.
இங்கு அழிவுற்று வரும் அச்சு றுத்தலுக்கு முகம் கொடுத்துள்ள மிருக இனங்களின் எண் ணிக்கை 2,211 ஆகும்.
இந்தப் பட்டியலின் இரண்டாம் இடத்தில் ஐக்கிய அமெரிக்கன் குடியரசு குறிப்பிடப்பட்டுள்ளதோடு அந்த நாட்டில் அழிவுற்றுவரும் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ள மிருக இனாங் களின் எண்ணிக்கை 1,203 ஆகும். (ச-22)

## நிந்தவூர் சம்பவத்தின் பின்னணியில் மு.கா

கிழக்கு மாகாணத்தில் விசேட அதிரடிப் படையினருக்கு எதிரான முஸ்லிம்களின் நடவடிக்கைகளின் பின்னணியில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இருக்கிறது என்று ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச் சாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
நிந்தவூர் பிரதேசத்தில் மக்க ளுக்கும் அதிரடிப் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலை உருவாக்கியதன் பின்னணியில் ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் கட்சி இருந் துள்ளது. 36 மணி நேரம் வீதிகளை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு தலைமை தாங்கியவர்கள் மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
கல்முனை, அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மாந்துறை உள்ள டங்கலாக கிழக்கு மாகாணம் முழுவதிலும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரைப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தி உள்ளமைக்கு எதிராக முஸ் லிம் காங்கிரஸும் அதன் தலை மையும் கடந்த காலங்களில் செயற்பட்டு வந்துள்ளது.
கிழக்கு மாகாணத்தில் நடை பெறும் சட்டவிரோத நடவடிக் கைகள் மற்றும் வர்த்தகங்க ளுக்கு எதிராக அதிரடிப் படை யினர் தொடர்ந்தும் சட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றனர்.
இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத சட்டவிரோத வியா பாரிகளும் பிரதேச அரசியல் வாதிகளும் பின்னணியில் இருந்தே நிந்தவூர் மோதலை ஏற்படுத்தியுள்ளனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-10)


### வீடு வாடகைக்கு
கிளிநொச்சி நகரில் திருநகர் பகுதியில் கிருஷ்ணன் கோயில் பின்புறமாக சகல வித வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு : 077 0230343

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மாகாண சபையின்

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் நாள் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

போர் முடிந்து நான்கு வருடங்கள் முடிந்துவிட்ட நிலையிலும்கூட இந்த வரவு - செலவுத்திட்டமென்பது பாதுகாப்புத்துறைக்கு அல்லது முப்படைகளுக்கும் முன்னுரிமை கொடுத்து தயாரிக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டமாகவே உள்ளது. கடந்த வருடம் 244 பில்லியனாகவிருந்த பாதுகாப்புத்துறைக்கான ஒதுக்கீடானது 4.9 பில்லியன் அதிகரிக்கப்பட்டு 253.4 பில்லியனாக உயர்ந்துள்ளது. இது 2014 ஆம் ஆண்டுக்கான 1542 பில்லியனில் ஏறத்தாழ 16.5 வீதமாகும்.

**போரால் பாதிக்கப்பட்டோருக்கு பட்ஜெட்டில் ஒதுக்கீடு இல்லை**

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் போரால் பாதிக்கப்பட்ட மாகாணங்கள். இங்கு லட்சக்கணக்கில் வீடுகள் உடைக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். 90 ஆயிரம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். 12ஆயிரம் குழந்தைகள் பெற்றோரை இழந்துள்ளனர். கால் இல்லாமல், கை இல்லாமல், கண் இல்லாமல், நடமாட முடியாமல் ஊனமுற்றோர் பல ஆயிரம் பேர் இருக்கிறார்கள். கடந்த 4 வருட வரவு - செலவுத் திட்டத்தில் இவற்றுக்கு நிதி ஒதுக்கப்பட்டதா என்றால் இல்லை என்பதே அதற்கான பதில்.

**ஜெயபாலன் கைதும் நல்லிணக்க இலட்சணமும்**

இரு நாள்களுக்கு முன்பு ஈழத்தின் புகழ்பெற்ற கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலன் மாங்குளத்தில் அமைந்திருக்கும் தனது தாயாரின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தச் சென்றிருந்தார். ஆனால் அவரைப் பின்தொடர்ந்த புலனாய்வுப் பிரிவினர் சுற்றுலா விசாவில் வந்தவர் வேறு கடமைகளில் ஈடுபட்டார் என்ற காரணத்தைக் கூறி அவரைக் கைது செய்துள்ளனனர். இந்த இலட்சணத்தில்தான் தமிழ், சிங்கள மக்களுக்கிடையிலான புரிந்துணர்வைப்பற்றி ஜனாதிபதியும் அமைச்சர்களும் கர்ச்சிக்கின்றனர். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரத்தியேகமான திட்டங்கள் உருவாக்கி அவர்களையும் கையுயர்த்தி விடுவதற்கான எந்தத் திட்டமும் இல்லாத அரசு மாறாகத் தமிழ் மக்களையும், தமிழ் மண்ணையும் முழுமையாகக் கொள்ளையடிப்ப தையே தமது நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

**தங்கக் கொள்ளையில் மக்கள் வங்கி?**

அரச வங்கியான மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைப்பது வழமை. மக்களும் அவ்வங்கிமேல் கொண்ட நம்பிக்கை காரணமாகப் பலநூறு பவுண் தங்கத்தை கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம் வங்கிக் கிளைகளில் அடகு வைத்து பணத்தைப் பெற்றனர். ஆனால் பெரும்பாலான மக்கள் போரால் தமது உடைமைகளை இழந்துபோனதால் இவற்றுக்கான பற்றுச்சீட்டுகளையும் இழந்துவிட்டனர். இதனால் தமது நகைகளை மீட்க முடியாமல் உள்ளனர். இந்த நகை உரிமையாளரின் பெயர்ப்பட்டியல் மற்றும் விவரங்கள் வங்கிவசம் இருந்தும்கூட கடந்த 4 வருடங்களாக அந்த மக்களின் நகைகளை மீள ஒப்படைக்க வங்கி எந்தவித நடவடிக்கையும் எடுக்காதது வருத்தத்துக்குரியது. வங்கியானது நகைகளை அடகுவைத்தோரின் பெயர் விவரங்களைப் பத்திரிகை வாயிலாக வெளியிட வேண்டும். அவர்களது பெயர் விவரங்களை உறுதிப்படுத்திக் கொண்டு அவர்களின் நகைகளை ஒப்படைக்க முன் வர வேண்டும். இல் லையேல் மக்கள் வங்கியும் போரைச் சாதகமாகப் பாவித்து தமிழ் மக்களின் தங்கத்தைக் கொள்ளையடித்த வங்கியாகவே கருதப்படும்.

**வடக்கு ஆளுநர் மாற்றம் தேவை**

வடக்கில் மாகாண சபைத் தேர்தல் நடைபெற்று அங்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியையும் அமைத்துள்ளது. ஆனால், அங்குள்ள ஆளுநர் மாற்றப்படவேண்டும், தலைமைச் செயலாளர் மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தும்கூட இன்னும் இவர்கள் மாற்றப்படவில்லை. ஆளும் கட்சியின் கொள்கை விளக்க உரையை வாசிக்க மறுத்த வடமாகாண ஆளுநர் தனது கொள்கை விளக்க உரையை வாசித்துவிட்டுச் சென்றுள்ளார்.

பதின்மூன்றாவது திருத்தத்தின் பிரகாரம் மத்திய அரசுக்கு என்ன அதிகாரங்கள், மாகாணங்களுக்கு என்ன அதிகாரங்கள் என்பதைத் திட்டவட்டமாகத் தீர்மானிக்கும் தேவை அரசுக்கு தற்போது ஏற்பட்டுள்ளது. அதிகாரம் ஆளுநருக்கா? அல்லது முதலமைச்சருக்கும் அமைச்சரவைக்குமா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. மாகாண அதிகாரிகள் மாத்திரமல்லாமல் மத்திய அரசுக்கும் மாகாணத்திற்கும் பணிபுரியும் அதிகாரிகள் மாகாண சபையின் கட்டளைகளை நிறைவேற்றுவார்களா? இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய தருணமிது.

**தமிழருக்கு நீதி வழங்க நீதித்துறை முன்வருமா?**

அரசியல் சாசனத்தில் உள்ள அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கு கிடைக்குமா, இல்லையா என்பதையும் தீர்மானிக்க வேண்டிய நேரமிது. நீதித் துறை சுதந்திரமாகச் செயற்பட்டு தமிழ் மக்களுக்குரித்தான நீதியை நிலைநாட் டப் போகின்றதா? அல்லது அரசின் கைப்பொம்மையாகச் செயற்பட்டு அரசியல் சாசனத்தையே புதைக்கப் போகின்றதா என்பதையும் அறியும் நேரமிது.

**இலங்கை-இந்திய ஒப்பந்தமும் தமிழர்களின் அபிவிருத்தியும்**

மக்கள் தங்களது அரசியல் சமூக பொருளாதார அபிவிருத்திகளைத் தாங்களே செய்ய வேண்டும் என்பதற்காகவும் குறிப்பாகத் தமிழ் மக்கள் தங்கள் அபிவிருத்திப் பணிகளைத் தாங்களே முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காகவுமே இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினூடாக மாகாண சபைகள் என்ற ஒரு பொறிமுறை உருவாக்கப்பட்டது. ஆனால் அதிகாரங்கள் அற்ற இச்சபையானது அபிவிருத்திக்கு அரசிடமிருந்தே எதிர்பார்த்துக்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலையில் உள்ளது. தமக்குத் தேவையான நிதி ஆதாரங்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் வரிவிலக்கவும், முதலீக ளைக் கொண்டுவரவும் அதிகாரங்கள் இருக்கும் பட்சத்திலேயே மாகாண சபைகள் தமது சொந்தக் காலில் நிற்க முடியும். எனவே, அவ்வாறான அதிகாரங்களோ அல்லது காணி, சட்டம், ஒழுங்கைப் பராமரித்தல் போன்ற அதிகாரங்களோ இல்லாத பட்சத்தில் மாகாண சபையின் நடவடிக்கைகள் என்பது மந்தமாகவே இருக்கும்.

**அதிகாரங்கள் பிச்சையல்ல**

மாகாணசபைக்கு கொடுக்கும் அதிகாரங்கள் என்பது ஜனாதிபதி தமிழ் மக்களைப் பாவம் பார்த்துப் போடும் பிச்சையல்ல. அரசியல் சாசனத்தில் உள்ளவற்றை நிறைவேற்றும்படியே நாம் கோருகின்றோம். இதனை அரசு ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத் துமேயானால் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். இல்லாத பட்சத்தில் இலங்கை அரசு பிரசாரப் படுத்தும் நல்லிணக்கம் என்பதெல்லாம் போலிச் சொற்றொடராகவே இருக்கும்" என்றார். (த-சி)

### மாகாண சபையுடன்

அமைச்சர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் ஆளணி மீளாய்வுக் கூட்டம் நேற்று ஆளுநர் தலைமையில் நடைபெற்றுள்ளது. இதற்கு முதலமைச்சரோ, அமைச் சர்களோ அழைக்கப்படவில்லை. மாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமிரமேஸ், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் இந் தக் கூட்டத்துக்கு அழைக்கப் பட்டிருந்தனர். மாகாண சபையின் ஆளணியை மீளாய்வு செய்யும் முக்கிய பொறுப்பு முதலமைச்சருக்கே உள்ளபோதும் அவரை அழைக்காமல் ஆளுநர் இந்தக் கூட்டத்தை தன்னிச்சையாக நடத்தினார். இதன் மூலம் ஆளுநருக்கும் மாகாண சபைக்கும் இடையே இருந்துவந்த பனிப்போர் நேற்று வெளிப்படையாக வெடித்தது.

அத்துடன் வடக்கு மாகாண சபையின் அமைச்சருக்குத் தெரியாமலேயே அந்த அமைச்சின் செயலாளர் வடக்கு மாகாண ஆளுநரால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனின் செயலாளரே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அமைச்சர் டெனீஸ்வரனின் செயலாளராக முன்னர் ராஜேந்திரா நியமிக்கப்பட்டிருந்தார். இதன்பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அமைச்சரின் செயலாளராகத் திருவாகரனை நியமித்தார்.

இந்த நிலையில் நேற்றுத் திங்கட்கிழமை மாலை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஆளுநரினால் திருவாகரன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தற்போது அமைச்சர் டெனீஸ்வரனின் செயலாளராக, முதலமைச்சரின் செயலாளராக முன்பு கடமையாற்றிய ஆர்.வரதீஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ள அதே வேளை முதலமைச்சரின் செயலாளராக திருவாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை அமைச்சின் செயலாளர் மாற்றம் தொடர்பில் தன்னுடன் ஆளுநர் கலந்துரையாடவில்லை என்றும், தன்னிச்சையாக முடிவெடுத்தே அவர் இந்த இடமாற்றத்தை மேற்கொண்டுள்ளார் என்றும் அமைச்சர் டெனீஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆளுநரின் இந்த தன்னிச்சையான செயற்பாடுகள் வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளை குழப்பியடிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் தொடர்ந்தும் அவர் தனது சர்வாதிகார ஆட்சிக்குள் மாகாண சபையை வைத்திருக்க முயற்சிப்பதாகவும் மாகாண அமைச்சர்கள் குற்றம்சாட்டி உள்ளனர். (த-5)

### யாழ்.நீதிமன்றில்

யாழ். வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயில் தேர்முட்டிப்படியில் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்பது தெரியவந்த நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அது தொடர்பான வழக்கு நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதை அடுத்து இந்தத் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாலியல் பலாத்கார குற்றவாளிக்கு தகுந்த தண்டனை வழங்கும்படி நீதிகோருகிறோம். "சட்ட அமுலாக்கம் எங்கே?" அதனை உறுதிப்படுத்துபவர்கள் எங்கே?", நாம் ஒவ்வொருவரும் சமூக பொறுப்புடையவர்களாகச் செயற்படுகிறோமா? போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் - லோகராணி புத்தூரில் சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் படங்கள் பொறிக்கப்பட்டு "எமது மரணமே இறுதியானதாகட்டும்" என்று எழுதப்பட்ட பதாகையையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

அரியாலை, நெடுங்குளம் வீதியைச் சேர்ந்த மார்க்கண்டு லோகராணி (வயது -45) என்பவரே நாச்சிமார் கோயிலடியில் கடந்த ஒக்ரோபர் 17 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார். வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்டுள்ளமை பரிசோதனையில் தெரியவந்த நிலையில் கொக்குவிலைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரது இரத்த மாதிரியும் மரபணுப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. வழக்கு எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஓ-4-21)

### சீருடையினர்

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள நாமகள் சனசமூக நிலையத்தில் குறித்த நான்கு இளைஞர்களும் தமது வேலை முடிந்த பின்னர் கதைத்துக் கொண்டிருந்துள்ளனர். இதன்போது அந்தப் பகுதியால் ரோந்து வந்த சீருடையினர், சனசமூக நிலையத்துக்கு அருகில் வீதியில் நடப்பட்டிருந்த ஜனாதிபதியின் உருவப் படம் பொறித்த பதாகை கிழிக்கப்பட்டிருந்ததைக் கண்டு, குறித்த இளைஞர்கள் தான் அவற்றைச் சேதமாக்கினர் எனக் கூறி மோசமாகத் தாக்கியுள்ளனர்.

குறித்த இளைஞர்கள் தாம் அதனைக் கிழிக்கவில்லை எனவும், அது ஏற்னனவே கிழிக்கப்பட்டிருந்தது எனவும் கூறிய போதும் சீருடையினர் அவர்களை மூர்க்கத்தனமாக தாக்கியுள்ளனர். இதன் போது அங்கு கூடிய பொது மக்களையும் சீருடையினர் விரட்டியுள்ளனர்.

அத்துடன் அந்தப் பகுதிக்கு வந்த உயர் பாதுகாப்பு வலயத்துக்குப் பொறுப்பான சீருடையினரின் அதிகாரியும், தாக்குதலை நியாயப்படுத்திப் பேசியதுடன், அங்கு நின்ற மக்கள் பிரதிநிதிகளையும் அவமரியாதை செய்துள்ளார்.

அதன் பின்னர் நான்கு இளைஞர்களையும் சீருடையினர் பொலிஸாரிடம் கையளித்துள்ளார். பொலிஸார் தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கூட்டிச்சென்று மருந்துகளைப் பெற்ற பின்னர் அவர்களைத் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். (த-5-86)

### பெரும்பான்மை

கோயிலடியிலிருந்து சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில் அந்தப் பகுதியில் உள்ள காடுகம் அழிக்கப்பட்டு சிங்கள மக்களைக் குடியேற்றும் நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது அழிக்கப்பட்டுள்ள காட்டின் ஒரு பகுதியில் இரண்டு மண் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் காட்டைத் துப்புரவாக்கும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள சிங்களவர்களே தற்போது தங்கியுள்ளனர்.

இந்தக் காடுகளை அழித்து மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக 22 சிங்களவர்களுக்குத் தலா 25 ஏக்கர் காணி வீதம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. தமிழ் மக்களுக்கு சொந்தமான வயல் நிலங்கள் ஏற்கனவே சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், தமிழ் மக்களின் எஞ்சிய நிலப்பரப்புக்களும் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன -என்றார். (த-5)

### ஊடக

அரசு அறிவித்துள்ளது. அவ்வாறு நினைவு கூருவது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும் என்று கூறப்பட்டுள்ளது.

"ஊடக சுதந்திரம் என்ற பெயரில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தமிழீழ விடுதலைப் புலிகளின் புகழ் பாடுதல் போற்றுதல் சட்ட விரோதமானது.

யாராவது அவ்வாறு நடந்து கொண்டால் அவர்களுக்கு எதிராகக் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்" என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹூலுகல்ல தெரிவித்துள்ளார்.

### புலம்பெயர்

டித்துறையில் பிறந்தார் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாயக நிலப்பரப்பில் பிரபாகரனின் பிறந்தநாள் நிகழ்வுகள் கொண்டாடப்பட்டு வந்தன. 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புலம்பெயர் தேசங்களில் உள்ள தமிழ் மக்கள் பிரபாகரனின் பிறந்தநாளைக் கொண்டாடி வருகின்றனர்.

சுவிஸ், பிரான்ஸ், கனடா, பிரிட்டன், நோர்வே, டென்மார்க், ஜேர்மனி என்று ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்த தேசங்கள் முழுவதும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் பிரபாகரனின் 59 ஆவது பிறந்தநாள் நிகழ்வுகள் கொண்டாடப்படுகின்றன. (த-சி)

### மலர்ந்தது

கார்த்திகைப் பூக்கள் மலர்ந்து அனைவரையும் கவர்ந்துள்ளன; ஈர்த்துள்ளன.

கார்த்திகைப் பிறையைக் கண்டவர்கள் போன்று கார்த்திகைப் பூவைக் கண்ணுற்றவர்களும் தம் வாழ்வில் வசந்தம் வீசப்போகிறது என்ற நம்பிக்கையுடன் மகிழ்ச்சியில் திளைத்து நிற்கின்றனர். (ஓ-86)

### இந்திய

திகதி கைது செய்யப்பட்டிருந்தனர்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்கள் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது சட்டமா அதிபர் திணைக்களம் வழங்கிய ஆலோசனைக்கு அமைய அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். (த-4)

### செங்கோல்

சபைக்கு முதன்முறையாக கடந்த செப்ரெம்பர் மாதம் தேர்தல் இடம்பெற்றது.

இதில் வெற்றிபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. சபையின் கன்னி அமர்வில் பேரவைச் செயலாளரால், வடக்கு மாகாண சபைக்குரிய செங்கோலை அமைக்குமாறும் தவிசாளருக்குரிய ஆடையைத்தயாரிக்குமாறும் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் முதலாவது அமர்வு இந்த மாதம் 11 ஆம் திகதி இடம்பெற்ற போதும் சபைக்கு செங்கோல் கொண்டு வரப்படவில்லை . சுத்தியல் மாத்திரமே கொண்டுவரப்பட்டது.

வடக்கு மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுப்பெடுத்து இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் சபைக்குரிய செங்கோல் இன்னமும் அமைக்கப்படவில்லை. (ஓ-5)

## செவ்வானம் வி.கவை வென்று சம்பியனானது லெவன் ஸ்ரார்

யாழ்ப்பாணம், நவ.26

இலங்கை மென்பந்து கிரிக்கெட் சங்கத்தினால் வவுனியா மாவட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில்லெவன்ஸ்ரார்விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம் பியன் ஆனது.

கடந்த சனிக்கிழமைவவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளை யாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் செவ்வானம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லெவன் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய செவ்வானம் விளையாட்டுக் கழக அணி 14 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ரமணன் 14 ஓட்டங்களையும் சிவானந்தன் 6 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் லெவன் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பில் ஜனா 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 12 ஓட்டங்களுக்கு 6 இலக்கினையும் நிதர்ஷன் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும் கிருபா 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 8 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும் வீழ்த்தினார்கள்.

52 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய லெவன் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 8.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்கினைஇழந்துவெற்றிஇலக்கை அடைந்தது.

இதில் ஜனா ஆட்டம் இழக்காமல் 20 ஓட்டங்களையும் நிதர்சன் ஆட்டம் இழக்காமல் 14 ஓட்டங்களையும் கிருபா 8 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் லெவன் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பில் சுரேன் ஒரு பந்துப் பரிமாற்றம் பந்து வீசி 4 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கினையும் சிவானந்தன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

(த-23)

## பள்ளிமுனை லூசியா சம்பியன்



மன்னார், நவ.26

மன்னார் உதைபந்தாட்ட லீக் வடக்கு- கிழக்கு மாகாண அணிகளுக்கு இடையே நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பள்ளிமுனை சென்.லூசியா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் நகர சபை மைதானத்தில் இறுதிப்போட்டி ஆரம்பமானது.

இறுதியாட்டத்தில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளிமுனை சென்.லூசியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பனங்கட்டிக் கொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியின் ஆதரவாளர்கள் மற்றும் ரசிகர்களின் ஆரவாரத்தின் மத்தியில் இறுதியாட்டம் மாலை 3 மணிக்கு ஆரம்பமானது.

முன்பாதி ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோல்களை பெற வேண்டி எதிர் அணி கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.

கோல்பெறும் சந்தர்ப்பங்களை இரு அணியினரின் பின் கள வீரர்களின் சிறப்பான ஆட்டத்தினால் தடுக்கப்பட்டது.

இரு அணியினரும் எப்படியாவது தமது அணிக்கான கோலைப் பெறுவதற்காக பல்வேறு வியூகங்களைக் கையாண்ட போதும் எதுவித கோல் களையும் பெறமுடியவில்லை. இதனால் முதல்பாதி ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரு அணியினரும் இரண்டாம் பாதி ஆட்டத்திலாவது தமது அணிக்கான கோல்களை பெற்றிட வேண்டி தமது ஆட்ட வியூகங்களில் மாற்றங்களை மேற்கொண்டு விளையாடினர்.

இரண்டாம்பாதி ஆட்டத்திலும் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாமையால் இரண்டாம் பாதி ஆட்டமும் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் பள்ளிமுனை சென்.லூசியா விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

இறுதியாட்டத்தில் ஆட்ட நாயகனாக பள்ளிமுனை சென்.லூசியா விளையர்ட்டுக்கழக அணி வீரன் டொனால்ட் தெரிவானார். ஆட்டத் தொடர் நாயகனாக சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி வீரன் றோன்சன் தெரிவானார்.

சிறந்த கோல்காப்பாளராக பள்ளிமுனை சென்.லூசியா விளையாட்டுக்கழக அணி வீரன் பரா தெரிவானார்.

சிறந்த பின்கள வீரராக சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணி வீரன் டியூஸ் லஸ் தெரிவானார். சிறந்த மத்திய கள வீரனாக பள்ளிமுனை சென்.லூசியா விளையாட்டுக்கழக அணிவீரன் எடிசன் தெரிவானார். சிறந்த முன்கள வீரராக பள்ளிமுனை சென்.லூசியா விளையாட்டுக்கழக அணி வீரன் வூலி தெரிவானார்.

சிறந்த அணியாக மயிலங்காடு ஞானமுருகன் அணி தெரிவாகியது. சிறந்த அணி முகாமையாளராக மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகத்தின் முகாமையாளர் றதீஸ், தோட்டவெளி ஜோசவ்வாஸ் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் முகாமையாளர் கோல்டன் ஜெனி ஆகியோர் தெரிவானார்கள்.

இறுதியாட்டத்துக்குப் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சிறப்பு விருந்தினராக மன்னார் நகர சபை முதல்வர் எஸ்.ஞானபிரகாசம், கௌரவ விருந்தினர்களாக போட்டி அனுசரணையாளர்களான பிறேமா ராதிகா, மன்னார் கோட்டக் கல்வி அதிகாரி கிறிஸ்ரி, சென்.ஜோசப் விளையாட்டுக்கழக போசகர் செல்வம் சுதாகரன், நானாட்டான் பிரதேச சபை தலைவர் அன்புராஜ் லம்பேட் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-23)

## சதுரங்கத்தில் வென்ற அணிகள்

யாழ்ப்பாணம், நவ.26

வடமாகாண அமைச்சுக்களுக்கு இடையிலான 2013 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவில் ஓர் அங்க மான சதுரங்க குழுநிலைப் போட்டியில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வரு மாறு:

சுகாதார அமைச்சு அணி முதலாமிடம் (20 புள்ளிகள்), கல்வி அமைச்சு அணி இரண்டாம் இடம் (19.5 புள்ளிகள்), உள்ளூராட்சி அமைச்சு அணி மூன்றா மிடம் (18.5 புள்ளிகள்). (த-23)

## இன்றைய ஆட்டம்

யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடத்தும் தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தொடரில் இன்று செவ்வாய்க் கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்

பி.ப.3.30 அண்ணா ஸ்ரார் வி.க. எதிர் சென்.மைக்கல் வி.க.

பி.ப.4.30 க்கு அரியாலை ஐக்கிய வி.க. எதிர் குருநகர் பாடும் வி.க.

## வடக்கின் சாதனையாளர்களுக்கு 'வர்ண இரவு' நிகழ்வில் கௌரவம்

வலி.வடக்கு, நவ.26

வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் நடத்தப்படும் 'வர்ண இரவு' நான்காவது ஆண்டு நிகழ்வுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ்ப்பாணம் கோப் பாய் கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரி.குருகுலராசாவின் அழைப்பின் பெயரில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

வட மாகாண பாடசாலைகளில் இருந்து தேசிய மட்டத்தில் கலந்துகொண்டு விளையாட்டுத்துறையில் சாதனைகள் படைத்தவர்கள், வெற்றிகளைப் பெற்றவர்கள் மற்றும் திறந்த விளையாட்டுப் போட்டி களில் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றவர்கள், மாகாண மட்ட சாதனையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளார்கள். (த-86-23)



நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நாவலப்பிட்டி ஜெயதிலக மைதானத்தில் இடம்பெற்ற விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான தேசிய மட்ட ஆண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற வடமாகாண விளையாட்டு உத்தியோகத்தர் அணி. (த-23)

## ஆட்டங்களில் வென்ற அணிகள்

யாழ்ப்பாணம், நவ.26

முல்லைத்தீவு இராணுவத்தின் 591 ஆவது படைப் பிரிவு நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இதுவரை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு:

இளம்தென்றல் விளையாட்டுக்கழக அணிக்கும் வளர்மதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இளம்தென்றல் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சந்திரன் விளையாட்டுக்கழக அணிக்கும் இளம்தென்றல் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைக் காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் சந்திரன் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

விக்னேஸ்வரா விளை யாட்டுக்கழக அணிக்கும் வளர்மதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணியினதும் ஆட்ட நேர முடிவில் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையா



னது.

வெற்றி தோல்வியைக் காண்பதற்காக 5 சமநிலைதவிரிப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

உதய சூரியன் விளையாட்டுக்கழக அணிக்கும் உடுப்புக் குளம் அலைஓசை விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உதய சூரியன் விளையாட்டுக்கழக அணி 13:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. யங்கர்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் சென். யூட் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென். யூட்ஸ் விளையாட்டுக் கழகம் 7:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(த-23)



# சாதனை படைத்த டோனி

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக அபா ரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய டோனி, ஒருநாள் போட்டியில் 50ஆவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.
இந்தியா- மேற்கிந்திய தீவுகள் மோதும் இரண் டாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடந்தது.
இதில் இந்திய அணியின் சொதப்பல் பந்துவீச் சால், 2 இலக்குகள் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவுகள் வெற்றி பெற்றது.
கடந்த 2007ஆம் ஆண்டில் இந்திய அணியின் அணித் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட டோனி, நேற்று முன்தினம் அணித்தலைவராக தனது 150ஆவது ஒருநாள் போட்டியில் களமிறங்கினார்.
இதன்மூலம் ஒருநாள் அரங்கில் 150 போட்டிகள் அல்லது அதற்கு மேல் அணித்தலைவராக செயல்பட்ட 7ஆவது சர்வதேச வீரர் மற்றும் 2ஆவது இந்திய வீரர் என்ற பெருமை பெற்றார்.
இதுவரை 150 ஒருநாள் போட்டிகளுக்கு அணித் தலைவராக இருந்த டோனி, 87 வெற்றி, 51 தோல்வியைப் பதிவு செய்தார். மூன்று போட்டிகள் சமநிலை ஆனது. ஒன்பது போட்டிகளுக்கு முடிவு இல்லை. (த)

## 20/20 உலகக் கிண்ணப் போட்டி: ஆப்கான், அயர்லாந்து தகுதி



20/20உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கு அயர்லாந்து, ஆப்கானிஸ்தான் அணிகள் தகுதி பெற்றுள்ளன.
கடந்த 2007ஆம் ஆண்டு 20/20 உலகக் கிண்ணப் போட்டிகள் அறிமுகம் செய்யப்பட்டன. தென்னாபிரிக்காவில் நடந்த இந்தப் போட்டியில் இந்தியா சம்பியன் பட்டம் வென்றது.
இந்நிலையில் 5ஆவது 20/20 உலகக் கிண்ணப் போட்டி, அடுத்த ஆண்டு பங்களா தேஷில் நடக்கிறது.
இந்தப் போட்டியில் மொத்தம் 16 அணிகள் பங்கேற்கின்றன. முதன்மை 10 அணிகளும், தகுதிசுற்று மூலம் 6 அணிகளும் இந்தப்போட்டியில் விளையாடும். இப்போட்டிக்கான தகுதி சுற்று ஆட்டங்கள் டுபாயில் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்று முன் தினம் நடந்த போட்டி முடிவில் அயர்லாந்து, ஆப்கானிஸ்தான் அணிகள் உலகக் கிண்ணப் போட்டிக்குத் தகுதி பெற்றன.
அயர்லாந்து அணி கொங்ஹொங்கை 85 ஓட்டங்களில் வீழ்த்தியது. இதன்மூலம் 6ஆவது வெற்றியை பெற்று அந்த அணி உலகக் கிண்ணப் போட்டிக்குத் தகுதி பெற்றது.
அயர்லாந்து ஏற்கனவே 2009, 2010, 2012 போட்டிக்குத் தகுதி பெற்று இருந்தது.
இதேபோல ஆப்கானிஸ்தான் அணி கென்யாவை 34 ஓட்டங்களில் வென்று 6ஆவது வெற்றியை பெற்று தகுதி பெற்றது. ஆப்கானிஸ்தான் 3ஆவது முறையாக உலகப் போட்டிக்கு நுழைந்துள்ளது, இன்னும் 4 நாடுகள் தகுதி பெற வேண்டியுள்ளது. (த)

# பனித்துளிகள் தான் தோல்விக்கு காரணம்



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான தொடரில் ஏற்பட்ட தோல் விக்கு பந்துவீச்சாளர்கள் காரணம் அல்ல என அணித்தலைவர் டோனி தெரிவித்துள்ளார். இந்தியா-மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதிய இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதில் முதலில் விளையாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்கு இழப்புக்கு 288 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, மூன்று பந்துகள் எஞ்சியிருந்த நிலையில் 8 இலக்கு இழப்புக்கு 289 ஓட்டங்கள் எடுத்து, 2 இலக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.
இதன்மூலம் முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு அந்த அணி இந்தியாவுக்கு பதிலடி கொடுத்தது.
இது குறித்து இந்திய அணியின் அணித்தலைவர் டோனி கூறுகையில், தோல்விக்குப் பனித்துளியே காரணம், பந்துவீச்சாளர்களைக் குற்றம் சாட்டமுடியாது. முன்னதாகவே பனிப்பொழிவு ஏற்படும் என்பதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இதனால் பந்துவீச்சாளர்கள் பந்தைப் பிடித்து நேர்த்தியாக வீசச் சிரமப்பட்டனர். இது ஆட்டத்தின் ஒரு பகுதியாகும், இதற்கெல்லாம் ஒன்றும் செய்ய இயலாது.
எங்களது பந்துவீச்சில் முதல் 5 பந்துப்பரிமாற்றங்கள் வரைதான் பந்து ஸ்விங் ஆனது. அதன்பிறகு துடுப்பாட்ட வீரர்களுக்கு ஓட்டங்களை எடுப்பதில் எந்த சிரமமும் ஏற்படவில்லை. மூன்றாவது மற்றும் கடைசி போட்டி பகல் ஆட்டமாக நடக்கிறது. இதனால் பனிப்பொழிவு பிரச்சினை இருக்காது என்று தெரிவித்துள்ளார். (த)




# மோசமான நிலையில் ஷேவாக்


உலகளவில் பந்துவீச்சாளர்களுக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கியவர் வீரேந்தர் ஷேவாக்.
டெஸ்ட் போட்டிகளில் கூட ஒருநாள் மற்றும் 20/20 போட்டிகளைப் போன்றே நான்குகளை வெளுத்துக் கட்டுவார்.
ஆனால் தற்போதோ ஒற்றை இலக்க ஓட்டங்களை எடுக்கச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்.
இதனால் இந்திய அணியில் இடமிழந்த ஷேவாக், அடுத்து தனது டெல்லி ரஞ்சி அணியிலிருந்தும் நீக்கப்படும் அபாயகரமான நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்.
நடப்பு ரஞ்சித் தொடரில் ஷேவாக் தொடர்ந்து சொதப்பலாக ஆடி வருகிறார். இதுவரை அவர் மொத்தம் 6 இன்னிங்ஸ்களில் ஆடியுள்ளார்.
இதில் ஒரு முறை கூட அவர் அரைச் சதம் போடவில்லை. மாறாக 1, 15, 9, 35, 3, 6 என்று சொதப்பலாகவே ஆடியுள்ளார்.
ஷேவாக்கின் திணறல் குறித்து டெல்லி அணியின் தலைமைத் தேர்வார் சேட்டன் சவுகான் கூறுகையில், ஷேவாக்கிடம் தற்போது நம்பிக்கை இல்லை என்பதே அவரது தடுமாற்றத்துக்கு காரணம்.
அவர் ஒரே ஒரு நல்ல பெறுபேற்றை எடுத்து விட்டால் போதும், பழைய நிலைக்குத் திரும்பி விடுவார் என்று தெரிவித்துள்ளார்.
அவர் மோசமான நிலையிலிருந்து படுமோசமான நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறார் என்றும், ஆட்டத்திலும் சரி, அவரது நுணுக்கங்களிலும் சரி எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை என்பதே கிரிக்கெட் வல்லுநர்களின் கருத்தாக உள்ளது. (த)

# டோனியை மிஞ்சிய கார்ல்சன்

உலக சதுரங்கச் சம்பியன் பட்டம் வென்ற கார்ல்சன், இந்திய அணியின் அணித் தலைவர் டோனியை மிஞ்சியுள்ளார்.
சென்னையில் உலக சதுரங்கச் சம்பியன்ஷிப் போட்டி நடந்தது. இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த்(வயது 43), நோர்வேயின் மாக்னஸ் கார்ல்சனிடம்(வயது 22) வீழ்ந்தார்.
சம்பியன் பட்டம் வென்ற கார்ல்சனுக்கு 25 கோடி ரூபா பரிசுத் தொகை வழங்கப்படுகிறது, ஆனந்துக்கு 16 கோடி ரூபா வழங்கப்படும்.
இவர்களுக்குக் கிடைக்கும் பரிசுத் தொகையை வைத்து கணக்கு பார்த்தால், கார்ல்சனின் ஒரு நகர்த்தலுக்கு 6 லட்சம் ரூபா வரை கிடைத்தது. ஆனந்தைப் பொறுத்தவரையில் 3 லட்சம் ரூபா வரை பெறுகிறார்.
கடந்த 2008ஆம் ஆண்டில் சென்னை அணிக்காக பங்கேற்ற டோனி அதிகபட்சமாக 18 கோடி ரூபாவுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டார்.
44 நாள்கள் நடந்த இந்தத் தொடரில், 14 போட்டிகளில் பங்கேற்ற இவர் 414 ஓட்டங்கள் எடுத்தார். இதன்படி டோனி எடுத்த ஒவ்வொரு ஓட்டத்தின் மதிப்பு அப்போது 4.5 லட்சம் ரூபா.
இப்போது கார்ல்சன், ஒரு நகர்த்தலுக்கு 6 லட்சம் ரூபா வாங்கி, டோனியை முந்தியுள்ளார்.
இந்த ஆண்டு மட்டும் கார்ல்சன் பல்வேறு சதுரங்கப் போட்டிகள் மூலம் 76 கோடி ரூபா சம்பாதித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)



# குவியும் பாராட்டு



கிரிக்கெட்டில் பல்வேறு உலக சாதனைகளை ஏற்படுத்தி இந்தியாவுக்கு பெருமை சேர்த்த சச்சின் டெண்டுல்கர், தனது 200 ஆவது டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெற்றார். அவரது சாதனைகளைக் கௌரவிக்கும் வகையில் அவருக்கு பாரத ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த அறிவியல் விஞ்ஞானி சி.என்.ஆர்.ராவுக்கும் இந்த உயரிய விருது வழங்கப்படுகிறது.

இந்நிலையில், கர்நாடக சட்டசபையின் குளிர்கால கூட்டத் தொடர் நேற்று தொடங்கியது. அப்போது பாரத ரத்னா விருது பெற உள்ள சச்சின் மற்றும் சி.என்.ஆர். ராவ் ஆகியோருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

அப்போது சச்சினை பாராட்டி முதல்வர் சித்தராமையா பேசியதாவது:-

கிரிக்கெட் என்றால் டெண்டுல்கர், டெண்டுல்கர் என்றால் கிரிக்கெட். அவர் 51 டெஸ்ட் சதங்களும், 49 ஒருநாள் சதங்களும் அடித்து ஒப்பற்ற சாதனை படைத்துள்ளார். அவர் ஓய்வு பெற்றுவிட்டதால் கிரிக்கெட்டில் ஓர் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. நான் கிரிக்கெட் விளையாடியது இல்லை. எனினும், டெண்டுல்கர் எப்போதெல்லாம் ஆடுவாரோ அப்போதெல்லாம் நான் விரும்பி பார்ப்பேன்.

சி.என்.ஆர்.ராவ் பாரத ரத்னா விருதுக்கு மிகவும் பொருத்தமானவர். அவருக்கு இந்த விருதை வழங்குவதன்மூலம் நாட்டிற்கு குறிப்பாக கர்நாடக மாநிலத்திற்கு பெருமை சேர்த்திருக்கிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

முன்னாள் முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர், கர்நாடக ஜனதா கட்சி தலைவர் எடியூரப்பா, குமாரசாமி ஆகியோரும் பாரத ரத்னா நாயகர்களை பாராட்டி பேசினர். (த-400)

# 150 போட்டிகளில் தலைவராக டோனி



சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் 150 போட்டிகளில் அணித் தலைவராக பணியாற்றிய முதல் விக்கெட் காப்பாளர் என்ற சாதனையை டோனி படைத்துள்ளார். ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் நேற்று முன்தினம் நடந்த ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் விளையாடியதன் மூலம் இந்த இலக்கை அவர் எட்டியுள்ளார்.

இப் போட்டியின்போது 51 ஓட்டங்களைப் பெற்ற டோனி, போட்டியில் இந்தியா வெற்றி பெற்று தனது சாதனையை கொண்டாட வேண்டும் என்று விரும்பினார். ஆனால், பரபரப்பான கடைசி நேரத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றி பெற்றதால் டோனியின் உற்சாகம் குறைந்துவிட்டது.

இதேபோல் அனைத்து ஐ.சி.சி. தொடர்களிலும் வெற்றி பெற்ற, அதாவது 20பந்து பரிமாற்றத்தில் உலக கிண்ணம், ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணம்மற்றும் சம்பியன்ஸ் கிண்ணம் ஆகியவற்றை வென்ற ஒரே அணித் தலைவர் என்ற பெருமையையும் டோனி பெற்றுள்ளார்.

அணித்தலைவர் பொறுப்பில் இந்திய அணிக்காக அதிக போட்டிகளில் விளையாடிய வீரர்களில் தற்போது அசாருதீன் முதலிடத்தில் உள்ளார். அவர் 174 போட்டிகளில் இந்திய அணியை வழிநடத்தியிருக்கிறார். இதே போல் அதிக வெற்றிகளை பெற்ற அணித் தலைவர்கள் வரிசையிலும் அசாருதீன் (90 வெற்றி) முதலிடத்தில் இருக்கிறார். அவருக்கு அடுத்த இடத்தில் டோனி (87 வெற்றி, 51 தோல்வி) இருக்கிறார். 147 போட்டிகளில் தலைவராக இருந்த கங்குலி, 66 போட்டிகளில் வெற்றி பெற்றிருக்கிறார். சர்வதேச அளவில் ஒருநாள் போட்டிகளில் அதிக போட்டிகளில் அணித்தலைவராக இருந்தவர் ரிக்கி பொண்டிங் தான். இவர் 230 போட்டிகளில் ஆஸ்திரேலிய அணியின் தலைவராக இருந்தது குறிப்பிடத்தக்கது. (த-400)

# தென்னாபிரிக்காவை பந்தாடியது பாகிஸ்தான்



பாகிஸ்தான் தென்னாபிரிக்கா அணிகள் இடையிலான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான்23 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இரு அணிகளுக்கும் இடையிலான 3 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகள் தென்னாபிரிக்காவில் இடம்பெற்று வருகிறன. அதன் முதலாவது போட்டி நேற்றுமுன்தினம் கேப்டவுனில் நடந்தது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 50 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 218 ஓட்டங்களைப்பெற்றது. ஒரு கட்டத்தில்131ஓட்டங்களுக்கு7 இலக்குகளை இழந்த பாகிஸ்தான் அணி அறிமுக வீரர்கள் பிலாவல் பாற்தி (39 ஓட்டங்கள்), அன்வர் அலி (43 ஓட்டங்கள்) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தாலேயே 200 ஓட்டங்களைக் கடக்க முடிந்தது. அவ்வணி சார்பாகப் பிலாவெல் பற்தி 38 ஓட்டங்களையும் சயிட் அவ்ரிடி 26 ஓட்டங்களையும் அன்ஷர் ஷாலீ 43ஓட்டங்களையும் அகமட் ஷகிம்35 ஓட்டங்களையும் நஷக் ஜம்ஷெட் 24 ஓட்டங்களையும் அதிகமாகப் பெற்றனர். தென்னாபிரிக்க பந்து வீச்சு சார்பாக ஸரெயன் மோர்னி மோர்கல் ஆகியோர் தலா 3 இலக்குகளையும் ஜக்கலீஸ் 2இலக்குகளையும் பிளின்டர் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து விளையாடிய தென்னாபிரிக்க அணி 48.1 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 195 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அவ்வணி சார்பாக காலிஸ் 50 ஓட்டங்களையும், டுமினி 49 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றதோடு வேறு யாரும் ஜொலிக்கவில்லை. இதன் மூலம் பாகிஸ்தான் 23ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பாகிஸ்தான் தரப்பில் பிலாவல் பாற்தி 3 இலக்குகளையும், அன்வர் அலி, சயீத் அஜ்மல் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக அன்வர் அலி தெரிவு செய்யப்பட்டார். 3 போட்டி கொண்ட இந்த தொடரில் பாகிஸ்தான் 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. 2ஆவது போட்டி போர்ட் எலிசபெத்தில் நாளை 27ஆம் திகதி நடக்கிறது. (400)

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான இந்தியா அணி அறிவிப்பு



இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து 3 ஒரு நாள் போட்டி மற் றும் 2 டெஸ்ட் போட்டிகளி விளையாடுகிறது.

இந்தியா-தென்னாபிரிக்கா இடையே டிசெம்பர் 5, 8, 11 ஆகிய திகதிகளில் ஒரு நாள் போட்டிகளும், டிசெ.18-22, டிசெ.26-30 ஆகிய திகதிகளில் டெஸ்ட் போட்டிகளும் நடைபெறுகின்றன.

இதற்கான இந்திய அணி வதோ தராவில் நேற்று தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டது. சந்தீப் பட்டீல் தலைமையிலான தேர்வு குழுவினர் தேர்வு செய்த டெஸ்ட் அணியில் சகீர்கான் இடம்பெற்றுள்ளார். அம்பதி ராயுடு அறிமுகம் ஆகியிருக்கிறார். சமீபத்தில் நடந்த ரஞ்சிக் கிண்ணப் போட்டியில் சதம் அடித்து தனது திறமையை நிரூபித்தபோதும், ஆரம்ப வீரர் காம்பிருக்கு இந்த தொடரில் வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

டெஸ்ட் தொடருக்கான 17 பேர் கொண்ட இந்திய அணி வருமாறு:-

டோனி (அணித்தலைவர்), முரளி விஜய், ஷிகர் தவான், சட்டீஸ்வர் புஜாரா, விராட் ஹோக்லி, ரோகித் சர்மா, அஜிங்கியா ரகானே, ஆர்.அஸ்வின், புவனேஸ்வர் குமார், உமேஷ் யாதவ், முகமது ஷமி, ரவீந்திர ஜடேஜா, சகீர் கான், அம்பதி ராயுடு, விர்திமான் சகா, இஷாந்த் சர்மா, பிரக்யான் ஓஜா.

ஒருநாள் தொடருக்கான அணி:-

டோனி (தலைவர்), ஷிகர் தவான், சுரே ஷ் ரெய்னா, விராட் கோலி, ரோகித் சர்மா, அஜிங்கியா ரகானே, யுவராஜ் சிங், ஆர்.அஸ்வின், புவனேஸ்வர் குமார், முகமது ஷமி, சகீர் கான், அம்பதி ராயுடு, உமேஷ் யாதவ், இஷாந்த் சர்மா, மோகித் சர்மா, ரவீந்திர ஜடேஜா, அமித் மிஸ்ரா. (400)

**Vacancy**

சங்கென் வடமாகாண கிளைக்கு வேலை செய்வதற்கு கட்டடம் கட்டும் துறையில் அனுபவமுள்ள பொறியியலாளர் தேவை.

சுயவிவரக்கோவை அனுப்ப வேண்டிய முகவரி:

ramesh.t@ sanken.lk

**வேலையாள்தள் தேவை**

சங்கென் கட்டடம் கட்டும் வேலைத் தளங்களுக்கு அலுமினியத்தில் கதவு, ஜன்னல் (Aluminium Fabricators) செய்யக்கூடியவர்கள் தேவை.

விவரங்களுக்கு:

யசோக்குமார் -071 864 3645

அருண் -071 453 0389

(C/14998)(4.6.3)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.11.2013இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.